www.gnanam.info
www.gnanam.lk

ஆகஸ்ட் 2019

ஞானம்

231

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை :
ரூபா 100/=

- பேராசிரியர் செ. யோகராசா
- பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
- பேராசிரியர் துரை மனோகரன்
- வ.ந.கிரிதரன்
- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
- வி.ஜீவகுமாரன்
- வே. தில்லைநாதன்
- எம்.எம். மன்ஸூர்
- மொழிவரதன்
- பூ.க. இராசரத்தினம்
- தாட்சாயணி
- செ.ஞானராசா
- சு. கருணாநிதி
- புலோலியூர் கு.சரவணன்
- நிலவூர்ச் சித்திரவேல்
- கன்னிமுத்து வெல்லபதியான்
- மானா மக்கீன்
- அந்தனி ஜீவா
- கே.பொன்னுத்துரை

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஞானம்
ஒளி:20
சுடர்:03
231

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506

தொ.நகல் ☞ 0094-11-2362862

இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை

மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk

அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

	ஒரு வருடம்
Australia (AU$)	50
Europe (€)	40
India (Indian Rs.)	1250
Malaysia (RM)	100
Canada ($)	50
UK (£)	40
Singapore (Sin. $)	50
Other (US $)	50

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**
நிலவூர்ச் சித்திரவேல் 06
தாட்சாயணி 08
செ.ஞானராசா 11
புலோலியூர் கு.சரவணன் 16
சு. கருணாநிதி 18
கன்னிமுத்து வெல்லபதியான் 24

⊙ **சிறுகதைகள்**
யோகேஸ்வரி சிவப்பிரகாசம் 17
வி.ஜீவகுமாரன் 21
வே. தில்லைநாதன் (குறுங்கதை) 32
மாவனல்லை எம்.எம். மன்ஸூர் (குறுங்கதை) 41

⊙ **குறுநாவல்**
வ.ந.கிரிதரன் 03

⊙ **கட்டுரைகள்**
செ. யோகராசா 14
மொழிவரதன் 27
பூ.க. இராசரத்தினம் 34
பேராசிரியர் சோ. சந்திரசேகரம் 39

⊙ **பத்தி**
மானா மக்கீன் 33
அந்தனி ஜீவா 38
பேராசிரியர் துரை மனோகரன் 42

⊙ **சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**
கலாபூஷணம் பொன்னுத்துரை 45

⊙ **வாசகர் பேசுகிறார்** 46

அட்டைப்பட ஓவியம் : மும்தாஸ் ஹபீள்

ஆசிரியர் பக்கம்

இந்துக்களின் புனிதப் பிரதேசமான கன்னியா பௌத்தமத அடிப்படைவாதிகளால் கையகப்படுத்தப்படுமா?

திருகோணமலையில் அமைந்துள்ள கன்னியா வெந்நீரூற்று இந்துக்களின் புனிதப் பிரதேசமாகவும் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பிரதேசமாகவும் பல நூற்றாண்டுகாலமாக விளங்கி வந்துள்ளது. இலங்காபுரி வேந்தனான இராவணன் ஒரு சைவன். இராவணன் மேலது நீறு என்ற திருஞானசம்பந்தரின் தேவாரம் இதற்குச் சான்று பகரும். இராவணன் தனது தாயாரான கேகசி இறந்துவிட்டார் என்ற செய்திகேட்டு முனிவர் வேடத்தில் இருந்த விஷ்ணு பகவானிடம் தனது தாயாரின் ஈமக்கிரியைகளை நடத்தித் தரும்படி இறைஞ்சியபோது அதற்கு உடன்பட்ட விஷ்ணு பகவான் கோணேஸ்வரத்திற்கு மேற்குப் புறமாகவுள்ள கன்னியா என்னும் இடத்திற்கு இராவணனை அழைத்துச்சென்று கிரியைகளைச் செய்வதற்காக தனது கரத்தில் உள்ள தண்டினால் ஏழு இடங்களில் ஊன்றினார். ஊன்றிய இடங்களில் வேறுபட்ட உஷ்ண நிலைகொண்ட வெந்நீர் ஊற்றுக்கள் தோன்றியதென புராணம் கூறுகிறது. இராவணன் சிரார்த்தம் செய்த இடம் தொடர்ச்சியாக இறந்தவர்களின் ஈமக்கிரியைகள் செய்யும் இடமாக விளங்கிவந்துள்ளது என்பது ஐதீகம்.

இந்தக் கன்னியா வெந்நீரூற்று தட்ஷண கைலாச புராணம், வீரசிங்காத புராணம், திருகோணாசல புராணம் போன்ற பல புராணங்களால் விதந்துரைக்கப்பட்டது. அகத்திய மாமுனிவரின் மனங்கவர்ந்த புண்ணிய தலமாகவும் கன்னியா இருந்து வந்துள்ளது.

இந்துக்களின் புனித இடமாக விளங்கும் கன்னியா வெந்நீரூற்றை கையகப்படுத்தி பௌத்த மயமாக்கும் முயற்சிகள் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. கன்னியா வளாகப் பகுதியில் பிள்ளையார் ஆலயம், சிவன்ஆலயம்,முருகன் ஆலயம் என்பன இருந்தமைக்கான தடயங்கள் இருந்த போதிலும், பிள்ளையார் ஆலயம் தொடர்ந்து 1983ஆம் ஆண்டுவரை வழிபட்டு வரப்பட்டுள்ளது. 1983 கலவரத்தின் பின்னர் இவ்வாலயம் விஷமிகளால் துவம்சம் செய்யப்பட்டது. இவ்வாலயத்தைப் புனரமைக்கும்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது வில்கம் விகாரையைச் சேர்ந்த பிக்குமார் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த தாது கோபுரம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டனர். அவர்களது முயற்சிக்கு தொல்பொருள் திணைக்களமும் உடந்தையாக இருந்து வந்துள்ளது. இந்நிலையில் திருகோணமலை மடத்தடி மாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவும் கன்னியா வெந்நீரூற்று மற்றும் பிள்ளையார் ஆலயதர்மகர்த்தாவும் நம்பிக்கைப் பொறுப்பாளருமான திருமதி கோகிலரமணி என்பவர் பௌத்தமத ஆக்கிரமிப்புக்கு எதிராக திருகோணமலை மேல்நீதி மன்றத்தில் 22.07.2019 வழக்கொன்றைத் தாக்கல்செய்து பின்வரும் தடை ஆலோசனைகளை விதிக்கும்படி கோரியிருந்தார்.அதற்கமைய 22-07-2019 அன்று நீதிமன்றம் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதன்படி பின்வரும் விடயங்கள் நடைமுறையில் இருக்கும்.

1) கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகில் பிள்ளையார் கோயில் இருந்த இடத்தில் பௌத்த விகாரை கட்டுவதற்கு தடை, வழக்கு முடியும்வரை அமுலில் இருக்கும். 2) பக்தர்களை கன்னியா வெந்நீரூற்றுக்கோ அல்லது பிள்ளையார் கோயிலுக்கோ செல்வதைத் தடுக்கக்கூடாது. அத்துடன் அனுமதிச் சீட்டு விற்பனைக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. 3) மனுதாரர் மாரியம்மன் கோயிலுக்கு உரித்தான காணிகளில் புனருத்தாரண வேலைகள் செய்வதைத் தடுக்கக்கூடாது. 4) மனுதாரர் கன்னியாவில் இருக்கும் மாரியம்மன் கோயிலுக்கு உரித்தான ஆதனங்களை நிர்வகிப்பதைத் தடுக்கக்கூடாது 5) பிதிர்க்கடன் செய்வதற்கு இ.ந்துப் பக்தர்கள் அங்குசெல்வதைத் தடுக்கக்கூடாது. மேற்குறிப்பிட்ட விடயங்கள் வழக்கு முடியும்வரையுள்ள தடையுத்தரவுகள்.

"இலங்கையொரு பௌத்த நாடு. இங்குள்ளவர்களில் பெரும்பாலானோர் சிங்களவர்கள். இந்த நாட்டின் முழு உரிமை பௌத்தருக்கே உரியது" என்னும் அடிப்படைவாதம் தலைவிரித்தாடும் நிலையில் இந்துக்கள் தமது பூர்வீக நிலத்தை அனுபவிக்கவும் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக அனுபவித்துவரும் உரிமையை மீளப் பெறவும் முடியுமா என்பதே இன்று பலரது உள்ளங்களில் எழும் வினாவாகவுள்ளது.

❍❍❍

குறுநாவல்:

சுமணைதாஸ் பாஸ்

1.

சிந்தனையில் மூழ்கிவிடும் போதுதான் எவ்வளவு இனிமையாக, இதமாகவிருக்கின்றது. மெல்ல இலேசாகப் பறப்பதுபோல் ஒருவித சுகமாகக் கூடவிருக்கின்றது. எனக்கு இன்னமும் சரியாக ஞாபகமிருக்கின்றது. 1963ஆம். ஆண்டு மாரிகாலம் தொடங்கி விட்டிருந்தது. என் பெற்றோர் இருவருமே ஆசிரியர்கள். அப்பா ஆங்கில வாத்தி, அம்மா தமிழ் டீச்சர். இருவரிற்குமே வவுனியாவிற்கு மாற்றலாகியிருந்தது. அம்மாவிற்கு வவுனியா மகாவித்தியாலயத்திற்கும் அப்பாவிற்கு நகரிலிருந்த இன்னுமொரு பாடசாலைக்கும் மாற்றல் உத்தரவு கிடைத்ததுமே அப்பா முன்னதாக வவுனியா சென்று, வாடகைக்கு வீடு அமர்த்திவிட்டு வந்திருந்தார். வீட்டுச் சாமான்களையெல்லாம் ஏற்றிவர ஒரு லொறியை ஏற்பாடு செய்துவிட்டு அப்பா லொறியுடன் வர, நானும் அம்மாவும் அக்காவும் தம்பியும் மாமாவுடன் சோமர்செட் காரொன்றில் வன்னி நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது எனக்கு வயது ஐந்துதான். அந்தப் பயண அனுபவம் இன்னமும் பசுமையாக நெஞ்சில் பதிந்து கிடக்கின்றது. முதன் முதலாக பிறந்த இடத்தை விட்டு இன்னுமொரு இடத்திற்கான பயணம். நெஞ்சில் ஒருவித மகிழ்ச்சி, ஆர்வம் செறிந்து கிடந்தது. கார் பரந்தன் தாண்டியதுமே வெளியும், வானுமாகத் தெரிந்த காட்சி மாறிவிட்டது. சுற்றிவரப் படர்ந்திருந்த கானகத்தின் மத்தியில் பயணம் தொடங்கியது.

வன்னி மண்ணின் அழகு மெல்ல மெல்ல தலைகாட்டத் தொடங்கிவிட்டது. மரங்களிலிருந்து செங்குரங்குகளும், கறுத்த முகமுடைய மந்திகளும் எட்டிப் பார்க்கத் தொடங்கி விட்டன. பல்வேறு விதமான பட்சிகள் ஆங்காங்கே தென்படத் தொடங்கி புதிய சூழலும், காட்சியும் என் நெஞ்சில் கிளர்ச்சியை ஒருவித ஆவலை ஏற்படுத்தின. பயணத்தை ஆரம்பித்த பொழுது இருண்டு கொண்டிருந்த வானம், இடையிடையே உறுமிக் கொண்டிருந்த வானம், நாங்கள் மாங்குளத்தைத் தாண்டியபொழுது கொட்டத் தொடங்கிவிட்டது. பேய் மழை அடை மழை என்பார்களே அப்படியொரு மழை, சூழல் எங்கும் இருண்டு, 'சோ' வென்று கொட்டிக்கொண்டிருந்த மழையில் பயணம் செய்வதே பெரும் களிப்பைத் தந்தது. அன்றிலிருந்து கொட்டும் மழையும் அடர்ந்த கானகமும் பட்சிகளும் எனக்குப் பிடித்த விடயங்களாகிவிட்டன. ஒவ்வொருமுறை மழை பொத்துக் கொண்டு பெய்யும் போது, விரிந்திருக்கும் கானகத்தைப் பார்க்கும் போதும், அன்று முதன்முறையாக வன்னி நோக்கிப் பயணம் செய்த பொழுது ஏற்பட்ட அதேவிதமான கிளர்ச்சி, களிப்பு கலந்த உணர்வு நெஞ்சு முழுக்கப் படர்ந்து வருகின்றது. பேரானந்தத்தைத் தந்து விடுகின்றது.

வ.ந.கிரிதரன்

நாங்கள் வவுனியாவை அடைந்த பொழுது பேயாட்டம் போட்டுக் கொட்டிக் கொண்டிருந்த வானத்தின் கோரம் குறைந்து

விட்டிருந்தது. நாங்கள் செல்லவேண்டிய பகுதிக்கு பெயர் 'குருமண் காடு'. வவுனியா நகரிலிருந்து, ஒன்றரை மைல் தொலைவில் மன்னார் வீதியில் அமைந்திருந்தது. இன்று அபிவிருத்தியடைந்துவிட்ட பகுதி ஆனால் அன்றோ நாலைந்து வீடுகளையும், ஒரு பெரிய பண்ணையையும் கொண்ட காடு. படர்ந்த பகுதி. கண்டுபிடிப்பதுதான் கஷ்டமாகவிருந்தது. காரை மன்னார் றோட்டின் கரையோரம் நிறுத்திவிட்டு, யாரும் தென்படுகின்றார்களா என்று பார்ப்பதற்காக மாமா காரை விட்டிறங்கினார். சிறிது நேரம் ஒருவரையுமே காணவில்லை.

"இந்தப் பேய்க்காட்டுக்குள்ளை போய் உன்ர புருஷன் வீட்டைப் பார்த்தாரே" என்று சலித்தபடி காரை நோக்கி மாமா திரும்பத் தொடங்கியபோதுதான் அந்த மனுஷனைக் கண்டோம். குடும்பி, சறம், இடுப்பில் அகன்ற பெல்ட் சிரித்த செந்தளிப்பான முகம். எனக்கு அந்த மனிதனின் தோற்றம் வித்தியாசமாக விருந்தது. ஆச்சரியமாகவிருந்தது. முதல் பார்வையிலேயே பிடித்தும் விட்டது. அவர்தான் சுமணதாஸ பாஸ்.

மாமாதான் முதன்முதலில் வீட்டிற்குள் நுழையச் சென்றார். சென்றவர் "அக்கா இங்கை பாரணை" என்றபடி துள்ளிக்குதித்தபடி ஓடிவந்தார். எல்லோரும் ஏதோ என்று பதறி விட்டோம். வேறு ஒன்றுமில்லை புடையனொன்று உண்ட மயக்கத்தில் கதவருகில் மயங்கிக் கிடந்திருந்தது. சுமணதாஸ் பாஸிற்குச் சிரிப்பாக விருந்தது. அருகிலிருந்த மரக்கட்டையொன்றை எடுத்து அடித்துப்போட்டு, ஒருபுறத்தில் போட்டுக் கொளுத்தினார். வன்னி மண்ணில் இந்தப் பாம்புகளிற்கு மட்டும் குறைவேயில்லை. இரத்தப் புடையன், கண்ணாடிப்புடையன், நாகம், பச்சைப்பாம்பு, தண்ணிப்பாம்பு, வெங்கணாந்தி, மலைப்பாம்பு என்று பல்வேறு வகையான பாம்புகள்! பறநாகம் பற்றிக்கூட அவ்வூர் மக்கள் அடிக்கடி கதைத்துக்கொள்வார்கள்.

2.

அன்று தொடங்கிய சுமணதாஸ் பாஸுடனான நட்பு நாங்கள் வவுனியாவைவிட்டு மாற்றலாகி மீண்டும் யாழ்ப்பாணம் செல்லும் வரையில் பத்து வருடங்களாக நீடித்தது. சுமணதாஸ் பாஸ் 1953லிருந்தே அப்பகுதியில் வசித்து வருவதால் நன்றாகத் தமிழ் பேசுவார். இருந்தாலும் எம்.எஸ்.பெர்னாண்டோவின் குரலின் ஓரத்தில் இடையிடையே ஒலிக்கும் அந்த மழலைத்தமிழ் சுமணதாஸ் பாஸின் குரலிலும் ஒலிக்கத்தான் செய்தது. அந்தக் காலக்கட்டத்திலேயே சுமணதாஸ் பாஸ் ஒரு முற்போக்குவாதியாகத்தான் காட்சியளித்தார். அவரது மனைவி நந்தாவதிக்கு ஏற்கனவே முறை தவறிய தொடர்பொன்றினால் உருவான பெண் குழந்தையொன்று இருந்தது. சுமணதாஸ் பாஸ் அந்தப் பெண்குழந்தைக்கு எந்தவிதக் குறையும் தெரியாமல்தான் பார்த்து வந்தார். அந்தக் குழந்தை மல்லிகாவிற்கு எங்கள் வயதுதான். மனைவி நந்தாவதிகூட ஒரு நிரந்தரத் தொய்வு நோயாளிதான். சுமணதாஸ் பாஸ் மனைவி நந்தாவதியின் மேலும் குழந்தை மல்லிகா மேலும் அளவுகடந்த அன்பையே வைத்திருந்தார்.

இவர்கள் தவிர ரஞ்சிற் என்ற ஒரு இளைஞனும் சுமணதாஸ் பாஸுடன் சேர்ந்து வேலை செய்து வந்தான். அவன் வசித்தது அவர்களுடன்தான். சுமணதாஸ் பாஸ் வீட்டிலேயே மரவேலை செய்வதற்கான சகல வசதிகளையும் வைத்திருந்தார். அப்பகுதியில் இருந்தவர்களுக்கு மலிவான விலையில் தேவையான மரத் தளபாடங்களையெல்லாம் சுமணதாஸ் பாஸ்தான் செய்து கொடுத்து வந்தார். ஓய்வான நேரங்களிலெல்லாம் சுமனதாஸ் பாஸ் எங்களுடன் குழந்தைகளைப்போல் ஆடிப்பாடி விளையாடவும் தயங்குவதில்லை. இன்னமும் என் காதுகளில் அவர் ஒருமுறை சொல்லித்தந்த பாடலொன்றின் வரிகள் ஒலிக்கின்றன.

"தவளைக்குஞ்சுகள் என்ன விநோதம்
ஆடிப்பாடி ஓடி என்ன விநோதம்"

இப்படியொரு தமிழ் பாட்டு ஏற்கனவே யிருந்ததா எனக்குத் தெரியாது. ஆனால் சுமணதாஸ் பாஸ் இந்தப்பாட்டை ஒரு வித மழலைத் தமிழில் பாடிச் சொல்லித் தரும்போது கேட்பதற்கே ஆசையாகயிருக்கும். இனிமையாயிருக்கும்.

3.

நாங்கள் முதன் முதல் சென்றபொழுது குருமண்காடு அபிவிருத்தி குன்றியதொரு பிரதேசமாக இருந்தது. அண்மையில் பட்டாணிச்சுப் புளியங்குளமென்று ஒரு குளம், மாரியில் தாமரைகள் பூத்துக்குலுங்கி அழகாகத் தெரியும். குளக்கட்டில் பாலைகள், வீரைகள் நிழல் தந்துகொண்டிருந்தன. குளத்தின் மறுபுறத்தே வயல்வெளி விரிந்து கிடந்தது. நீர்க்காகங்கள், மீன்கொத்திகள், ஆலாக்களென்று எந்த நேரமும் பல்வேறு வகையான பறவைகளின் வாசஸ்தலமாக அக்குளப்பகுதி காட்சியளித்தது. குளத்தின் இரு பகுதிகளில் படிக்கட்டுக்கள் கட்டி வைத்திருந்தார்கள். மாரியில் குளம் பொங்கினால் வழிவதற்கேற்ற வகையிலான

அணை மாதிரிக் கட்டி வைத்திருந்தார்கள். ஜப்பான் மீன், விரால்மீன் என்று பல்வேறு வகையான மீன்களோடு தண்ணீர்ப்பாம்புகளும் அடிக்கடி காணப்பட்டன.

குளத்திற்கு முன்பக்கம் குருமண் காட்டிற்குச் செல்லும் பாதையை அண்டியதாக ஒரு மயானம். முஸ்லிம்களிற்குச் சொந்தமானதொரு மயானம். அந்த மயானத்தைச் சுற்றியும் காடு பரந்து கிடந்தது. முதன்முதலாக அப்பகுதிக்கு வந்தபோது அம்மாவிற்கு மனது சிறிது சரியில்லாததாக இருந்ததை உணர்ந்தேன். போதாதற்கு இது வேறு அவவின் கலக்கத்தை அதிகப்படுத்திவிட்டது. அதுவும் பௌர்ணமி நாட்களில் இந்தச் சுடலையிலிருந்து நரிகள் ஊளையிடும்போது, நள்ளிரவில் படுக்கையில் புரளும்போது கூட ஓரளவு நெஞ்சு கலங்கத்தான் செய்யும். எனக்கோ முதற் பார்வையிலேயே அப்பகுதி பிடித்துப் போய்விட்டது. மரங்களிலிருந்து ஆங்காங்கே 'தாட்டன் குரங்குகள்' என்று அப்பகுதி மக்களால் வர்ணிக்கப்படும் கருமூஞ்சிக் குரங்குகள் தெரிந்தன. அவை அடிக்கடி கொப்புகளில் தாவிக்கொண்டன. அவற்றை ஆர்வத்துடன் பார்த்தேன்.

பிரம்மாண்டமாக வளர்ந்திருந்த கருங்காலி மரங்கள், பாலை மரங்கள், முதிரை மரங்கள் எனக்குப் பிரமிப்பைத்தந்தன. ஆரம்பத்தில் கலக்கத்தைத் தந்தாலும் போகப்போக அம்மாவிற்கும் அப்பகுதி பிடித்துப்போனது. முதன் முதலாக சுமணதாஸ் பாஸ் வழிகாட்ட நாங்கள் வாடகைக்கு அமர்த்தியிருந்த வீட்டை அடைந்தபோது நான் அடைந்த அனுபவங்கள் இன்னமும் என் நெஞ்சின் ஆழத்தே பசுமையாகப் பதிந்து போய்க்கிடக்கின்றன. மன்னார் ரோட்டிலிருந்து காட்டினூடு சென்ற மண்பாதை முடியும் இடத்தில் நான்கு வீடுகள் மட்டுமேயிருந்தன. அதில் நாங்கள் பார்த்திருந்தது முதலாவது வீடு.

பெரிய வளவின் நடுவில் அமைந்திருந்த ஓடு வேய்ந்த வீடு. வளவில் கோவைப் பழமரமொன்றும், முருங்கைகள் சிலவும், முள் முருக்கையொன்றும் காணப்பட்டன. அதைத்தவிர 'தகரை' என அழைக்கப்படுகின்ற ஒருவிதமான பற்றையாக வளரும் செடி, முழுவளவையும் மூடிப் படர்ந்து கிடந்தது. வீட்டிற்கு முன்பாக, அடர்ந்த காடு படர்ந்து கிடந்தது. புதியவர்களான எங்களைக் குரங்குகள் சில ஆவலுடன் பார்த்துவிட்டு கொப்புகளில் குதித்துக்கொண்டன. மரஅணிலொன்று துள்ளிப் பாய்ந்தது.

4.

எங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் ஒன்றரை மைல் தொலைவிலிருந்தது. ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் 'நடராஜா'தான். அப்பா படிப்பித்த பாடசாலை நகரின் இன்னுமொரு பகுதியிலிருந்தது. நானும் அக்காவும் தம்பியும் அம்மா படிப்பித்த பாடசாலையில்தான் படிக்கத் தொடங்கினோம். தாய்க்கோழி குஞ்சுகளைக் கூட்டித் திரியிற மாதிரி, அம்மாவைச் சுற்றி பள்ளிக்கூடம் சென்று வருவது ஒரு சுவாரஸ்யமான அனுபவம். பாடசாலை செல்லும் வழியில் குளங்கள் வயல்களென்று பசுமை செழித்துக் கிடந்தது. அதிகாலை நேரத்தில், மெல்லிய கதிரொளியின் தண்மையில் நடந்து செல்வதே சுகமானதொரு அனுபவம்.

எங்கள் வீட்டின் முன்புறத்தில் றோசா, மல்லிகை, காசித்தும்பை, கனகாம்பரம், செவ்வந்தியென்று அக்கா ஒரு பூந்தோட்டமே போட்டு விட்டிருந்தார், பின்வளவில் கிணற்றிற் கண்மையில் பாகல், கத்திரி, பூசணி, மிளகாய், புடலங்காய் தக்காளி, அவரை என்று சின்னதொரு காய்கறித்தோட்டம் அம்மா போட்டிருந்தார். ஒவ்வொரு நாளும் விடிய பள்ளிக்கூடம் போவதற்கு முன்பு நான் தான் தண்ணீர் வார்ப்பது வழக்கம். தண்ணீர் வார்க்கும் போது தேன் குடிக்க வரும் சிறிய கரிய தேன் சிட்டுக்களிரண்டை விடுப்புப் பார்ப்பது, வாசல் அருகிலுள்ள மரத்தில் வந்து அடிக்கொருதரம் வாலையாட்டும் கொண்டை விரிச்சான் குருவிகளைப் பார்த்து வியப்பது. இந்தக் கொண்டை விரிச்சான் குருவிகளிற்கு நீண்ட கரிய வால்கள் வாலின் அடிப்புறத்தில் வால் இரண்டாகப் பிளந்து கிடக்கும். ஒவ்வொருமுறை மெல்லியதாக சப்தமிடும்போது வாலை ஒருமுறை அசைக்கத் தவறாத குருவி. அழகான மஞ்சளில் கருப்புக் கோடுகள் இடையிடையே படர்ந்த மாம்பழத்திக் குருவிகளிற்கும் பஞ்சமில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் அதிகமாகக் காணப்பட்ட காகங்களிற்கும் குயில்களிற்கும்தான் பஞ்சம், காகங்கள் இல்லாதபடியால் தான் குயில் களிற்கும். பஞ்சம், குயில்கள்தானே காகக் கூடுகளில் களவாக முட்டையிடும் பட்சிகள். ஆனால் செண்பகங்கள், குக்குறுபான்கள் நிறைய வேயிருந்தன. பருந்துகளிற்கும் குறைவில்லை. கொவ்வை மரமிருந்ததால் கிளிகளிற்கும் பஞ்சமில்லை. பருந்தினத்தைச் சேர்ந்த இன்னுமொரு பறவை ஆலா. ஆனால் இவை பருந்தைப்போல் கோழிக்குஞ்சு அதிகம் பிடிப்பதில்லை. கூடுதலாகக் குளத்தைச்

முட்டுக் கொடாதீர்

சீறும் கடலும் பாறும் மலையும்
கூடும் மழையால் வீறுகொண்டேகி
உயிரும் பொருளும் காவுகொண்டேகும்
ஆறும் நமக்குக் கூறுவதென்ன

நாறும் அரசியல் சாக்கடைதன்னில்
நாளும் ஊறும் நன்மதியில்லீர்
மாறும் ஒருநாள் நம் துயரென்றே
தேறினும் மனது துயர் மாறாது.

தாமுண்டு தம துறவுண்டென்று
வளர்த்துத் தமையே உயர்த்திக் கொண்டு
வாக்காளர் உங்கள் வயிற்றிலடிக்கும்
போக்குத்தனத்தைப் பொறுத்திடமாட்டோம்

அடுத்த தேர்தல் நாள் வந்திடும்போது
பாரினை ஆளும் மன்றுக்கு யாரோ
நாட்டுக்கு நல்லது செய்வேனென்னும்
கோட்பாடு கொண்ட வேட்பாளன் தேடு.

ஆளும் கதிரையில் அமரும் நோக்கில்
கீழுறு தமிழர் பலத்தைக் கோரித்
'தீர்ப்பேன் உங்கள் பிரச்சனை' என்று
நாக்கூசாமல் வாக்குக் கொடுப்பார்

இனவாதியைத் தூண்டிப் 'பிள்ளையைக் கிள்ளி'
நல்லது செய்ய நாட்களை நகர்த்தித்
'தொட்டிலை ஆட்டும்' வஞ்சகருக்குப்
பட்டுப் பழுத்தும் முட்டுக் கொடுப்பதோ

நிலவூர்ச் சித்திரவேல்
திருகோணமலை

சுற்றியே மீன் பிடிப்பதற்காகத் திரிவதைக் கண்டிருக்கின்றேன். நீர்க்காகங்கள் அதிகாலை அல்லது மாலை நேரங்களில் குளங்களை நோக்கி, விண்ணில் நிரைநிரையாகப் பறப்பதைப் பார்க்கவேண்டும். மிக நேர்த்தியாக அல்லது 'ஏ' வடிவில் அல்லது நேர்கோட்டில் பறப்பதற்கு எங்குதான் பழகினவோ? குளம்நோக்கி கொக்குகள், நாரைகள், மீன்கொத்திகள் என்று படையெடுக்கும் பறவைகள் பலவிதம்.

இவை தவிர இன்னுமிருவகையான பறவைகள் சுவாரஸ்யமானவை ஒன்று ஆட்காட்டிப் பறவை இவை காடுகளில் வேட்டைக்குப் போகும் மனிதர்களை மிருகங்களிற்குக் காட்டிக் கொடுத்துவிடுமாம். ஆட்களைக் காட்டி விடுவதால் வந்த பெயர்தான் ஆட்காட்டியாம். இவைபற்றி ஒரு கதைகூடச் சொல்வார்கள். இவை சதா சந்தேகத்துடன் வாழும் பறவைகளாம். மரங்களில் தூங்குவதில்லையாம். தூங்கும்போது மரம் அவற்றின் பாரம் தாங்காமல் முறிந்து விட்டாலென்ற தற்பாதுகாப்பு நடவடிக்கைதான். தரையில்தான் படுப்பினமாம் அப்படிப் படுக்கும்போது வானை நோக்கிக் கால்களை விரித்தபடி மல்லாக்காகத்தான் படுப்பினமாம். தற்செயலாக, நித்திரையாயிருக்கும்போது வானம் இடிந்துவிட்டால் தாங்கிப் பிடித்து விடலாமல்லவா? சரியான சந்தேக ராமன்தான் போங்கள். மற்றது ஊர்லாத்திப் பறவைகள். இவை மரத்தில் தங்கி நிற்பது வெகு அபூர்வம். எந்நேரமும் ஊரை உலாத்தியபடி திரிவதால் வந்தபெயர்தான் ஊர்லாத்தி. இவைதவிர காடை, கவுதாரி, காட்டுக்கோழி, மணிப்புறா என்று பல்வேறு பிரிவுகள். தோட்டம் தவிர கோழிகளும் வளர்க்கத் தொடங்கினோம். கோழிக்குஞ்சுகளை பருந்திடமிருந்தும் மரநாய்கள், கீரிகள், நரிகளிடமிருந்து பாதுகாப்பதுதான் பெரிய சிரமம். ஒரு முறை பெரிய வைற்லெக்கோன் சேவலொன்றை கழுத்தைப்பிடித்து இரத்தம் முழுவதையும் உறிஞ்சிவிட்டு மரநாயொன்று போட்டு விட்டிருந்தது. மரநாயைப் பொறுத்தவரையில் இரத்தத்தைக் குடிப்பதோடு சரி. ஆனால் இந்த நரிகளை எனக்கு கொஞ்சம்கூடப் பிடிப்பதேயில்லை. அடிக்கடி சந்திக்கருகிலிருந்து சுடலையைக் கடந்து செல்லும்போது நாலைந்து ஒரு குழுவாகக் கடந்து காட்டினுள் செல்லும்போது சிலவேளை எங்களை ஒருவித பார்வை பார்க்கும். அவற்றின் அந்தப் பார்வை எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காது. நயவஞ்சகமான பார்வை, நடுநிசியில் சுடலையிலிருந்து ஊளையிடுவதாலும் அவற்றை எனக்குப்

பிடிப்பதில்லை. எங்கள் வீட்டு வளவில் முயல்வளைகளும் நிறைய இருந்தன. ஆனால் முயல்களைப் பகலில் காண முடியாது. அவை இரவில்தான் வெளியில் வரும்போலும். ஆனால் சிலவேளை அவற்றைக் கண்டிருக்கின்றேன். மண்ணிறம் கலந்த சிறிய குழி முயல்கள், இலேசாக இருட்டத் தொடங்கியதுமே வௌவால்கள் பறக்கத் தொடங்கிவிடும். ஆந்தைகள் நத்துகளும் நிறையயிருந்தன. ஒவ்வொரு நாளும் பள்ளிக்குப்போகும்போது வீதியிலுள்ள மின்சார வயர்களில் அகப்பட்டுக் கருகிக் கிடக்கும் வௌவால்களை அடிக்கடி காணலாம். அவற்றின் சிறிய கால்கள் பெரிய உடலைத் தாங்கும். பலமற்றவை மேற்கம்பியில் கால்களைப் பற்றித் தலைகீழாகத் தொங்க முயலும்போது அடுத்த கம்பியில் உடம்பு பட்டுவிட்டால் அதோகதிதான். பார்க்கப் பாவமா யிருக்கும். இவை தவிர வீட்டுவளவில் தும்பிகள், வண்ணத்துப் பூச்சிகள் நிறையவேயிருந்தன. வண்ணத்துப் பூச்சிகள் எத்தனையோ வகைகள், இரவில் விண்ணெல்லாம் நட்சத்திரங்கள் கொட்டிக்கிடக்கும். மரங்களைச்சுற்றி மின் மினிகள் செயற்கை வெளிச்சம் தந்தபடி படர்ந்து கிடக்கும்.

இரவென்றால் எனக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு. ஈஸிசேரில் படுத்திருக்கும் அப்பாவின் சாறத்தைத் தொட்டிலாக்கி, நட்சத்திரங்கள் கொட்டிக்கிடக்கும் வானத்தைப் பார்த்து மயங்கிக் கிடப்பது. அப்பா நட்சத்தி ரங்களைப் பற்றி, செயற்கைக் கோள்களைப்பற்றி, சிலவேளைகளில் வானைக் கீறிச்செல்லும் எரிகற்களைப் பற்றியெல்லாம் அலுக்காமல் சலிக்காமல் விளக்கம் தருவார்.

இன்னுமொரு விசயம். இந்தப் பல்லிகள், யாழ்ப்பாணத்தில் சிறிய பல்லிகளைத்தான் காணலாம், ஆனால் இங்கு எங்கள் வீட்டில் இரண்டு விதமான பல்லிகளிருந்தன. ஒன்று வழக்கமான சிறிய பல்லி, ஆனால் இன்னுமொன்றோ பெரிய புள்ளிகளிட்ட சிறிது கருமையான பல்லி. காட்டுப்பல்லியென்று கூறுவார்கள். இந்தக் காட்டுப்பல்லி பார்ப்ப தற்குச் சிறிது பயங்கரமாக இருக்கும். இவை தவிர வீட்டைச் சுற்றி அடிக்கடி உடும்புகள், அறணைகள், ஓணான்கள், தேரைகள், தவளைகள் என்று பல்வேறுவிதமான உயிரினங்கள் வளைய வந்தன.

எங்கள் வீட்டிற்கு அடுத்த வீடுதான் சுமணதாஸ் பாஸின் வீடு. சுமணதாஸ் வீட்டு வளவில், எங்கள் வளவிற்கருகாக பப்பா மரமொன்றிருந்தது. அந்த மரத்தைச் சுற்றி எந்நேரமும் செங்குரங்குகளைக் காணலாம். குரங்கு வைத்து வித்தை செய்பவர்கள் கொண்டு திரிவது இந்த வகைக் குரங்கைத் தான். குரங்கைப் பற்றி நினைத்ததும் தான் ஞாபகம் வருகிறது பாம்பாட்டிகள். இந்தப் பாம் பாட்டிகள் குறிசொல்லும் குறவர்கள், குடுகுடுப்பைக்காரர்கள், பொய்க்கால் குதிரை வைத்து ஆட்டங்காட்டும் பொம்மலாட்டக்காரர்கள் இவர்களிற்கெல்லாம் குறையேயிருந்ததில்லை. ஒருவர் மாதிரி ஒருவர் வந்து கொண்டே யிருந்தார்கள். இவர்களெல்லாம் வாழ்விற்கு ஒருவித களையை இனிமையை ஊட்டிக் கொண்டிருந்தார்கள்.

5.

இச்சமயத்தில் வவுனியா நகர பொலிஸ் நிலையத்தைச் சுற்றி 'சேகுவேரா' இளைஞர் களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக மண்மூடைகள் ஆங்காங்கே போடப் பட்டிருந்தன. ஒருமுறை இம்மண் மூடை களை வேடிக்கை பார்த்தபடி வந்து கொண்டிருந்த போது, வவுனியா நகரசபை மைதானத்தில் மூன்று ஹெலிகொப்டர்கள் வந்திறங்கின. 'சப்மெஷின் கன்களுடன் சிங்களச் சிப்பாய்கள் நகர சபை மைதானத்தைச் சுற்றியிருந்த கழிவுநீர் செல்வதற்காக வெட்டப்பட்டிருந்த கால் வாய் பகுதிக்குள் மறைந்து நின்று பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்திக் கொண்டி ருந்தார்கள். முதன்முதலாக என் வாழ்வில் ' சப்மெஷின் கன்'களைப் பார்த்தது அப்பொழுது தான். அன்றிலிருந்து புரட்சி அடக்கப்பட்ட காலம் வரை அடிக்கடி புகையிரத நிலையங்களில், வீதிகளில், சிங்களச் சிப்பாய்கள் 'சப்மெஷின் கன்'களுடன் திரிவதைப் பார்ப்பது பழக்கமாகி விட்டது. ஒரு சில சமயங்களில் மெஷின்கன் பொருத்தப்பட்ட திறந்த ஜிப்புகளில் சிங்களச் சிப்பாய்கள் செல்வார்கள். அவர்களை அவ்விதம் பார்ப்பது எங்களிற்கொரு வேடிக்கை யான அனுபவம். எந்தவிதப் பயமும் எங்களிற் கேற்பட்டதில்லை. அவர்களும் தமிழர் களுடன் அன்பாக, இயல்பாக நடந்து கொண்டார்கள். சிங்கள இளைஞர்கள் விடயத் தில் மட்டும் எச்சரிக்கையாக, சந்தேகத் துடன் நடந்துகொண்டார்கள். இந்த சப்மெஷின் கன்களைப்பற்றி நெடுநாள் எனக்கொரு சந்தேக மிருந்தது. இதன் குழலைப்பற்றி துளைகள் பல கொண்டதொரு பகுதியிருக்கும். குளிர்த் தன்மையைத் தருவதற்காக ஆனால் அந்தக் காலக்கட்டத்தில் முதன்முறையாக அதனைக் கண்டபோது பலவிதமான கதைகள் எங்களை ஈர்த்தன. அவற்றிலொன்று சமயத்தில் அந்தத் துளைகள் வரியாக ஐநூறு குண்டுகளைச்

பூமியின் மரணம்

பெருமழைக் காலத்தில்
ஊளையிட்டமுத காற்றின் ஓலத்தின்பின்
நீண்டிருக்கிறது பேரமைதி...!
சுழல்காற்று
இழுத்துச் சாய்த்திருந்ததில்
மீதி எதுவுமில்லை!
ஒரு குரல்... ஒரு கேவல்...
எதுவும் மீதமில்லை!
பேரவலம் மட்டுமே முற்றுப்புள்ளி!

நீ என்பதும்,
நான் என்பதும்,
இந்தப் பிரபஞ்சப் பெருவெளியில்
எங்கே ஒடுங்கிப் போயின...?
ஒரு பிரளயம்
எல்லாவற்றையுமே நீருள் அமிழ்த்தி
எல்லாமே நீர்மயமாய்....

தொலை தூரத்திலிருந்தாவது...
ஏதாவது ஒரு அபயக்குரல்
கேட்கட்டுமே.
இந்த உலகின் உயிர்ப்பை நிலைநிறுத்த!

எதுவுமில்லை...!
எதுவுமேயில்லை...!
வெறும்வெளி!

எந்த உயிரின் அனுக்கமுமில்லை!
எந்தப்புல் நுனி அசைவுமில்லை!

எல்லாம் முடிந்தது!
ஊழியின் கோரத்தாண்டவம்
எல்லாவற்றையும்
ஒரு புள்ளியில் ஒடுக்கியபின்...

இனி,
கோடி ஆண்டுகள் ஆகலாம்!
இந்தப்பூமியில்
ஓர் உயிரின் கேவல் ஜனிப்பதற்கு!!

-தாட்சாயணி-

சுடலாமென்பதுதான். சிங்களப் பொலிசாரைப் பொறுத்த வரையில் அவர்களை நான் 'சப்மெஷின் கன்' களுடன் கண்டதில்லை. வழக்கம்போல் நீண்ட 'ரைபிள்'தான் அவர்களது ஆயுதம், இது அன்று. ஆனால் இன்றோ ஒரே மண். ஆனால் எத்தனைவிதமான நிகழ்வுகள். எல்லாவற்றிற்கும் சாட்சியாக அமைதியிலாழ்ந்து கிடக்கும் என் பிரியமான வன்னிமண்.

வன்னிமண், இந்த மண்ணில் கழிந்துவிட்ட என் பால்ய காலத்து நினைவுகள் எல்லாமே நெஞ்சின் ஆழத்தில் பசுமையாகப் பதிந்து கிடக்கின்றன. இந்த மண்ணில் கழிந்து விட்ட காலத்தின் ஒவ்வொரு கணமும் தெளிவான விம்பமாக நெஞ்சில் விரிகின்றது. காடுகள், குளங்கள், வயல்கள் திரும்பிய பக்கமெல்லாம் இயற்கையின் தாலாட்டு. இந்த மண்ணின்மேல் நிற்கும்போது புனிதமானதொரு உணர்வினை, கூடவே இனிமை கலந்ததொரு உணர்வினை நானடைவது வழக்கம். இம்மண்ணின் நினைவுகளும் எனக்கு அதனைத்தான் ஏற்படுத்தி விடுகின்றன. குளங்களென்றதும் தான் ஞாபகத்திற்கு வருகின்றது. இந்த மண் குளங்கள் மலிந்தமண். மூலைக்குமூலை குளங்கள். எங்கள் வீட்டிற்கண்மையில் கூட நிறையக் குளங்கள் காணப்பட்டன. பட்டாணிச்சுப் புளியங்குளம், வேப்பங்குளம், நெழுக்குளம், நாவற்குளம், பண்டாரிக்குளம், வைரவபுளியங்குளம், வவுனியாக்குளம், இறம்பைக்குளம், பேயடிச்சான் கூழாங்குளம் இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். இம்மண்ணின் ஊர்ப்பெயர்கள் கூட மாங்குளம், புளியங்குளம், பாவற்குளமென்று முடிவதைக் காணலாம்.

நாவற்குளம் பல்வேறு நினைவலைகளைத் தோற்றுவித்து விட்டது. இந்தக் குளத்திற்கு அண்மையில் செல்லும் புகையிரத பாதை எங்கள் வாழ்வில் முக்கியமானதொரு விடயத்தைப் பிடித்து விட்டிருந்தது. ஒருபுறம் காடு. மறுபுறம் பெரியதொரு நிலப்பரப்பை உள்ளடக்கிய விவசாயக் கால்நடைப்பண்ணை. இவற்றிற்கிடையில் அமைதியாக நீண்டு கிடக்கும் புகையிரதப்பாதை. தண்டவாளங்களில் காதுகளை வைத்து தொலைவிலேயாவது புகைவண்டி வருகின்றதாவென்று ஆராய்வது எங்களது விளையாட்டுக்களிலொன்று. இன்னுமொரு விளையாட்டு சோடா மூடியை புகையிரதம் வரும்போது வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பது. இவ்விதம் விரிவடைந் திருக்கும் சோடா மூடியின் நடுவில் துளை களிட்டு, நூல்கோத்து இரு கைகளாலும்

நூலின் இருமுனைகளையும் பற்றியிழுத்து நடுவில் சுழலும் சோடா மூடியைப் பார்த்து வியந்து நிற்பது. இதுவும் எங்களது பொழுது போக்குகளிலொன்றுதான். ஒவ்வொருமுறை புகைவண்டி அப்பகுதியைக் கடக்கும்போதும் அதுவரை மரங்களில் மௌனமாக இலை களைச் சப்பிக்கொண்டு, அல்லது பேன் பார்த்துக்கொண்டிருக்கும் குரங்குகளெல்லாம் சத்தம் போட்டபடி கொப்புகளில் துள்ளித் திரிவதைப் பார்க்கவும் வேடிக்கையாகத் தானிருக்கும். இந்தப் புகையிரதப்பாதை இன்னுமொரு விடயத்திற்கும் பிரசித்தம். எனக்குத் தெரிந்து குறைந்தது மூன்று பேராவது இப்பகுதியில் புகைவண்டி முன் விழுந்து தற்கொலை செய்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களில் முதலாவதாகத் தற்கொலை செய்து கொண்டவரின் பெயர் ராமன். இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர். இவரை நான் ஒருமுறை தான் பார்த்திருக்கின்றேன். அப்பொழுது நாங்கள் வவுனியா சென்றிருந்த புதிது. எங்கள் வீட்டிற்கருகாக காடு மண்டிக் கிடந்தது. ஒருமுறை ஏதோ குளப்படி செய்து விட்டு, பிரம்புடன் வந்துகொண்டிருந்த அப்பாவிட மிருந்து தப்புவதற்காக அருகில் மண்டிக்கிடந்த காட்டுப்பகுதிக்குள் ஓடிவிட்டேன்

6.

"தவளைக் குஞ்சுகள் என்ன விநோதம் ஆடிப்பாடியோடி ஆடும் விநோதம்.." சுமண தாஸ பாஸின் மழலைக்குரல் இன்னமும் காதுகளில் ஒலிக்கின்றது. தவளைக் குஞ்சுகளில் விநோதத்தைக் கண்ட சுமணதாஸ் பாஸி ற்கு என்னதான் நடந்தது? சுமணதாஸ் பாஸுடன் எனக்கிருந்த அனுபவங்களை எடைபோட்டுச் சீர்தூக்கிப்பார்க்க மனம் முயலத் தொடங்கியது. குறிப்பாக அந்தச் சம்பவம். என்னால் மறக்கவே முடியாத சம்பவம். இன்று நான் உயிரோடிருக்கின்றேனென்றால் அதற்குக் காரணம் சுமணதாஸ் பாஸ். அந்த சுமணதாஸ் பாஸ் இன்றில்லை.

பட்டாணிச்சுப் புளியங்குளம். வித்தியாசமான பெயர். மன்னார் ரோட்டில், குருமண் காட்டுச் சந்தியில், முஸ்லிம் சுடலைக்கு முன்பாகவுள்ள குளம், நான் முதன் முறையாக நீந்தப் பழகியது இந்தக் குளத்தில்தான். நாங்கள் முதன்முதல் வன்னிமண்ணில் காலடியெடுத்து வைத்தபோது இந்தக்குளம் முட்டி மோதிக்கொண்டிருந்தது. முட்டிமோதும் சமயங்களில் வடிவதற்காக குளக்கட்டின் ஒரு புறத்தில் காட்டை வெட்டி, குளத்து நீர்மட்டத்துடன் சேர்த்து சிறியதொரு அணைகட்டி வைத்திருந்தார்கள். தாமரைகள் படர்ந்து குளம் அழகு பெற்றுக்கிடந்தது. குளத்தின் மறுபுறம் வயல்வெளியும் விரிந்து கிடந்தன. வயல் வெளிகளை ஊடறுத்துப் பார்த்தால் எல்லைக்காவலனின் மாளிகை பார்வையில் தட்டுப்படும். குளமும் வயல் வெளியும் சந்திக்குமிடத்தில் தாமரைக் கொடிகள் படர்ந்திருந்தன. கொக்குக்கள் எந்நேரமும் தவமியற்றிக் கொண்டிருந்தன. குளக்கட்டும் மரங்களின் அரவணைப்பில் மயங்கிக் கிடந்தது. மீன் கொத்திகள் மரங்களில் அடிக்கடி கொத்திய மீன்களுடன் காணப்பட்டன.

என்னையும் அக்காவையும் "கட்டி லிருத்தி

பகிர்வோம்....

ஈழமும் தமிழும்

கல்லடி வேலுப்பிள்ளை பற்றிய பல விநோத செய்திகள் உள்ளன. அவற்றிலே ஒன்று, இவருக்கும் A.T. **இராசா** என்பவருக்கும் மலேசிய-சிங்கப்பூர் நாட்டிலே நடைபெற்ற விநோத வழக்காகும்.

தமது பத்திரிக்கையான **சுதேச நாட்டிய**த் துக்கான சந்தாவைப் பெறச்சென்றபோது A.T. **இராசா** அவர்கள் குறிப்பொன்றினைப் பலகை அட்டை ஒன்றில் எழுதி வேலையாளிடம் கொடுத்து வேலுப்பிள்ளையை அவமதித் துள்ளார். அந்த பலகை அட்டையிலே பதிலுக்கு A.T. இராசாவின் உலோபித்தனத்தைச் சாடையாகக் குறிப்பிட்டு கவிதை வரிகளை வேலுப்பிள்ளையும் எழுதியுள்ளார்.

இதைக் கண்டு சினம்கொண்ட A.T. இராசா, வேலுப்பிள்ளைமீது மூன்று குற்றங்களைச் சாட்டி வழக்குத் தொடுத்துள்ளார். கவிதையின் பொருள் குறித்து பல மாதங்களாக வழக்காடப் பெற்று இறுதியாக A.T. இராசா அவர்களின் **பலகை அட்டையிலே உத்தரவில்லாமல் எழுதியதற்காக** வேலுப்பிள்ளைக்கு 25 வெள்ளிப் பணம் அபராதமாக விதிக்கப்பெற்று வழக்கு முடி வுற்றது.

இந்த ஆண்டு (2019) கல்லடி வேலுப் பிள்ளை மறைந்து 75 ஆண்டுகள் நிறைவடை கின்றன.

விட்டு அப்பா குளத்தில் மூழ்கியெழுவார். அப்பா அடிக்கடி நீரினுள் காணாமல் போகும் போதெல்லாம் நெஞ்சு பதைக்கும். வியக்கும். நல்ல காலம் நான் அழவேயில்லை. அழுதிருந்தால் என் வாழ்க்கையே மாறிவிட்டிருக்கலாம். அம்மையும் அப்பனும் காட்சி தந்திருக்கலாம். ஞானப்பால் சுவைத்திருக்கலாம். இன்னுமொரு தேவாரச் செல்வர் தமிழிற்கு அழகு சேர்த்திருக்கலாம். எதுவுமே நடக்கவில்லை. நானும் அழவில்லை அதற்குப் பதிலாக வேறொன்று செய்தேன். ஒருமுறை இப்படித் தான் காணாமல் போகும் அப்பாவைக் கண்டு பிடித்தாலென்ன என்றொரு எண்ணம் எழுந்தது. விளைவு நான் காணாமல் போனேன். அக்காதான் முதலில் காணாமல்போன என்னைக் காணவில்லை என்பதைக் கண்டு பிடிச்சா. மூச்சு முட்டக் குடித்திருந்தவனை அப்பா ஒரு மாதிரிக் கண்டுபிடித்துக் கரைசேர்த்தார். நானின்று உயிரோடிருப்பதற்கு முதற்காரணம் அப்பா, ஏற்கனவே நானிவ்வுலகிலிருப்பதற்கே அவர்தான் காரணமாயிருந்தார். அதனுடன் ஒப்பிடும்பொழுது இதன் முக்கியத்துவம் குறைந்து போய்விடுகின்றது. இதனையே எம் குடும்பத்தைச் சேராத ஒருவர் செய்தால் அதற்கு முக்கியத்துவம் வந்துவிடுகின்றது. அதனைத்தான் சுமணதாஸ் பாஸ் செய்தார். அது நடந்தபோது எனக்குப் பதினொருவயது. நீந்துவதற்கு முயன்று கொண்டிருந்தேன். ஒவ்வொரு முறையும் மூக்காலும் வாயாலும் நீர் உள்ளே போய்விடும். இதற்கிடையில் தண்ணிரென்றால் எனக்கொரு பயம் கூட இருந்தது. அதற்குக்காரணம் எம் பாடசாலை நண்பனொருவன், எனக்குத் தலையில் மூன்று சுழிகள். நண்பன் சொன்னான். 'மூன்று சுழிக்காரர்கள் தண்ணிரென்றால் கவனமாயிருக்கவேண்டும் நான் சிறிது எச்சரிக்கை. ஆனால் அதையும் மீறி நீந்துவதற்கு மனம் பேரார்வத்துடன் முயன்று கொண்டிருந்தது.

வழக்கம் போல் ஒரு மதியம். சூரியன் உச்சியில் சுட்டெரிந்துக் கொண்டிருந்தான். நீர்கொழும்பு ஆறுமுகத்தின் குடும்பம், சுமணதாஸ் பாஸ், ரஞ்சிற் இவர்களுடன் நானும் தம்பியும் குளத்திற்குப் புறப்பட்டோம். குளத்தில் அன்று அவ்வளவு சனநடமாட்டமில்லை. கொக்குகளும் நீர்காகங்களும் நிறைந்திருந்தன. குமார், பாபு இருவரும் நன்றாக நீந்துவார்கள். ரஞ்சிற்றுடன் சேர்ந்து மரக்குற்றியைப் பிடித்துக் கொண்டு நீந்தியபடியிருந்தார்கள். நானும் குந்தவியும், தம்பியும் நெஞ்சளவு தண்ணில் நின்றுகொண்டு ஒருவரிற் கொருவர் முகத்தில் தண்ணி அடித்து விளையாடிக்கொண்டிருந்தோம். இதில் குந்தவி சரியான கெட்டிக்காரி. அவளுடன் போட்டி போட முடியாது. நீர்கொழும்பு ஆறுமுகம் தன்பாட்டில் பாடியபடி கரையில் துணி துவைத்துக் கொண்டிருந்தார். அது ஒரு பழைய திரைப்படப் பாட்டு கேட்பதற்கு இனிமையான நாட்டுப் பாட்டு. பாகப்பிரிவினையில் சிவாஜி சரோஜா தேவியைப் பார்த்துப் பாடுவ தாகவுள்ள பாட்டு.

"தாழையாம் பூ முடித்து
தடம் பார்த்து நடை நடந்து
வாழையிலை போல வந்த கண்ணம்மா"

ஒவ்வொருநாளும் வேலை முடிந்து நிறைதண்ணியில் வரும் நீர்கொழும்பு ஆறு முகத்தின் பழைய படப்பாடல்களை வானொலிப் பெட்டிகளில்லாத அப்பகுதி மக்களிற்கு ஒரு வரப்பிரசாதமென்றுதான் கூறவேண்டும். சுமணதாஸ் பாஸ் கரையில் உடம்பிற்குச் சவர்க்காரம் போட்டுக் கொண் டிருந்தார். இந்தச் சமயத்தில் கரைப்பக்கம் குற்றியுடன் நீந்தி வந்த ரஞ்சிற் மீண்டும் நடுப்பக்கம் திரும்பத் தொடங்கினான். எனக்கொரு யோசனை... எத்தனை நாள் தான் கரையிலையே கிடந்து பழகுவது. மரக்குற்றியைப் பிடித்து நீந்திப் பழகினாலென்ன ரஞ்சிற் சம்மதித்தான். குற்றியை மட்டும் இறுகப் பற்றிக்கொள்ள, எக்காரணம் கொண்டும் கைப்பிடியை மட்டும் தளரவிட்டிடாதே யென்றான். சரியென்றேன். குற்றியைப் பற்றியடி நீந்தத் தொடங்கினேன். குற்றியின் முன்பக்கத்தில் ரஞ்சிற் பின்பக்கத்தில் நான் மரக்குற்றியைப் பிடித்து நீந்துவதிலேற்பட்ட உள்ளக் கிளர்ச்சியில் கரையை விட்டு நீண்ட தூரம் வந்ததே தெரியவில்லை. சுற்றி வரத் தண்ணிர். மேலே நீலவான். பார்ப்பதற்கு அழகாயிருந்தது. என்னையே மெய்மறந்து போனதில் என்பிடியைச் சிறிது நெகிழவிட்டேன். அவ்வளவுதான். .குற்றி என் பிடியைவிட்டு முற்றாகவே விடுபட்டுப் போனது. தண்ணீருக்குள் கைகளை அடித்துக் கொண்டு தத்தளிக்கத் தொடங்கினேன். மூச்சு முட்டியது. நீரை நன்கு குடித்தேன். ஒருமுறை உள்ளே போய் மீண்டபோது ரஞ்சிற் பதைபதைப்புடன் என்னை நோக்கி வருவது தெரிந்தது. அந்தக் கணத்தில் தத்தளிப்பதில் தான் முழுக்கவனம். வேறெந்த யோசனையுமே ஏற்படவில்லை. ஏற்படவும் முடியாது. இரண்டாவது முறை மேலே வந்தபோது ரஞ்சிற் வந்து என் தோள்களைப் பற்றிப்பிடித்தான். அங்குதான் அவன் பிழை விட்டான். நீரில் தத்தளிப்பவனைத் தலையில் பிடித்துத்தான் காப்பாற்ற முயலவேண்டும். தத்தளித்துக் கொண்டிருப்பவன் எது தட்டுப் பட்டாலும் அதனைப் பற்றியிறுகப்

பேரறிவு

செ. ஞானராசா

ஆறறிவு உள்ளதென ஆர் அறிந்து
ஆருக்கு அனுபவமாய் சொன்னார்?
பாரறிவு உள்ளதென்றால் பாரழிசெய்வது யார்
பட்டறிந்து உள்ளபடி சொல்லிடுக!

ஐந்தறிவு உள்ளவைகள் ஐக்கியமாய் வாழ
ஐந்தென்று சொல்லுவதில் நியாயமென்ன?
எந்தறிவு இருந்தாலும் ஏறுமாறாய் நடக்கும்
எழுத்தறிவுக்கும் இறைவன்பாடென்ன?

காகமும் கருங்குரங்கும் காட்டெருமையும்
காத்திருந்து கழுத்தறுப்புச் செய்வதில்லை
தாகமாய் இருக்கும் தனித்துவ மனிதநிலை
தாயைக் கூட இலாபமென்றால் கொல்லும்

போகவிட்டுபுறஞ்சொல்லும் புல்லுருவி
போதைக்குஅடிமையாகும் ஈனப்பிறவி
பாகத்தைப் பிரித்தெடுக்கபடுகுழியில் தள்ளும்
பாதகக் கூட்டணிமனிதனன்றிவேறுயார்?

ஓரறிவுஉள்ளவையும் ஓரணியில் கூடுதுபார்
ஒழுக்கத்தைஉச்சரிக்கும் பிறவியோவேறாகி
நேரமில்லையென்றுநேரத்தைவீணடிக்கும்
நேர்மையற்றபிறவிமனிதனன்றிவேறுயார்?

சீராகவாழ்வமைக்கசீர்திருத்தம் செய்தே
சீரழிந்துபோன இனம் மனிதனன்றுவேறுயார்?
நாராகஉரிபட்டுநாதியற்றுபோயும்
நடுத்தெருவில் பாதியாவதுமனிதனன்றுவேறுயார்

ஊரறிவு இருந்தும் ஊரைவிட்டு ஊர் தேடி
ஊதாரியாகிப் போகும் கேடுகெட்டபிறவி
பேரறிவுஉள்ளதெனபிதற்றுவதில்நியாயமில்லை
பேச்சுத்தான் பல்லக்குநடைமுறைதலைகீழ்

ஆசையைவளர்த்தேஅழிவைஅறுவடைசெய்ய
ஆசைப்படும் பிறவிக்குஆறறிவு இல்லையப்பா
காசையேநோக்காக்கிகாரியம் புரியும்
கயமைப்பிறவிக்குச் "செக்கென்னசிவலிங்கமென்ன"

பிடித்து விடுவான். அதுதான் இயல்பு. அதனைத்தான் நானும் செய்தேன். ரஞ்சிற்றின் கழுத்தைச் சுற்றிக் கைகளால் அவனை இறுக்கிப் பிடித்துக் கொண்டேன். பாவம் ரஞ்சிற் என்னைக் காப்பாற்ற வந்தவன் என்னுடன் சேர்ந்து மூழ்கத் தொடங்கினான். என்னுடன் சேர்ந்து என்னைக் காப்பாற்ற, தன்னைக் காப்பாற்ற தத்தளித்துக் கொண்டிருந்தவனை விட்டு மரக்குற்றியும் தூரத்திற்குச் சென்றுவிட்டது. இருவருமே மூழ்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் நாங்கள் தத்தளிப்பதைக் குந்தவி கண்டுவிட்டாள். கரையில் சவர்க்காரம் போட்டுக் கொண்டிருந்த சுமணதாஸ் பாஸிற்கு விசயத்தைக் கூறினாள். கரையில் வேறு பெரிய மனிதர்கள் சிலருமிருந்தார்கள். எல்லோரும் யோசித்தார்கள் ஆனால் சுமண தாஸ பாஸோ யோசிக்கவில்லை. இதுதான் சுமணதாஸ் பாஸின் முக்கியமான குணங்களிலொன்று. ஆபத்துக்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்வது. தத் தளித்துக் கொண்டிருந்த எங்களருகில் வந்தவர் இருவர் கழுத்துகளையும் தனது கைகளால் இறுக்கிப் பிடித்து எங்களை அசையவிடாதபடி நீந்திக்கொண்டு வந்து கரை சேர்த்தார். அண்மையில் கூட எங்கோவொரு நாட்டில் குளமொன்றில் தவறிவிழுந்த குழந்தை யைக் காப்பாற்ற முடியாமல் நூறுபேர் வரையில் கரையில் நின்று வேடிக்கை பார்த்தார் களென்று பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஏன் அன்று கூட சுமணதாஸ் பாஸைத்தவிர வேறு சிலரும் கரையில் நிற்கத்தான் செய்தார்கள். வேடிக்கை பார்க்கத் தான் செய்தார்கள். ஆனால், சுமணதாஸ் பாஸ் மட்டும் தான் ஒன்றைப் பற்றியும் யோசிக் காமல் எங்களைக் காப்பாற்ற முயன்றவர். ஒருவரைக் காப்பாற்றவே தயங்குவார்கள். அதிலும் தத்தளிக்கும் இருவரைக் காப்பாற்றுவ தென்றால் சுமணதாஸ் பாஸ், உனக்கு நெஞ்சுத் துணிவு மிகவும் அதிகம்தான். இன்று உன்னால் உயிர் கொடுக்கப்பட்ட நான் இருக்கிறேன். ஆனால் நீ... பாஸிற்கு என்ன நடந்தது? சுமணதாஸ் பாஸ் சுட்டுக் கொல்லப்பட்டார். காரணம் உளவாளி,

தமிழர் களிற்கெதிராக சிங்கள இராணுவத்துடன் ஒத்துழைத்தார். அவர் குடும்பத்திற்கென்ன நடந்தது? மனைவி பிள்ளைகள் எல்லோருமே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? சுமணதாஸ் பாஸுடன் சேர்ந்து அவர்களும் உளவு கூறினார்களா? சிங்கள இராணுவத்திற்குத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்தார்களா? சந்தேகத்தின் வித்து இங்குதான் முளைவிடுகின்றது. விசாரணை நடக்கவில்லை, சாட்சிகள் வரவழைக்கப் பட வில்லை, முழுக்குடும்பத்திற்குமே தண்டனை வழங்கப்பட்டுவிட்டது. பாதிக்கப் பட்டதனால் தான் இன்று எம்மக்களின் போராட்டமே வெடித்துக் கிளம்பியுள்ளது. அதில் நீதியிருக் கின்றது. நியாயமிருக்கின்றது. அந்தப் போராட்டத்தை மாசு படுத்தக் கூடாது. கொச்சைப் படுத்தக் கூடாது. அப்பாவிகளின் உயிர் களிற்கு உத்தரவாதம் தேவை. அவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும். அரசுடன் சேர்ந்தியங் குகின்றார்கள் என்பதற்காக, தமிழ் இளைஞர் களின் குடும்பங்களையே ஒட்டு மொத்தமாகப் போட்டுக் கொன்றுவிட முடிகிறதா? ஒரு குடும்பத்து உறுப்பினர்களிலேயே பல்வேறுபட்ட கருத்துள்ளவர்கள் இருக்கும் போது. சுமணதாஸ் பாஸை நான் கடைசியாகச் சந்தித்தது வன்னிமண்ணை விட்டு யாழ் மண்ணிற்குப் பழையபடி திரும்பியபோதுதான். அதன் பிறகு அவரை நான் சந்திக்கவேயில்லை. பல வருடங்கள் ஓடிவிட்டன. நான் அறிந்த சுமணதாஸ் பாஸ் அதன்பிறகு முற்றாகவே மாறிவிட்டிருக்கலாம். உண்மையிலேயே இராணு வத்தின் உளவாளியாக செயலாற்றியிருக்கலாம். சூழல் யாரைத்தான் விட்டது. அல்லது இன உணர்வைப் பயன்படுத்தி மக்களைத் தூண் டுவதற்கு அந்தக் குடும்பத்தையே பலியாக்கி யிருக்கலாம். ஏனைய சிங்களவர்களை அப்பகுதிக்கு வரக்கூடாதென்று எச்சரிப்பதற்காக அச்செயல் புரியப்பட்டிருக்கலாம். உளவாளி யென்று உன்னோடு சேர்ந்து முழுக் குடும் பத்தையும் கூண்டோடு கைலாசமேற்றி அனுப்பிவிட்டார்கள். நியாயப் படுத்து வதற்கா ஆட்களில்லை. எதையுமே நியாயப் படுத்த அடுக்கடுக்காக அள்ளி வீசக் கார ணங்களாயில்லை. சொந்தச் சகோதரர் களையே தெருவில் எரித்துப் போட்டுவிட்டு அதற்குமொரு நியாயம் கற்பித்த பரம்பரையைச் சேர்ந்தவர்களல்லவா நாங்கள். வழக்கம்போல் இதற்கும் காரணங்களை அள்ளி வீசுவோம்.

"பாஸ் இராணுவத்திற்கு உளவு சொன்னான்" "பாஸின்ற மனுசிக்கும் இராணுவத்திற்கும் அப்படியிப்படி ஏதோ தொடர்பாம். விட்டு வைக்க கூடாது" "அவங்கட பிள்ளைகளும் சேர்ந்துதானாம்." "போராட்டப் பாதையில் இதையெல்லாம் விட்டு வைக்ககூடாது"…. ஆனால் எனக்குத் தெரிந்த நீ. என்னைவிட அம்மண்ணுடன் உனக்குத்தான் அதிக சொந்தம், நாங்கள் முதன்முறையாக வந்தபோதே அந்தப் பகுதி காடுமண்டிப் போய்க் கிடந்தது. ஆனால் நீ வந்தபோதோ நான் பிறந்திருக்கவேயில்லை. அந்தப் பகுதி எந்த நிலையில் இருந்திருக்கும். இளைஞனான நீ கனவுகளுடன் கற்பனைகளுடன் புதுமண்ணில் வாழ்க்கையைத் தொடங்கியிருப்பாய், திட்டங் கள் பல போட்டிருப்பாய். எல்லாம் அழிக்கப் பட்டுவிட்டன. உன் கற்பனைகள் மட்டுமல்ல. இன்று என் கற்பனைகள் கூடத்தான். என் கனவுகள், கற்பனைகள். வாழ்க்கைத் திட்டங்கள் அழிக் கப்பட்ட நிலையில் எனக்கோ அன்னிய நாடொன்றில் அகதிவாசம், உனக்கோ இவ்வுல கிலிருந்தே அன்னிய வாசம், 'போராட்டம்' , 'இராணுவத் தீர்வு' என்று பெயரில் இன்னும் எத்தனை அப்பாவி உயிர்கள் பலியாகப் போகின்றனவோ? போரில் நேரடியாக ஈடுபட்டவர்களின் அழிவைவிட, இதுவரை அழிந்துபோன, பாதிக்கப்பட்ட அப்பாவி உயிர் களின் எண்ணிக்கைதான் மிகமிக அதிகம். உலகம் முழுவதிலும் நிலைமை இதுதான். இதன் முடிவு தானென்ன.

பகிர்வோம்….

ஈழமும் தமிழும்

ஆறுமுக நாவலரும் வித்துவான் **மீனாட்சி சுந்தரம்பிள்ளை**யும் ஒரே காலத்தவர். ஒருமுறை பனிக்காலத்திலே காவேரி நதியிலே நீராடும்போது உடல் நடுங்கியதால் **பனிக்காலம் கொடிது** என்று நாவலரை நோக்கிப் பிள்ளை அவர்கள் கூறினார். நாவலரும் பதிலுக்கு **பனிக்காலம் நன்று** என்று கூறினார். சூழ இருந்த மாணவர்களுக்குப் புரியவில்லை நாவலரின் பதில் புரியவில்லை.

பின்னர், **பனிக்கு ஆலம் நன்று – பனியைவிட ஆலம் (விசம்) நன்று** என்று தாமும் மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு ஒத்தாகக் கூறியதைத் தெளிவுபடுத்தினார்.

சுமணதாஸ் பாஸ் உன்னையும், உன் குடும்பத்தையும் "உளவாளியென்று பரலோகம் அனுப்பி வைத்தவர்களிற்கு உன்னையும் தெரியாது. உனக்கும் அந்த மண்ணிற்கு மிடையிலிருக்கும் பந்தமும் புரியாது. அவர்கள், நீ அந்த மண்ணில் காலடிவைத்து ஆண்டுகள் பல கழிந்து இவ்வுலகில் அவதரித்திருக்கலாம். தெரிந்திருக்க நியாயமில்லைதான். ஆனால் எனக்கு. காடுமேடுகளென்று குளங்களென்று உன்னுடன் அலைந்து திரிந்த எனக்கு உன்னைத் தெரியும், உன் நெஞ்சையும் நல்லாய் புரியும். நான் நிச்சயமாக நம்புகிறேன். நீ உளவாளியாகியிருக்க முடியாது. என் உயிரைக் காப்பாற்றும் போது நான் தமிழன் நீ சிங்களவனென்று நீ நினைத்திருக்கவில்லை. மனிதனென்றுதான் எண்ணினாய். அந்த மனிதாபிமானத்தை எனக்கு விளங்கும். என் எதிர்பார்ப்பையும் மீறி உண்மையிலேயே காலம் உன்நெஞ்சிலும் இனஉணர்வுகளை விதைத்து விட்டிருந்தால். அதற்கும் கூட உனக்கும் உன் குடும்பத்தவர்க்கும் கிடைத்த தண்டனை கொடியதுதான். மிகவும் கொடியதுதான்."

"தவளைக்குஞ்சுகள் என்ன விநோதம்
ஆடிப்பாடியோடி ஆடும் விநோதம்"

சுமணதாஸ் பாஸ் குமிண்சிரிப்புடன் மழலைத்தமிழில் பாடிக்கொண்டிருக்கின்றார். வீசும் காற்றில் இறுக்கமான அந்தக் குடும்பிகூட இலேசாக ஆடுகின்றது. அவரைச் சுற்றி நாங்களும் அந்தப் பாடலைப் பாடியபடி ஆடிக்கொண்டிருக்கின்றோம். வாழ்க்கையில் எவ்வளவு அர்த்தம் பொதிந்து கிடக்கின்றது. தவளைக்குஞ்சில் தெரியும் விநோதமாகத்தான் வாழ்வேயிருக்கின்றது. "தவளைக் குஞ்சினோடு வாழ்க்கையை விநோதமாகப் பார்த்தாய் நீ, ஆனால் உன் முடிவே இவ்விதம் விநோதமாக முடியுமென்று யார் கண்டது? சுமணதாஸ் பாஸ் நீ எங்கேயிருக்கின்றாய்? விரிந்து கிடக்கின்றது பிரபஞ்சம், புதிர் நிறைந்து முடிவற்ற தொடராக விரிந்து கிடக்கின்றது தொலைவில் இதன் ஆழங்களிலெங்கோ இருந்தபடி நீ இன்னமும் தவளைக் குஞ்சுகள் என்ன விநோதம் பாடிக் கொண்டிருக்கலாம். அதே மழலைக்குரலில் அதே குமிண் சிரிப்பில். உன்னைச்சுற்றி உன்னைக் கொன்றவர்களே ஆடிப் பாடிக் கொண்டிருக்கலாம். யார் கண்டது? உண்மையை அறிந்தவர் யாரே? நனவிடை தோய்ந்துவிட்டு நனவிற்கு வருகின்றேன். கண்கள் பனித்துப் போய்க் கிடக்கின்றன. மனம் பாறையாகிக் கிடக்கின்றது. 'பியர்சனை' நோக்கி எயர் கனடா வொன்று விரைவதை அந்த சிவந்த மேப்பிள் இலை காட்டி நிற்கின்றது. யதார்த்தம் உறைக்கின்றது.

❍❍❍

கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர் எம்.சின்னத்தம்பி

மலையகத்தின் முதலாவது பேராசிரியரான எம்.சின்னத்தம்பி தனது எண்பதாவது வயதில் காலமானார் என்ற செய்தி பலரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மலையக்தில் அறிவியல் சமூகத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியவர்இவர். பதுளை ஸ்பிறிங்வெலியைச் சேர்ந்த பேராசிரியர் தனது பாடசாலைக் காலத்திலேயே சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவராகத் திகழ்ந்தவர். இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பை மேற்கொண்ட இவர், சகல துறைகளிலும்ஆளுமை மிக்கவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக பொருளியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின்னர் பேராசிரியரானார். இவர் மலையக மக்களைப் பற்றி ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர்.

சிறந்த ஆங்கிலப் புலமைமிக்க இவர் தேயிலைக் கைத்தொழில் தொடர்பில் தனது ஆங்கில எழுத்துக்கள் மூலமாக மலையக மக்களைப்பற்றிச் சர்வதேசம் புரிந்து கொள்ள வைத்தவர். தோட்டத்தொழிலாளர்களின் சம்பளவிடயம் தொடர்பில் பல ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தவர்.மலையகமக்கள்தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்தரங்குகள்பலவற்றில் கலந்து கொண்டவர். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தித்து ஞானம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது.

கவிஞர் காசி ஆனந்தனின் பெண் பாக்கள்: ஓர் அறிமுகம்

பேராசிரியர் செ.யோகராசா

தமிழ்மொழி பற்றியும் தமிழினம் பற்றியும் உணர்ச்சி மீதூரப் பாடிவந்த கவிஞர் காசி ஆனந்தன் தமிழ்ப் பெண்கள் விடுதலைபற்றிப் பாடிய 52 வெண்பாக்களின் தொகுப்பே அண்மையில் வெளிவந்த 'பெண் பா' தொகுதியாகும். இப்பொருளில் ஆண் கவிஞரொருவர் பாடிவெளிவரும் முதற் தனித்தொகுப்பு என்ற முக்கியத்துவம் இதற்குள்ளது.

"அடி
வாங்கி
வெடித்த
கன்னம்
தடவி
எங்கோ
ஓர்
இருள்
மூலையில்
பொருமி
அழும்
பெண்ணுக்கு"

இந்நூலைச் சமர்ப்பணம் செய்துள்ள கவிஞர், முன்னுரையில் இந்நூலை எழுதியதன் நோக்கம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

பெண்கள் மேல் எந்தநாடும் (கவிஞர் ஆரம்பத்தில் அமெரிக்கா, இத்தாலி, பிரிட்டன், ஆஸ்திரேலியா, சீனா, தாய்லாந்து, சீனா, பிரான்சு, அரபு நாடுகளில் பெண்களுக்கு நிகழும் அவலங்களைச் சுருக்கமாக நினைவு கூர்ந்துள்ளார். க-ர்) இழைக்காத பெருங்கொடுமை – தமிழ்நாட்டில் கண்கள் முன் கண்டு பெருமூச்செறிந்தோம்.

தாய்ப்பால் கேட்டழுத பெண்பிள்ளைக்குக் கள்ளிப்பால், வாய்ப்பால் ஊட்டித் தாழ்வுற்றது தமிழ்நாடு.

'கல் ஆனாலும் கணவன்' என்னும் பெண்ணின் இல்வாழ்க்கை தமிழ்நாட்டில் கருகியே கிடந்தது கண்டோம்.

பெண்ணானவள் தமிழ்நாட்டில் திருவுக்குத் திருமதிஆகி மண்ணானாள்.

கேடில்லை பெண்ணுக்கு என்று சொல்லத் தமிழ்நாட்டில் வீடில்லை.

தாலியும் இங்கேதான் கட்டுகிறான். பெண்ணுக்கு வேலியும் இங்கேதான் கட்டுகிறான்.

பெண்பால் விடியல் உடன்தேவை எனக் கருதியே பெருநெருப்பை மண்பால் வைத்தேன்....

உலகளாவிய நிலையிலே தாய்மையின் உயர்வுபற்றி பலபட விவரிக்கும் கவிஞர் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுவார்:

"கனல் நெஞ்சன் மாசேதுங் கைச்கோச் சிமினை
சினவேங்கை சேகுவே ராவை – முனையிடை
உற்றிபகை மோதி உடைத்த நேதாசியைப்
பெற்ற வயி றன்றோ பெரிது"

தமிழ்நாட்டுச் சூழலில் பின்வருமாறு கண்டுகொள்கின்றார்:

"புலமைக்கோர் அவ்வை! உளமைக்கோர் ஆண்டாள்!
தலைமைக்கோர் வேலு நாச்சித்தாய்! –கலைமைக்கோர்
மாதவி! வீரவலிமைக்கோர் மாண்குயிலி
ஈது தமிழ் மாதர் இனம்"

ஈழத்துச் சூழலில் 'பார்வதி' யையும் அங்கயற் கண்ணியையும் செங்கோடியையும் கவிஞர் பாராட்டிப் பேசுவது எதிர்பார்க்கக் கூடியதே!

தமிழ்ச் சமூகச் சூழலிலே பெண்கள் படிப்படியாக சமத்துவ நிலைக்குள்ளாகி வந்தமைபற்றி வெவ்வேறு நோக்குடனும் போக்குடனும் விவரிக்கின்றார். உ-ம்:

"இல்லாள் மனையாள் எனும் பெயரால் இல்லகன்று
செல்வாள்பெண் என்றே சிறைசெய்தான்! – பொல்லான்
தலைக் கனத்தான் ஊர்சுற்றிவந்தான்.. தலைவி
நிலைக் கதவு தாண்டா நிலம்.

தாலி கழுத்தின் விலங்கு! தளைமெட்டி
காலின் விலங்கு! கணவனெனும் – வேலி
கொடுவிலங்கு! வஞ்சி நொடிந்தாள்! கொடியர்
இடுவிலங்குக் கானாள் இரை.

"நாணல் குணமென்றான்.... ஆண் வல்லமை நட்டான்
கூனல் என ஆனாள் நிமிர்கோதை – மானல்லோ
பெண் என்றான் – – வேங்கை எனும் பெண் நிலைதாழ்ந்தாள்
தண்ணென்றாயிற்றுத் தழல்.

நாடாளு மன்றினில் முன்னூறு நாற்காலி
ஆடவர்க்காம் மாதர்க் கறுபதாம் – கேடர்கள்
மக்களாட் சிக்கொள்கை மாண்பு முக்கினார்
எக்களிப்பா? இல்லை! ஏய்ப்பு!

தொடர்ந்து, பெண்களிடம் பேரெழுச்சியைஏற்படுத்த முற்படுகின்றார் கவிஞர்:

"தறுக்கின் வெறிஆட வர்நினைத் தள்ளி
இறுக்கி அடைத்த இருட் கூண்டை – நொறுக்கி
நிமிர்ந்து வா பெண்ணே! நிலம் நீ பிளப்பாய்
திமிர்ந்து நில்! காட்டு திறன்.

"வீரம் எனில் மீசை வேண்டுமோ? வீரத்தில்
ஆரும் நினைக்கிணைஆவாரோ? – நேரம்
கனிந்தது நங்காய்.... கனிக நின் ஆற்றல்
குனிந்தது போதும் பெண்குலம்.

பெண்கள் அனுபவிக்கும் அவலங்கள் பலவற்றைக் குறிப்பிட்டு–உதாரணமாக, சிசுக்கொலை, பாலியல் வல்லுறவு, வரதட்சணைக் கொடுமை முதலியனவற்றை விவரித்து–மேலும் ஆக்ரோஷத்தையூட்டி எதிர்ச் செயற்பாட்டிற்குத் தூண்டுகின்றார்:

"கள்ளிப்பால் பெண்சேய்க் களிப்பாய் எனக் கணவன்
துள்ளினால் மோதும் துணிவுகொள் – தள்ளி
நிலம் வீழ்த்து நஞ்சனை! நின்றெதிர் கொள்க!
புலம்பாதே! போர் நீ புரி!
கத்தி மறைத்து வை! பால் வெறியன் கண்முன்
செத்துவிழக் குத்தி அறம் செய்க! பொத்திப்
பிழிந்துன் உடல் சுவைப்பான்! பெண்ணே! பின்கொல்வான்
ஒழிந்தான்! எனநீ உறுமு
மணமுடிப்பின் முன்னேபெண் கேட்கும்மாப் பிள்ளை
பணமுடிப்புக் கேட்டால் பழிதீர் – கணநொடிப்பில்
"போடா!" என விரட்டு! பொல்லான் வாழ்க் கைத்துணை
கூடாதென உரத்துக் கூவு.

அடுப்பங்கரைவாழும் நின்கை அகப்பை
கடுப்பு மனக் கணவன் கையில் – கொடுப்பாய் நீ
பண்பே இலான் அதுகைப் பற்றான் எனில் விலகு!
பின்பேன் இல் வாழ்க்கை பிரி!

இறுதியாக உரத்த, உறுதியான நம்பிக்கையோடு தமது தொகுப்பை இவ்வாறு முடித்துக் கொள்கின்றார்:

“அடிமை விலங்கறும்! மாதர் அணி வெல்லும் விடியும்! கொடுமை விலகும் – நொடியில் உலகு சிலிர்க்கும்! அறம் உயிர் கொள்ளும் நிலவும் பேரின்பம் நிலைத்து”

கவிஞ இளம்பிறையின் கூற்றோடு இந்நூல் அறிமுகத்தை நிறைவுசெய்வது பொருத்தமானது “சமூகத்தளத்திலும் அரசியற் களத்திலும் குடும்பங்களிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துச் சமராடும் இலக்கியம் பெண் பா” (“பெண் பா தந்துதவிய நண்பர் செங்கதிரோனுக்கு நன்றிகள்)

○○○

கண்ணீர் அஞ்சலி

உதயணன் (இராமலிங்கம் சிவலிங்கம்)

பிரபல மூத்த எழுத்தாளரான உதயணன் கனடாவில் 23-07-2019அன்று காலமானார் என்ற செய்தி இலக்கிய உள்ளங்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. உதயணன் இலங்கையில்இருந்த 1957 - 1980 காலப்பகுதிகளில் எழுபதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதிக் குவித்தவர். கலைச்செல்வியில் ‘இதய வானிலே’, ‘மனப்பாறை’ ஆகிய நாவல்களும், வீரகேசரிப் பிரசுர நாவல்களாக ‘பொன்னான மலரல்லவோ’, ‘அந்தரங்ககீதம்’ (சில மாறுதல்களுடன் ‘மனப்பாறை’) போன்ற நாவல்களையும் எழுதியிருக்கின்றார். மேலும் மித்திரன் நாளிதழில் ‘மனக்கோட்டை’ தொடர்கதை, சிந்தாமணியில் ‘கொடிமல்லிகை’ குறுநாவல் வந்துள்ளன. அத்துடன் நகைச்சுவைக் கட்டுரை, இதழியல், மொழிபெயர்ப்பு என்பவற்றிலும் சிறந்து விளங்கியவர்.

1983இல் இருந்து 25 வருடங்கள் பின்லாந்தில் வசித்து வந்த உதயணன், ‘பின்லாந்தின் பசுமை நினைவுகள்’ நூலை எழுதியவர். உலகிலே சிறந்த கல்விக் கட்டமைப்பைக் கொண்டு விளங்கும் நாடுகளில் பின்லாந்து முதன்மையான இடத்தை வகிக்கின்றது. அத்தகைய நாட்டில் ஹெல்சிங்கி பல்கலைக் கழகத்தில் ஆய்வு உதவியாளராகவும், பகுதிநேர தமிழ்மொழி விரிவுரையாளராகவும் 1986இல் நியமனம் பெற்றார். 19 வருடங்கள் அங்கு தமிழ் கற்பித்தார். பழந்தமிழ் இலக்கியங்களைப் பின்னிஷ் மொழியில் மொழிபெயர்க்கும் பணி இவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் திருக்குறள், சிலப்பதிகாரம் என்னும் படைப்புகளில் இவர் பங்களிப்புச் செய்திருந்தார். அத்துடன் பின்லாந்தின் தேசிய காவியமான செய்யுள் வடிவில் அமைந்த ‘கலேவலா’ **(KALEVALA)** என்பதை மூலமொழியான பின்னிஷ் மொழியில் இருந்து தமிழிற்கு மொழிபெயர்த்தார். ஞானம் 202ஆவது இதழில் (மார்ச் 2017) இவர் அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கப்பட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துகிறோம்.

மறந்து... மரத்து...

வராந்தாவில் இருந்த நாற்காலியை இழுத்துவந்து மேசையின் அருகே போட்டார் சேதுபதி.

''எப்பிடியும் இண்டைக்கு அந்தக் கதையை எழுதிப்போட வேணும்'' அதில் அமரும்போதே மனதினுள் உறுதி எடுத்துக்கொண்டார்.ஒரு வாரத்திற்கு மேலாக .இப்படி நினைப்பதுடனே காலம் கரைந்துவிடுகிறது. எழுதுவதற்கான தாளை எடுத்து வைத்தவர் பேனாவைத் தேடத் தொடங்கினார். அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இது இன்றைக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை அல்ல.சிறிது காலமாகவே அவரை அலைக்கும் ஒன்று. வைத்த இடத்தை மறந்துவிட்டு ஒவ்வொரு பொருளையும் தேடி சேதுபதி அலையும் அலைச்சலை சொல்லி விளங்கவைக்க முடியாது. வீட்டிலிருப்பவர்களுக்கும் இது பெரும் தொல்லை என்பது அவருக்கும் புரிகிறது. ஆனால் மறதியை மாற்ற இயலவில்லையே. ஒரு பொருளை ஒரே இடத்தில் வைக்க வேண்டும் என்று முடிவெடுத்திருந்தாலும் அவ்வப்போது அப்படிச் செய்ய இயலாதுபோய்விடுகிறது.

மேசையின் வலதுபுறமாக வைத்திருக்கும் நாட்குறிப்பின் அருகில் பேனாவை வைக்கவேண்டும் என்பதுதான் அவர் கைக்கொள்ள எண்ணிய பழக்கம். ஆனால் அவ்விடத்தில் அதைக் காணவில்லை.

இதுமட்டுமல்ல.இன்னும் பல சிக்கல்கள். சில மாதங்களுக்கு முன்பாயிருக்கவேண்டும்.அதுவும் சரியாக நினைவிலில்லை. கோவிலிலே தேவாரம் பாடிக்கொண்டிருந்தபோது அந்தத் தடுமாற்றம் ஏற்பட்டது. தேவாரத்திற்கு அடுத்து திருவாசகம் பாடியவருக்கு திருவிசைப்பா நினைவிற்கு வர மறுத்தது. ஒரு திருவிசைப்பா மட்டுந்தான் அவருக்குத் தெரியும் என்றில்லை.இதுவரை அவர் பாடிவந்த பல திருவிசைப்பாக்களுள் ஒன்றுகூட நினைவிற்கு வர மறுத்தபோது அவர் தவித்துவிட்டார். அதன் பின்னர் இப்படியான மறதிகள் மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கின.

பேனா எங்கே போயிருக்கும்?

அது எப்படிப் போகும்? அதற்குக் கால்கள் இருக்கிறதா? எழுந்து போகக் கால்கள் இல்லாவிட்டாலும் விழுந்து உருண்டு போயிருக்கலாம். வேடிக்கையாகத் தலை நீட்டிய எண்ணம் நியாயமான ஒரு சந்தேகத்தை இழுத்துவரவே கீழே குனிந்து கண்களைச் சுழலவிட்டார்.கண்கள் தேடியலைந்ததுதான் மிச்சம். அதைக் கண்டுபிடிக்க இயலவில்லை. கதை எழுதுவது இன்றும் நடக்காது என்று முடிவு செய்யவும் மனம் மறுத்தது. ''இப்படியே மறதியை வளரவிடாதே'' என்று அது அவரை எச்சரித்தது. பேனாவை மட்டுமா அவர் இப்படித் தேடுகிறார்?

அன்றொரு நாள் பஸ் ஏறுவதற்குச் சென்றுகொண்டிருந்த சேதுபதியை ஒருவர் இடைமறித்தார்.

''கண்டு கனகாலம். எப்படி இருக்கிறீங்கள்?'' என ஆரம்பித்த அந்த மனிதர் பல விசாரிப்புகள் பழங்கதைகள் என கதைத்துக்கொண்டே போகிறார். அவரது வினாக்களுக்கு சேதுபதியின் வாய் பதில் கூறிக் கொண்டிருந்தாலும் மனம் உரையாடலில் ஈடுபடவில்லை. யார் இவர்? ஏன்ற தேடலில் அது அலைந்துகொண்டிருக்கிறது. நன்றாகப் பழகிய முகம் மிகவும் தெரிந்த ஒருவர்.யார் இவர்? கேள்வியின் பதில் சிக்குப்பட வேயில்லை. அவர் விடை பெற்றுச்சென்ற பின்னரும் பதிலைத் தேடிக் கொண்டே மனம் அலைந்தது.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

இரண்டு நாட்களின் பின்னர் ஒரு காலைப் பொழுதில் வீட்டின் முன் ஆறுதலாக நின்று வீதியில் போகின்றவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது ''அது நான் முரசு மூட்டையிலை வேலை செய்யேக்கை என்னோடை

வேலை செய்த சுப்பையா''என்ற ஞாபகம் திடீரென்று வந்து நின்றது. தேடும்போது கிட்டாது போய்விடுவதும் பின்னர் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மாயாஜாலம் போன்று தென்படுவதும் எதனாலென்று அவருக்குப் பிடிபடவில்லை.

இந்தப் பேனாவும் அந்த விளையாட்டுத்தான் காட்டப்போகிறது. அதனால் எழுத நினைத்ததை எழுதமுடியாமல் போகப்போகிறது. அருமை யான கரு ஒன்று பஸ்ஸில் பயணம் செய்யும் போது மனதில் தட்டுப்பட்டது ஒரு வீட்டின் முன்னால் இருந்த தரிப்பிடத்தில் யாரோ இறங்கினார்கள். திரும்பிப் பார்த்த சேதுபதியின் மனதில் அங்கிருந்த வீட்டு முற்றத்திலே பந்தலாக்கப் பட்டிருந்த மல்லிகைக் கொடி தனியிடம் பிடித்துக்கொண்டது.பச்சைப்பசிய இலைகளை விரித்து வெண்மலர்களை அழகழ காக அதன் மேற் பதித்து மல்லிகைப் பந்தல் சிரித்துக் கொண்டிருந்தது.அவர் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தார். இல்லையில்லை. அவரது உடல் பயணித்துக்கொண்டிருந்தது. உயிர் நழுவி தென்றலாய் தவழ்ந்து மல்லிகைப் பந்தலினுள் விரவிக்கிடந்திட அது தளிர்க் கரம் நீட்டி சேதுபதியின் மனதில் கதையெழுத ஆரம்பித்தது. பயணம் முடிவுறும்வரை அந்தக் கற்பனையிலேயே மூழ்கிக் கிடந்தவர் அதை எதிலாவது குறித்து வைக்க எண்ணியும்

வசதிப்படாது போய்விட்டது.

அன்று வீட்டிற்கு வந்ததிலிருந்து பல தடவைகள் ஓரிடத்தில் அமர்ந்து தன்னுள் பிரவகிக்கும் கதையை எழுத எண்ணியும் ஏதேதோ குறுக்கீடுகள் தடைபோட்டுக்கொண்டிருந்தன. இன்றும் இந்தப் பேனா எங்கே போய்த் தொலைந்ததோ?

''அது சரஸ்வதியின் ஆயுதம்.அதன் மேல் கோபங் கொள்ளக்கூடாது'' என்று அறிவு தடுத்தாலும் கோபம் கொதித்துப் பொங்கியது. அந்தக் கோபம் பேனாவின் மேலா? தன் மேலா? என்பதும் புரியவில்லை. பேனாவை வைத்தது சேதுபதிதானே. எங்கே வைத்தாரென்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா?

உண்மைதான். ஆனால் தானேசெய்த வற்றையும் தன் கண்முன்னால் நடந்தவற்றையும் அவரால் நினைவிற்குக் கொண்டுவர இயல வில்லையே.

ஏன்?

தான் செய்யும் வேலையில் கருத்தூன் றாது மனம் வேறொன்றில் தாவிநிற்க செயற் படுவதால் அப்படி நினைவில் நிற்காது போய் விடுகின்றதோ?

இல்லையில்லை. அவர் நினைவில் வைத் திருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு மீண்டும் மீணடும் மனதில் அழுத்திப் பதித்தவைகூட மறந்துபோய் விடுகிறதே. இந்தப் பேனாவை சரியாக ஓரிடத்தில் வைத்தெடுக்க வேண்டு மென்று எவ்வளவு முயற்சிக்கின்றார். அதையே செய்ய இயல வில்லையே. அவரும் பல வகைகளில் முயன்று பார்த்துவிட்டார். பய னேதும் கிட்டவில்லை. மனதினுள் கவலை கவிந்து படர்கிறது.

வரவர மறதியின் எல்லை அதிகரித்துச் செல்கிறது. முன்னர் மேடையில் ஏறினால் எடுத்துக்கொண்ட பொருள்பற்றி பேசலாம் என்று எண்ணியிருந்தவற்றைவிட புதியபுதிய பல விடயங்கள் வற்றாத அருவியாய் ஊற்றெடுத்துப் பெருகும். இப்போது பேசத்தொடங்கியதும் எண்ணிவந்தவைகூட எங்கோ ஓடி மறைந்துவிட அதனால் தடுமாற்றமும் தவிப்பும் மேலெழுந்து மூளையை மூழ்கடித்து மரத்துவிடச் செய்கின்றன. இத்தகைய அனுபவம் ஓரிரு தடவைகள் ஏற்பட்ட பின்னர் மேடைப் பேச்சுக்கென வந்த அழைப்புகளை மனதிலேற்பட்ட தயக்கம் ஏதேதோ சாக்குப்போக்குகளைக் கூறித் தவிர்த்து விட்டது.

''எழுதவேண்டும். எழுதவேண்டும்'' என்ற தவிப்போடு பேனாவைத் தேடுகிறாரல்லவா? பேனா கிடைத்து எழுத அமர்ந்தால் தேவையான

சொற்களைத் தேடி கிட்டாத நிலையில் மூளை களைத்துப்போக அப்படியே மூடி வைத்துவிட்டு எழுதாது எழுந்து போகவும் நேர்கிறது.

"இது என்ன சோதனை இறைவா?" என்று மனதிற்குள் புலம்புவதைத் தவிர அவரால் எதுவும் செய்ய இயலவில்லை.பேசுவதைக் கைவிட்டதுபோல் எழுதுவதையும் கைவிட நேருமோ என அவரது மனம் நடுங்கியது.

"இல்லை. அப்படி எதுவும் நடக்காது" என மனம் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாலும் ஆழ்மனம் அதை நம்பமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது.' பேனாவை எப்படியாவது தேடி எடுத்து உடனே எழுதத் தொடங்கு' என அழுத்தங்கொடுக்கவுஞ் செய்தது.

மல்லிகையின் தளிர்க் கரங்களோடு கரமிணைத்து பின்னிப் பிணைந்து அவருள் வளர்ந்த நிர்மலியின் அற்புதக் கதை எழுதப்படவேண்டும் என்று மனம் ஆவலுறுவது இயல்புதானே.

சேதுபதி முயற்சியைக் கைவிடாது தான் பேனாவை எங்கெல்லாம் வைத்திருக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன என்று ஒவ்வொன்றாகச் சிந்தித்து அந்த இடங்களி லெல்லாம் தேட ஆரம்பித்தார் .இப்படி மூளையை சிந்திக்க வைப்பதும் நல்லது என அவருடைய நண்பர் தவநாதன் கூறியதும் இப்போது அவரது நினைவிற்கு வந்தது. தனது மறதியைப் பற்றி சேதுபதி தவநாதனிடம் கூறி கவலைப்பட்டபோது அவர் கூறிய சில ஆலோசனைகளுள் இதுவும் ஒன்று. தவநாத னுடன் அன்று கதைத்தவையெல்லாம் நினைவில் இருக்கிறதுதானே.ஆனபடியால் எனது நிலை ஒன்றும் மோசமில்லை எனும் மன ஆறுதலும் கூடவே சேர்ந்து அவரை ஆசுவாசப்படுத்தியது.

இந்த நேரம் பார்த்து சேதுபதிக்குஅவரது சின்னையாவின் நினைவு அவர் அழைக்கா மலேயே வந்துநின்றது. அது அவருக்கு மறதி இல்லை என்று கூற வந்ததா? அல்லது மறதி நோய் எப்படியெல்லாம் துன்புறுத்தும் என்பதை சொல்லாமல் சொல்வதற்கு வந்ததா?

சேதுபதியின் தந்தையாரின் தம்பிதான் சின்னையா. சின்னையா சாதாரணமாக உறவாடிய நாட்கள் சேதுபதியின் நினைவில் இல்லை. சின்னையா மறதி நோயின் வசப் பட்டவராக எதையும் நினைவில் நிறுத்தி வைக்க முடியாதவராக எவரையும் அடை யாளங் காணமுடியாதவராக எடுப்பார் கைப் பிள்ளையாகக் காலம்போக்கியதுதான் நினைவில் பதிந்திருக்கிறது.

"இவள் சர்மிளா என்னை மறந்துபோனாள். எனக்கு இண்டைக்குச் சாப்பாடு தரேல்லை."

திடீரென்று தன் மகளின் மீது குற்றம் சுமத்துவார் சின்னையா. ஆனால் அரை மணி நேரத்திற்கு முன்புதான் சாப்பிட்டிருப்பார். அதை அவருடைய ஞாபகத்திற்குக் கொண்டு வர முயற்சிப்பவர் தோல்வியடைவது நிச்சயம். சர்மிளா முயன்று முடியாதுபோன அனுபவத் தினால் போலும் அந்த முயற்சியில் ஈடுபடுவ தில்லை. சிறிதளவு சாப்பாட்டைக் கொண்டு வந்து கொடுப்பாள். உணவு உள்ளே செல்ல மறுக்கும்.

"எனக்கு இண்டைக்குப் பசி இல்லை பிள்ளை." என்று சின்னையா தானே உணவுண்ண மறுப்பதுடன் அந்த நாடகம் முடிவுறும். இப்படி பல நிகழ்வுகள் அவரது மறதியின் காரணமாக அன்றாடம் நடப்பது வழமை

"என்னைத் தெரியுதோ மாமா?" என்று கேட்பவருக்கு சிறிது நேரம் அவருடைய முகத்தைப் பார்த்த பின் "கண் கொஞ்சம் மங்கல். முகம் விளங்கேல்லை."என்றோ "அ...அ... பார்த்த முகம். பேர் ஞாபகம் வருகுதில்லை." என்றோ பதிலளிப்பதுடன் சில வேளைகளில் "நல்லாய்த் தெரியும்.வீட்டை அடிக்கடி வாறனீங்கள்" என்றும் விடையமையும்.அந்தப் பதிலின் பின் சின்னையா நடந்துகொள்ளும் முறை சேதுபதியை நிறையச் சிந்திக்க வைத்ததை அவர் இன்னும் மறக்கவில்லை.

அதன் பின்னர் கேட்டவரின் முகம் நோக்கிக் கதைப்பதை சின்னையா தவிர்க்க முயல்வார். அல்லது வேறு ஏதாவது பொது வான விடயத்திற்குக் கதையைத் திசை திருப்பிவிடுவார். அங்கே இருக்கும் குழந்தை ஒன்றின் விளையாட்டைப் பற்றியோ ஒருவர் அணிந்திருக்கும் ஆடையை அல்லது ஆபரணத்தைப் பற்றியோ உரையாடல் தொடக்கப் படும்.மறதி இருந்தாலும் அதை மறைக்கும் திறமை சின்னையாவிடம் இருந்ததை சேதுபதி அவதானித்திருந்தார். அப்படி யென்றால் மறதிநோய் அவரது திறமையைக் குறைக்கவில்லையா? அல்லது ஓரளவு மட்டுப் படுத்தியிருக்கிறதா? எப்படியோ சின்னையா விடம் திறமையிருந்தது.

சின்னையாவைப் பற்றி சேதுபதி ஏன் இவ்வளவு இப்போது சிந்திக்க வேண்டும்? தானாகவே இவ்வளவு எண்ணங்களும் ஏன் ஓடி வந்து ஒட்டிக்கொள்ள வேண்டும்?

தனக்கும் அதே நோய் வந்துவிட்டதோ என்று மனம் பயங்கொள்கிறதா?

மறதி நோய் பயங்கரமானது, உண்மை. ஆனால் அதைவிடக் கொடியது அது பற்றிய பயம். அந்தப் பயம் அணுக அனுமதிக்கக் கூடாது. மறதி பற்றிய எண்ணங்கள்

எல்லாவற்றையும் தூக்கி வீசிவிட்டு பேனாவைத் தேடி எடுத்தாகவேண்டும். உறுதியுடன் சேதுபதி தேடத் தொடங்கினார்.

இதற்கு முன் எப்போது பேனாவை உபயோகித்தார் என்பது நினைவுக்கு வர மறுத்தது. நினைவுக்குக் கொண்டுவர முயன்றபோது செய்த செயல்கள் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாமே தொடர்பற்று என்ன செய்தார் என்பதே நினைவிலில்லாமல் அறுந்து சிதறிக்கிடந்தன. நினைவுகளை ஒவ்வொன்றாக மீட்டெடுத்து அடுக்கியபோது இடைவெளிகள் சிறிதாகவும் பெரிதாகவும்.....அவற்றிற்கான நிகழ்வுகளைக் கண்டெடுத்து பொருத்த இயலாமல் மூளை அலைந்து களைத்தது.

அ...அன்றைக்குப் பேரனைத் தூக்கி வைத்திருந்த போது அவன் பேனாவை எடுத்தான். பின்பு... பின்பு...அவன் எப்படி சேதுபதியிடமிருந்து போனான்? அது நினைவிற்கு வரவேயில்லை. ஓரிடத்தில் நினைவெதுவும் இல்லாது வெறுமையாகிவிட்டதுபோல் ....

ஏனிப்படி ஆகிறது?

இப்போது மிகுதி வந்து சேரப்போவதில்லை. ஆனால் ஊகிக்கலாம். தாய்தான் வந்து தூக்கிக்கொண்டு போயிருப்பாள். அவள் எங்கேனும் எடுத்துவைத்திருக்கலாம் என்ற ஊகம் சேதுபதியை மகளிடம் இழுத்துச்செல்கிறது.

"வானதி இவன் உன்ரை பெடியன் என்ரை பேனையை எடுத்துக்கொண்டுவந்து உங்கை எங்கையேனும்போட்டவனே?"

"ஓமப்பா.குசினி மேசேலை வச்சிட்டு கொண்டுவந்து தர மறந்திட்டன்."

"அப்பாடா.கிடைச்சிட்டுது"

பேனாவை வாங்கிக்கொண்டு ஆறுதலொன்றுடன் சந்தோசமும் கை கோர்க்க திரும்பிப் போய் கதிரையில் அமர்கிறார் சேதுபதி.. எப்படியும் கதையை எழுதிவிடுவதென்று உறுதியெடுத்துக்கொண்ட மனம் கதையைக் கைகளுக்கு அனுப்பத் தயாராகியது.

கதையைத் தொடங்குவதற்கு அது.... அது....

அவரது மூளை அதைத் தேடத் தொடங்கியது. எப்போது கதையின் கரு அவருள் உருவாகியது?

போன கிழமைதானே எழுதவேண்டும் என யோசித்தார்.உடனே குறித்துவைக்கவும் இயலாமல் போனது.

ஓ! பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்ததால் எழுதமுடியாமல் போனது இப்போது அவருக்கு நினைவு வருகிறது. பஸ்ஸிற்குள் எதையோ கண்டபோதுதான் கதை உருப்பெற்றது. அது என்ன?

கண்ணீர் அஞ்சலி !

திருமதி ஜீன் அரசநாயகம்

இலங்கையின் உலகறிந்த மூத்த ஆங்கில எழுத்தாளரும் கவிஞருமான திருமதி. ஜீன் அரசநாயகம் 30-07-2019 அன்று தனது 88ஆவது வயதில் அமரரானார்.

1931இல் கண்டியில் பிறந்த இவர், தனது கல்வியை கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்றவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்ற பின்னர் ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகத்தில் எம்.ஏ.பட்டம் பெற்றவர். ஜீன் சொலமன் அரசநாயகம் ஒரு பேர்கர் இனப் பெண்மணி. தியாகராசா அரசநாயகம் என்ற தமிழரை மணந்தவர். தேவசுந்தரி, பார்வதி ஆகியோர் இவரது புதல்விகள். இவர் கண்டி சென்ற். அந்தனிஸ் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றியவர். ஜீன் அரசநாயகம் எல்லாமாக 46 நூல்களை வெளியிட்டுள்ளார். தரத்திலும் தொகையிலும் உயர்வான அவரது படைப்புகள் இலங்கையின் இன முரண்பாடுகளைப் பற்றியே பெரிதும் பேசியவை. இவரது படைப்புகள் பிரெஞ்சு, ஜேர்மன், டெனிஸ், சுவீடிஸ், ஜப்பான் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவருக்கு இலக்கியத்திற்கான **சாகித்தியரத்தினா** உயர்விருது 2017ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அது நினைவிற்கு வர மறுத்து எங்கோ மறைந்துகொண்டு "தேடிக் கண்டுபிடி. தேடிக் கண்டுபிடி" என்று அவரைக் கலவரப்படுத்தியது.

அது என்ன என்பதே மறந்துபோன பின் கதை எப்படி நினைவிற்கு வரும்?

வீட்டிற்கு வந்தவுடனாவது குறித்து வைத்திருந்திருக்கலாம் என மனம் ஆதங்கப் பட்டது.

அது எப்படி இயலும்? அப்போது பேனா கிடைக்கவில்லையே. இனி அது மறைந்த கதைதான்.அவரது நினைவில் தோன்றிய சுவடுகூட இல்லாமல் மறைந்த பல கதைகளுடன் இதுவும் சேர்ந்துகொள்கிறது.

சின்னையா அவரது இறுதிக் காலத்தில் வெள்ளைச் சிரிப்பும் வெறித்த பார்வையுமாக இருந்த கோலம் சேதுபதியின் மனதுள் தெரிகிறது.

❍❍❍

வி. ஜீவகுமாரன் என்னும் நான்

வி. ஜீவகுமாரன்

"ஜீவா! நீ இந்த நாட்டில் 40 வருடமாய் வாழுறாய்.... நீ இந்தநாட்டின் குடியுரிமையைப் பெற்றிருக்கிறாய். அவ்வகையில் நீடெனிஸ்காரன் தானே?"

மல்ரிட்டா சொன்னதை என்னால் துளியளவும் ஏற்கமுடியவில்லை.

வீட்டிற்கு விரைவுப் பாதையில் காரில் வந்துகொண்டிருக்கும் பொழுதும்...சின்னத்திரையில் "பாண்டியன் ஸ்ரோர்ஸ்" பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதும்... இரவுசாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுதும்... இப்போ நடுநிசியில் திடீரெனத் தூக்கம் கலைந்து மீண்டும் தூக்கம் வராமல் புரண்டுபுரண்டு படுக்கும்பொழுதும் அவள் சொன்னது என்னை ஏதோவிதத்தில் தொந்தரவுசெய்துகொண்டே இருந்தது.

"நீ இந்த நாட்டுக்கு வரி செலுத்துகின்றாய். சகலடெனிஸ்காரர்கள் போல் அரசுதரும் அனைத்து உதவுகளையும் இலவசமாய்ப் பெறு கின்றாய். உனது வயதானபெற்றார் இறக்கும் வரையில் இந்த நாடுதானே அவர்களைப் பராமரித்தது. உனது இரண்டு பிள்ளைகளையும் இந்த நாடுதானே கல்வி கொடுத்துவளர்த்தது. ஆனால் நீயோ இலங்கையன் என்று கூடச் சொல்லாமல் இலங்கைத் தமிழன் இலங்கைத் தமிழன் என்றுசொல்லிக் கொண்டு இருக்கிறாய்"

"மல்ரிட்டா நான் பிறந்த இனம்...வளர்ந்த இனம்...எங்கள் கலாச்சாரம் எல்லாம்தான் எங்கடை அடையாளம்"

"டோன்ற் பி ஸ்ருப்பிட்! நீ இலங்கையில் வளர்ந்தது 20 வருடங்கள் தான்... இங்கேவாழ்ந்தது 40 வருடங்கள்...நீ தமிழிலை வீட்டிலை பேசலாம்... ஆனால் நீ இந்த சமுதாயத்தில் கதைப்பது... எழுதுவது...விடுமுறைகளைக் கொண்டாடுவது...மேலாக உனது பிள்ளைகளின் வாழ்க்கைமுறை... உடுப்புகள்... எல்லாம் டெனிசிலும் டெனிஸ் முறையிலும் தானே"

மல்ரில்டா அடுக்கிக் கொண்டே போனாள்.

இன்றுவெள்ளிக் கிழமை.

சின்னவெங்காயம், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு மூன்றையும் பொரித்துபுட்டுடன் மனைவி பிரட்டித் தந்தசாப்பாடை எனது சக பணியாள் மல்ரிட்டா மதிய இடைவேளையின்பொழுது பார்த்தபொழுது எழுந்ததுதான் அந்த விவாதம்.

வெள்ளிக்கிழமை–கோயிலுக்குபோறநாள் - புனிதமானநாள் என்று சமயம் சார்ந்தும்.... மாமிசம் உண்டால் அது வியர்வை மூலம் கோயில்களில் மற்றவர்களை முகம் சுழிக்கச் செய்யும் என விஞ்ஞானம் சார்ந்தும்... இங்கு கட்டாயம் ஒவ்வோர் வெள்ளியும் கோயிலுக்குப் போகாவிட்டாலும் அதுவேஎங்கள் இரத்தத்தில் ஊறிய ஒன்றாய் எமது கலாச்சாரமாக எங்களுக்குள் படிந்துவிட்டது... எக்ஸ்செற்றா... எக்ஸ்செற்றா...

முடிந்தளவு விளக்கிப் பார்த்தேன்.

"அதுதான் நீ வெள்ளிக் கிழமைகளில் நடக்கும் கிறிஸ் மஸ் பார்ட்டிகளிலை கலந்து கொள்வதை தவிர்க்கப் பார்க்கிறனியா?"

மௌனமாகத் தலை யாட்டினேன்.

“ஏன் ஜீவா...நீங்கள் வெள்ளிக்கிழமைகளில் கோயில்களுக்குப் போவதை சனிக்கிழமை என்று மாற்றக்கூடாதா?”

அவள் எமது கலாச்சாரத்தை எள்ளி நகையாடுவது போல இருந்தது.

“மல்ரிட்டா... நீ எங்கள் சமய நம்பிக்கைகளோடை விளையாடாதே... நானும் ஜேசுநாதர் திங்கள் கிழமை உயிர்ந்தெழுந்திருந்தால் இன்னும் ஒருநாள் லீவு கிடைத்திருக்கும் எனச் சொல்லியிருக்கலாம் தானே”

“ஜெஸ்...ஜெஸ்... சொறி...ஜீவா... சொறி... உனது மதநம்பிக்கைகளை நான் கேலி செய்யவில்லை. ஆனால் 40 வருடங்கள் ஒரு நாட்டிலை வாழ்ந்து கொண்டு நான் தமிழன் தமிழன் என்று ஏன் அடம்பிடிக்கிறாய்என்றுதான் விளங்கவில்லை”

மல்ரிட்டாவின் வாயை அடக்க யோசித்தேன்.

“ஓகே...டெனிஸ் கலாச்சாரம் எது என்று சொல்லு. நான் அதை ஏற்றால் நான் டெனிஸ்காரன் என்று ஒத்துக் கொள்ளுறன்”

“நாங்கள் உங்களைப் போலை அடிக்கடி கோயிலுக்கு போகாவிட்டாலும் அனைத்து சமய கொண்டாட்டங்களயும் கொண்டாடுகிறம்”

“அது சமயம் சார்ந்தவிடயம்...உங்களுக்கு விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவித்து இருக்கிறார்கள். அதனைக்கூட தேவாலயங்களுக்கு செல்லாமல் மதுவுடனும் மாமிச உணவுகளுடன்தானே கொண்டாடுகின்றீர்கள்?”

“எங்கள் கலாச்சாரத்தில் ஆண் பெண்களுக்கு சம உரிமை உண்டு” மல்ரிட்டா இன்னும் ஒருசீட்டைத் தூக்கி என் முன்னால் போட்டாள்.

“நிச்சயமாக இங்குள்ள எல்லா இலங்கையரும் அவ்வாறுதான் நடந்துகொள்கின்றோம்”

“ஆனால் உங்கள் நாட்டில் அவ்வாறில்லைத் தானே....”அவள் மறுதலித்தாள்.

“இதுபொருளாதாரச் சமத்துவம் சம்மந்தப்பட்ட விடயம் மல்ரிட்டா. இலங்கையும் இந்தியாவும் மாறிக் கொண்டேவருகிறது...”

“அப்படி என்றால் நீங்களும் எங்களை நெருங்கிக் கொண்டு இருக்கின்றீர்கள் தானே” என்னை அவள் மடக்க முயற்சிக்கின்றாள் போல இருந்தது.

மனம் தொடர்ந்து விவாதிக்கவேண்டாம் என்று சொன்னது.

“எங்கள் நாட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள கட்டற்ற பாலியல் சுதந்திரத்தையும் குடும்ப பிரிவுகளையும் மட்டும் வைத்து இதுதான் ஒட்டுமொத்த டெனிஸ்கலாச்சாரம் என்று முடிவெடுத்திடாதே. இங்குள்ள எல்லாப் பெண்களும் மலிவுப் பத்திரிகைகளின் ஒன்பதாம் பக்கத்தில் மார்பைக் காட்டும் பெண்கள் இல்லை. எங்களுக்கும் கற்பு உண்டு. மனித உறவுகள் எல்லாநாட்டுக்கும் ஒன்றுதான். இணைவதில் சந்தோசமும் பிரிவதில் வருத்தமும் எல்லாருக்கும் ஒன்றுதான்”

டெனிஸ்காரரைப் பற்றி தமிழர்கள் வைத்திருக்கும் கணிப்பை துல்லியமாக நாடிபிடித்து வைத்திருக்கிறாள் என்றுபுரிந்தது.

மதிய இடைவேளை கடந்து கொண்டிருக்க அனைவரும் தங்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து கொண்டிருந்தார்கள்.

நான் அவளை இடைமறித்தேன்.

“மல்ரிட்டா... ஏதோ ஒருநாளில்...ஏதோ ஒரு இடத்தில்...நான் பிறந்துவளர்ந்த 20 வருடக் கலாச்சாரத்தைவிட இங்குநான் வாழ்ந்த 40 வருடக் கலாச்சாரம் மேல் எனப்படும் பொழுது நான் ஒருடெனிஸ்காரன் என ஒத்துக் கொள்ளுறன்”

“வெரிகுட்!”

ஒருவரின் கருத்தை இன்னொருவரில் திணிக்காத.... அல்லது ஒருவரின் கருத்தை மற்றவர் ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்காத எங்கள் இருவரின் சம்பாசணை மதியம் முடிந்திருந்தாலும் அது இந்த நடுநிசிவரை எனக்குள் தொடர்ந்து கொண்டே இருந்தது.

“என்னப்பா நடுச்சாமமாச்சு.... லைற்றை அணைச்சிட்டுப் படுங்கோ”

கண் விழித்த மனைவி மறுபுறம் திரும்பி படுத்துக் கொண்டாள்

❊ ❊ ❊

சனி தனது சோம்பலை முறித்துக் கொண்டு விழித்துக் கொண்டது.

பகல் முழுக்க நான் டெனிஸ்காரனா அல்லது இலங்கைத் தமிழனா என என் மனதினுள் நானேஎன்னுடன் நடாத்திய வாதப்பிரதிவாதங்கள்... அதனால் இரவு பிந்தித் தூங்கியது... அனைத்தும் சேர்ந்து கட்டிலில் இருந்து எழுந்து விடாது என்னை அழுத்துவது நன்கு தெரிந்தது.

மனைவி குளிக்கும் சத்தம் கேட்டது.

பக்கத்தில் இருந்த ஐபாட்டை எடுத்து பேஸ்புக்கினை மேய்ந்தேன்.

பிறந்தநாள் வாழ்த்துகள்... திருமண நாட்கள்... ஆழ்ந்த அனுதாபங்கள்... இதனை விட விசேடமாக ஏதும் இன்று என் கண்களுக்குப் படவில்லை.

செய்திப் பெட்டியுள் சிவா நேற்று போட்டிருக்கின்றான்.

இப்போதுதான் நான் பார்க்கின்றேன்.

“மச்சான்... நாங்களும் 2 பேர். நீங்களும் 2 பேர். ஏன் இரண்டு கார்களில் கல்யாண வீட்டுக்கு போவான்? ஒரு காரில் போகலாமே”

அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது– கணேசமூர்த்தியின் மகளுக்கு இன்று கல்யாணம் என்று.

கட்டாயம் போகவேண்டும்.

எங்களின் மகளின் திருமணத்திற்கு அவர்கள் குடும்பம் வந்து பெரியமொய் வேறு எழுதிவிட்டுப் போனவர்கள்.

"என்னப்பா எழும்பாமல் இருக்கிறியள்... தாலிகட்டி முடியவாபோகப் போகின்றோம்?" என்றவாறு மனைவி குளியலறையால் வெளியேவந்தாள்.

அவள் அனைத்தையும் அப்டேற் பண்ணித்தான் வைத்திருக்கிறாள் போலும்.

தொடர்ந்து எல்லாம் அவசரகதியில் நடந்தது.

கழித்தல்... குளித்தல்... கன்ன மயிர்களுக்கு கறுத்தமைபூசல்... மனையின் முந்தானைக்கு பின்னால் இருந்து ஊசிகுத்திவிடல்...

தொலைபேசி அலறியது.

சிவாதான் மறுமுனையில்.

"மச்சான் மெஸன்ஜரிலை நான் எழுதினதை நீபார்க்கேல்லையோ?"

"சொறியடா... இப்பதான் பார்த்தனான். இரண்டு குடும்பமும் என்ரை காரிலை போகலாம்... கொஞ்ச நேரத்திலைவாறம்".

மனைவியின் இறுதிக்கட்ட ஒப்பனையால் ஐந்து நிமிடம் என்பது அரைமணித்தியாலமாக நீண்டுசெல்ல வழமையான என் புறுபுறுப்புடன் காரில் போய் ஏறினோம்.

❊ ❊ ❊

மண்டபம் கிட்டத்தட்ட நிறைந்திருந்து விட்டிருந்தது.

மாப்பிள்ளையும் பெண்ணும் மேடையில் அமர்ந்திருந்தார்கள்.

மேடையின் இருபுறமும் ஒரேநிற ஆடையிலும் அலங்காரத்திலும் ஒரேமாதிரி பல பெண்கள் நின்றிருந்தார்கள்.

அழகாகத்தான் இருந்தது.

திரும்பி மனைவியைப் பார்த்தேன்.

"எத்தினை கல்யாண வீட்டுக்குபோய் நாங்கள் காத்திருக்கிறம்"

சிவாவின் மனைவியும் அதனை ஆமோதித்தாள்.

நால்வரும் மண்டபத்தின் மூலையில் அமர்ந்து கொண்டோம். எங்கள் வட்ட மேசையில் எமக்கு அறிமுகமில்லாத ஒரு குடும்பத்தில் இருந்துநாலு பேர் - கணவன் மனைவி பிள்ளைகளாக.

இன்னும் இரண்டு கதிரைகள் வெறுமே இருந்தன.

இரண்டு கூட்டம் மேளம் முழங்கிக் கொண்டு இருந்தது. இலண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்த ஐயர் இடைக்கிடையே தனது மைக்கில் திருமணமேடையில் அரங்கேறிக் கொண்டிருந்த பல நிகழ்வுகளுக்கு விளக்கங்களை கொடுத்துக் கொண்டிருந்தார்.

அடுத்தது கன்னிகாதானம்.

ஐயரின் மைக் பேசமேளமும் நாதஸ்வரமும் மௌனமாகியது.

"ஜயம் ஷீதாஷுதா சக தர்மசரீதவ ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிம் க்ருஹ்ஷீவ பாணினா பதிவ்ரதா மகா பாகா சாயா இவானுகதா ஷதா"

அதாவது கன்னிகாதானம் செய்பவருக்கு முன்னால் உள்ள பத்துதலைமுறையும், பின்னால் வருகிற பத்து தலைமுறையும், கன்னிகாதானம் செய்பவரது தலைமுறையையும் சேர்த்து ஆகமொத்தம் இருபத்தியோரு தலைமுறைகளையும் கரைசேர்க்கும் விதமாக இந்த கன்னிகாதானம் என்று அழைக்கப்படுகிற மகாதானத்தைச் செய்கிறேன் என்பது மந்திரத்தின் அர்த்தம்.

இதனை எல்லாம் மல்ரிட்டாவைக் கூட்டி வந்துகாட்டவேண்டும்.

மனம் எண்ணிக் கொண்டது.

ஐயர் விளக்கத்தைச் சொல்லகேட்கக் கேட்கபெருமையாய் இருந்தது.

சிவாவின் மனைவி எனது மனைவியிடம் ஏதோ குசுகுசுப்பது போலத் தெரிந்தது.

திரும்பிப் பார்த்தேன்.

"பெட்டையும் பொடியனும் ஒன்றாய் ஒரு வருசம் இருந்தவையாம். பேசிப்பார்த்து... பழகிப் பார்த்து... எல்லாம் பார்த்துதான் கல்யாணம் நடக்குதாம்"

மனைவி எனக்கு குசுகுசுத்தாள்.

நான் முழிசிப் பார்க்க அவள் மௌனமாக, ஐயர் தொடர்ந்தார்.

இந்த மந்திரத்தின் பொருள்: "பொன் நகைகளால் நன்கு அலங்கரிக்கப் பட்டுள்ள என் கன்னிகையை உனக்குத் தானமாக அளிக்கிறேன். ஏற்றுக்கொள்.. என் மூதாதையர்களும், வருங்கால சந்ததிகளும் பிரும்ம லோகத்தில் நித்யானந்தபதவியைப் பெறவே இந்த உத்தமமான மகாதானத்தைச் செய்திருக்கிறேன்.

இந்தத் தானத்தால் என் பித்ருக்கள் கடைத்தேறுகிறார்கள். இந்த மங்கள யோகத்திற்கு இவ்வுலகைக் காக்கும் நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் ஆகிய பஞ்சபூதங்களும் சாட்சிகள் ஆவார்கள்.

சிவா என் கால்களைத் தட்டினான்.

"மச்சான், ஐயர் மந்திரம் சொல்லும் பொழுது என் கன்னிகையை என்றதிற்கு

வினை விதைத்தவன்

கன்னிமுத்து வெல்லபதியான் (பாண்டிகுப்பு)

என்னருமைத் தம்பிமார்களே....
தங்கைமார்களே...
எச்சரிக்கை செய்கிறேன்...
ஏற்று நடங்கள்....
இதுவெனது கடமை....

உங்களைப் போல் தான்
நானும் அன்று
தும்பியும்,
வண்ணத்துப் பூச்சும்
என் எண்ணப்படியே
துரத்தித் துரத்திப் பிடித்தேன்....

விழிகள் பிதுங்க
உயிரோபதைக்க
நூலில் அவற்றை
இறுக்கமாகக் கட்டி
பறக்கவிட்டுப் பரவசமடைந்தேன்...!

ஈர்க்கில் கிழித்து
சுருக்குவளைத்து
ஓட்டியொட்டிப் போய்
ஓணான் பிடித்து
இழுத்துவந்ததனை
ஆட்டிப் படைத்து
அரைகுறைச் சீவனாக்கி
ஆனந்தமடைந்தேன்...!

அன்றுநான்
வண்ணத்துப் பூச்சிக்கும்
தும்பிக்கும்,ஓணானுக்கும்
இறுக்கிய நூலும்
இட்டசுருக்கம் தானின்று
என்னை இழுத்துப்
போவதற்கான
இயமனின் கயிறாகிக்
கிடக்கிறது...!

அதனால் தான்
அன்பாகக் கேட்கிறேன்...

என்னைப் போல் நீங்களும்
பாவங்களைப் புரியவேண்டாம்...
புண்ணியம் செய்யுங்கள்..

இதனையும் மீறி
பாவங்களைத் தினமும்
செய்தாலோ
என்னைப் போலத் தான்
நீங்களும்
நரகக் கொடுமைகளையே
நாளும் அனுபவிக்க
வேண்டிவரும்...!

"தினை விதைத்தவன்
தினை அறுப்பான்
வினை விதைத்தவன்
வினையறுப்பான்..."
மறக்க வேண்டாம்.

பதிலாக என் மகளை என்று மாற்றினால் என்ன?''

''வந்தமா...மொய்யைக் குடுத்தமா... சாப்பிட்டமா... என்று போறதுதான் அழகு''

அவனின் வாய்க்குபூட்டுப் போட்டேன்.

அனைவரையும் மௌனமாக்கினாலும் இப்போது மல்ரிட்டா என்னை தொந்தரவு செய்யத் தொடங்கினாள்,''எல்லாரையும் கதைக்கவிடாமல் அமுக்கி நசுக்கி கடந்து போறதுதானோ உங்கள் கலாச்சாரம்?''

அவளை விலக்கிவைப்பது பெரிய பாடாக இருந்தது.

தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருந்தன.

சிலவற்றைப் பார்க்க கூடியதாகவும்... சிலவற்றைப் பார்க்க முடியாதவாறும் ஐபோனுடனும் ஐபாட்டுடனும் மணவறையை அவர்களின் உறவினர்கள் மறைத்து நின்றிருந்தார்கள்.

குறிப்பாக தாலிகட்டுவதை ''மாங்கல்யம் தந்துதானே'' என்று ஐயாரின் மைக் ஒலியாலும் மேளகாரரின் மங்கள ஒலியாலும் பின்பு வரிசைவரிசையாக வந்த கற்கண்டுத் தட்டுகளாலுமே உணரமுடிந்தது.

நாதஸ்வரக் கோஷ்டியினரின் தொடர்ந்த பாடல்களினால் கல்யாண மண்டபம் மீண்டும் களைகட்டத் தொடங்கியது.

மாலை மாற்றுதல்...பால்பழம் கொடுத்தல்... கோதானம்...கைப்பிடித்தல்...ஏழடி நடத்தல்... அம்மி மிதித்தல்...கணையாழி எடுத்தல்... அருந்ததி பார்த்தல்...பொரியிடல்...அட்சதை போட்டு ஆசீர்வாதம் செய்து வாழ்த்துதல் எனத் தொடர்ந்து கொண்டிருக்க பசியும் எடுக்கத் தொடங்கியது.

அட்சதைபோட்டு ஆசீர்வதிக்க நீண்டகியூ அணிவகுக்கத் தொடங்கியது.

ஐயர் மைக்கை மீண்டும் எடுத்துக் கொண்டார்.

"அட்சதை போட்டு ஆசீர்வாதம் செய்ய இருக்கின்ற அன்பர்களே தாங்கள் மணமேடைக்கு வரும் பொழுது தயவுசெய்து தங்கள் காலணிகளை கழற்றிப் போட்டுவரவும். காரணம் இங்கு வீற்றிருப்பது சிவனும் பார்வதி யுமாவர். எனவேதான் பிராமணரான நாங்கள் கூட இன்றைய தினங்களில் அவர்களை மேடையில் அமர்த்திவிட்டு கீழே உட்கார்ந்து கொள்கின்றோம்"

அனைவரின் கால்களிலும் இருந்து காலணிகள் விலகிக்கொண்டன.

❊ ❊ ❊

மதிய உணவு பிரமாதமாகவே இருந்தது.

இருவீட்டாரும் தங்கள் செல்வச் செழிப்பைக் காட்டியிருந்தார்கள்.

சாப்பாடு... வடை பாயாசம்.... இலங்கை யில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்த கப்பல் வாழைப்பழம்...பீடா... இத்தியாதி... இத்தி யாதிகள்...

"அனைவரும் பொறுமையாக அமர்ந்திருந்து மாலை நடைபெறும் வரவேற்பு நிகழ்விலும் இரவு உணவிலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்" ஊரில் நடக்கும் எல்லாவற்றிக்கும் மைக்கை தன் கையில் எடுக்கும் நண்பர் ஒருவர் அறி வித்துக் கொண்டிருந்தார்.

காலாற சிவாவும் நானும் கொஞ்சம் வெளியில் நடக்கச் சென்றோம்.

பலகார்களின் டிக்கிகள் திறந்திருந்தன. அதனினுள் வெவ்வேறு விகிதாசாரங்களில் அற்ககோல் போத்தல்கள்.

அதனைச் சுற்றி நாலைந்துபேர்கள். இலங்கை இந்திய அரசியல்கள்...பிக் பொஸ்... சம்மர் விடுமுறைக்கு இலங்கைக்குபோவதா இல்லையா எனபலதும் பத்தும் உலாவிக் கொண்டு இருந்தது.

சுமார் ஒருமணித்தியாலம் செல்லமீண்டும் உள்ளே வந்தபொழுது பிரபலமான இசைக்குழு ஒன்று கறோக்கில் பாடிக் கொண்டு இருந் தார்கள்.

மாலைத் தேநீரும் பலகாரங்களும் பரிமாறத் தொடங்கியிருந்தார்கள்.

எதிர்பார்த்த மாதிரி அதிகநேரம் காத்திருக்க வைக்காமல் இப்பொழுதுமாப்பிள்ளையும் பெண்ணும் மண்டபத்தினுள் வருகை தரவுள்ளார்கள்.

திருவாளர் மைக் அறிவித்தார்.

முன்னே வட இந்தியர்கள் நால்வர் தங்களின் பெரிய மேளத்தை ஆடி ஆடி அடித்துக் கொண்டுவந்தார்கள்.

பின்னால்... நான்கு துருக்கிப் பெண்கள் தங்கள் இடையையும் மார்பகங்களையும் எவ்வளவு குறைந்த துணிகளால் மறைக்க முடியுமோ அதனால் மறைத்துக் கொண்டு கைகளைத் தூக்கிக் கொண்டும் கால்களை மேலும் கீழும் விசிறி ஆடிக்கொண்டும் வந்தார்கள்.

மண்டபத்தினுள் விசில்கள் பறந்தன.

சிலர் ஓடிச்சென்று அந்தப் பெண்களின் இடைகளில் டெனிஸ்காசுகளைச் செருகினார்கள்.

இவர்களுக்குப் பின்னால் மாப்பிள்ளையும் பெண்ணும் நவநாகரீக ஆடையுடன் நண்பர்கள் சூழ ஆடிக் கொண்டு மண்டபத்தினுள் வந்தார்கள்.

மேடையில் பெரிய கேக் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

துருக்கிப் பெண்களின் நடனமும் வட இந்திய இளைஞர்களின் மேளமும் தொடர்ந்து கொண்டிருந்தன.

அனைவரின் கைதட்டல்களுடனும் சீறிப் பாயும் சாம்பெயின்யின் நுரையுடனும் வர்ணக் காகித வெடிகளுடனும் கேக்கை வெட்டி இருவரும் பரிமாறிக் கொண்டார்கள்.

மல்ரிட்டா என் காதினுள் வந்து, "முட்டை போட்ட கேக்கையும் சாம்பெயினையும் சிவ பெருமானும் பார்வதியும் சாப்பிடலாமா?"

என் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது.

இந்த 40 வருட வாழ்க்கையில் இந்த கேக் வெட்டும் சம்பெயினும் எனக்கு புதிதில்லை.

ஆனால் இன்று புதிதாக இருந்தது.

என் முகம் மாறிக் கொண்டிருந்ததை மனைவி அவதானித்திருக்க வேண்டும்.

"என்னப்பா செய்யுது"

"நாங்கள் போவம்... சிவா! நீ யாரோடையும் வந்து சேர்"

"ஏனடா... கொஞ்ச நேரம் பொறுத்தால் சாப்பிட்டுட்டு போகலாம் தானே...கொத்து றொட்டி, பிரியாணி, இறால், நண்டு, கணவாய் என கன அயிற்றங்கள் செய்து வைச்சிருக் கிறாங்கள்"

"அதை சிவபெருமானும்... உமாதேவியாரும் சாப்பிட்டும்" என்னை அறியாமல் நான் சொல்ல எல்லோரும் என்னை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். வி. ஜீவகுமாரன் என்னும் நான் மல்ரிட்டாவிடம் தோற்றுக் கொண்டு போவதாக உணர்ந்தேன்.

❍❍❍

அகவை 90இல் கவிஞர் அம்பி

முதறிஞர் கவிஞர் அம்பி அவர்களை அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற எழுத்தாளர் விழாவொன்றிலேதான் முதன்முதலில் சந்தித்தேன். அன்று அவருடன் நீண்டநேரம் உறவாடி ஞானம் சஞ்சிகைக்கான நேர்காணல் ஒன்றையும் பெற்றுக்கொண்டேன். அந்த நேர்காணல் ஞானம் 19 ஆவது இதழில் வெளியானது. அதன்பின்னர் ஞானம் இதழ் 74இல் அம்பி அவர்களை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்திருக்கிறோம்.

அம்பி அவர்கள் நாவற்குழியில் 17-02-1929 அன்று பிறந்தவர். இலங்கையில் இருந்த காலத்தில் விஞ்ஞானபாட ஆசிரியராகவும் அதே சமயம் தமிழ் ஆசிரியராகவும் சில பாகங்களில் பணியாற்றியிருக்கிறார். அவர் 18 ஆண்டுகள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் விஞ்ஞான கணித ஆசானாகப் பணியாற்றிபோது அக்கல்லூரியின் கல்லூரிக் கீதத்தை யாத்தவர். இன்றும் அவர் இயற்றிய கீதமே அங்கு பாடப்படுகிறது.

1950ஆம் ஆண்டு தினகரனில் அம்பியின் முதலாவது சிறுகதை 'இலட்சியச்சோடி' வெளியானது, பின்னாளில் சிறுகதை எழுதுவதை நிறுத்திவிட்டு கவிதைகள் படைக்கலானார். தந்தை செல்வாவுடன் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டதன் காரணமாக தமிழரசுக் கட்சியில் இணைந்து சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு தடுப்புக்காவலில் சில நாட்கள் இருந்து விடுதலையானவர். 1993இல் இலங்கை கலாசார அமைச்சின் 'தமிழ் மணி'" பட்டத்தையும் 1995இல் சிறுவர் இலக்கியத்திற்காக 'கொஞ்சும்தமிழ்' என்ற நூலுக்கு சாகித்திய விருதினையும் பெற்றுக் கொண்டார். இலங்கை வானொலியில் கலைக்கோலம் கிராமசஞ்சிகை உட்பட பல நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்.

இலங்கையில் பாடத்திட்டபாடநூல் எழுத்தாளராகப்பணியாற்றியவர். அதே போன்று சிட்னியில் பாடநூல் ஆலோசகராகப் பணியாற்றியவர். கவியரங்களுக்கு அம்பி தலைமையேற்றால் கலகலப்புக்கு பஞ்சமிருக்காது, சோர்வின்றி கவியரங்குகளை நெறிப்படுத்துவதில் ஆற்றல் மிக்கவர். அண்ணாத்துரை முதலமைச்சராக இருந்த காலப் பகுதியில் இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சென்னையில் நடைபெற்ற வேளையில் 'அம்பி' எழுதிய 'புகாரில் ஒரு நாள்' என்ற நெடுங்கவிதைக்குத் தங்கப்பதக்கம் பரிசாகப் பெற்றவர். அம்பி அவர்கள் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளுக்கெல்லாம் பயணம் மேற்கொண்டு 'உலகளாவிய தமிழர்' என்ற நூலை எழுதியவர்.

அம்பி மேற்கொண்ட தமிழ்ப்பணிகளில் சிகரமாகப் போற்றப்படுவது தமிழ் மருத்துவ முன்னோடி டாக்டர் சாமுவேல் கிறீன் குறித்து மேற்கொண்ட ஆய்வு முயற்சிகள்தான். தமிழிலும் ஆங்கிலத்திலும் கிறீன் பற்றிய பல ஆக்கங்களை அம்பி எழுதியிருக்கிறார். கிறீனின் வரலாற்றை இரண்டு மொழிகளிலும் நூலாகவும் தந்திருக்கிறார். அமெரிக்கப் பாதிரியாரான கிறீனை உலக அரங்கில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அறிமுகப்படுத்தியமைக்காக அமெரிக்கத் தூதரகம் அம்பியை அழைத்து பாராட்டிக் கௌரவித்துள்ளது.

1850ஆம் ஆண்டளவில் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட மருத்துவப் பணியாளரை இன்றைய வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் அம்பி மேற்கொண்ட பணியானது தலைசிறந்தது என்று பேராசிரியர் சிவத்தம்பி உட்பட பலர் புகழாரஞ் சூட்டியுள்ளனர். பாப்புவா நியூகினியில் தொழில் நிமித்தம் அம்பி பணியாற்றிய காலத்தில் அங்குள்ள குழந்தைகளுக்கு ஆங்கில மொழிமூலம் சிறுவர் இலக்கியத்தை புகட்டியதுடன் ஆங்கிலத்தில் சிறுவர் இலக்கிய நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்



கவிஞர் அம்பியின் அகவை 90 பாராட்டு விழா சிட்னியில் 28-04-2019இல் மிகச்சிறப்பாக நடைபெற்றறது. அன்று பாராட்டுவிழா மலரும் வெளியிடப்பட்டது.

அம்பி நல்லாரோக்கியத்துடன் மேலும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

ஹோட்டன் சமவெளிச்சாரலிலே.... சில நினைவலைகள்

மொழிவரதன்

ஹோட்டன் சமவெளிகளின் காற்றை உள்வாங்கி சுவாசித்துவாழும் டயகம பிரதேசத் துடன் அக்கரப்பத்தனை, ஹோல்புறுக், மராயா மற்றும் ஆர்ட்லோ போன்ற தேயிலைத் தேசத்தின் இலக்கியச் செயற்பாடுகள் சிலவற்றை பகிர்ந்துகொள்ள உள்ளம் விழைகின்றது. இவ்வாறான பதிவை காலம் கடத்தாது செய்ய வேண்டியது எமது கடப்பாடாகும்.

ஏனெனில் காலமுட்கள் நில்லாது, வயது இனிப் பின்னோக்கிச் செல்லாது. இப்பிரதேசத்து இலக்கியச் செயற்பாடுகளை இருவகையாகப் பிரித்து ஆராயலாம்.

1. குறித்த இப்பிரதேசத்திலேயே பிறந்து வளர்ந்து இலக்கிய உணர்வால் முகிழ்ந் தெழுந்தவர்கள்.

2. பிற மாகாணம், மாவட்டம் சார்ந்தோர் தொழிலின் காரணமாக இங்குவந்து சிலகாலம் வாழ்ந்தோர், அவ்வேளையில் அவர்களது செயற்பாடுகள். மிக ஆரம்பகால இப்பிரதேசம் என்பது தேயிலை போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டகாலம் எனலாம்.

வழமைபோலவே இம்மக்கள் தென்னக மக்களின் நாட்டார் இலக்கியத்தைக் கொணர்ந்தவர்களே –சிலஆய்வுகளின்போது அவ்வாறான நாட்டார் பாடல்களைப் பாடும் கூட்டத்தினரைக் காணமுடிந்தது. தாலாட்டு, ஒப்பாரி, கும்மி இப்படி அது தொடர்ந்தன. தென்னக தமிழ் மக்களின் விவசாய வாழ்வியல் முறைகளைப் பின்னணியாகக் கொண்டெ ழுந்த மக்கள் பாடல்களும் அவர்கள் கண்டி எனும் இலங்கை நோக்கி வந்த பயண அனுபவங்களும், பிரிவும், துன்பமும், இடரும் கலந்த கலவையாக வெளிவந்தமையை யாமறிவோம். இவை எமது முன்னோர்களின் வரலாற்று அனுபங்களாகும்.

இந்தப் பின்னணியிலேயே ஹோட்டன் சமவெளிச் சாரலிலே பனிசூழ்ந்த மேகங்களைத் தழுவிய தேயிலை மலைவாழ் மக்களும் வாழ்ந்தனர் என்பது வெள்ளிடைமலை. அது ஒருபுறமிருக்க இப்பிரதேசத்தின் ஆரம்ப கால இலக்கியச் செயற்பாட்டார்கள் பற்றிக் கூறுவதாயின் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி பி.ஆர்.பெரியசாமி டயகமவில் வாழ்ந்த தாகக் கூறப்படுகின்றது. கவிஞராக இவர் மலையக வாழ்வியல் தொடர்பாக தனது படைப்புக் களைத் தந்தவர் எனலாம். மேலும் சிலாபம் திண்ணனூரன் ரவுண்ட் பங்களா (டயமக மேற்குத் தோட்டம்) பிரதேசத்தில் வாழ்ந்ததாக அறியமுடிகின்றது. இன்றும் தொடர்ந்து எழுதியவண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிலாபம் திண்ணனூரான் தனது கட்டுரை ஒன்றில் இதனைக் கூறி உள்ளதைக் காணமுடிந்தது.

இவர்கள் இருவருமே பின்னர் புலம் பெயர்ந்து சென்றுவிட்டதை அறியமுடிகின்றது. இந்த முதற்றொகுதியினர் பற்றிமேலும் தகவல் கள் இருக்கலாம். இது தேடல்களுக்குட்பட்டது. எனினும் இதனை அடுத்த கட்டத்தினர் பற்றி கூறக்கூடியதாக உள்ளது. மன்றாசியில் சுப்ரமணியம்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியா லயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர் தனது உயர் கல்வியை யாழில் பெற்று பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியான சு.முரளிதரனேஅவர். அதன் பின்னர் மேலும் அவரது கல்விசார் தகைமையையும் தொழில்சார் தகைமையையும் உயர்த்திக் கொண்டவர்.

இலங்கையில் முதன் முதலாக ஹைக்கூ கவிதை வடிவத்தை "கூடைக்குள் தேசமாக" மன்றாசி என்ற சிறிய நகரத்திலிருந்து பெருந்தோட்டப் பின்னணியிலிருந்து வெளிக் கொணர்ந்த பெருமைக்குரியவர். தான் சார்ந்த வர்த்தக சமூகப் பின்புலத்தைத் தவிர்த்து கல்விப்புலத்தையும் சமூக ஊடாட்டத் தையும் வரித்துக் கொண்டு இன்று கல்வி அமைச்சின் தமிழ் கல்விப் பிரிவின் கல்விப் பணிப்பாளராக மிளிர்பவர். எளிமையும், ஆடம்பரமுமற்ற வாழ்க்கைமுறையும் புதிய படைப்பாளிகளை ஊக்குவிக்கும் பண்பும் அவரோடு தொடர்ந்து வருபவை ஆகும். அகளங்கன் தர்மராஜாவுடன் இணைந்து "சமவெளி மலைகள்" வெளி யிட்டவர். தொடர்ந்து இவர் தியாக இயந்தி ரங்கள்,தீவகத்து ஊமைகள் போன்ற கவிதைத் தொகுப்புக்களையும் மலையக இலக்கியத்

தளங்கள், வரவும் வாழ்வும் (மலையக நாட்டாரியல் சிந்தனைகள்) ஆகிய ஆய்வு நூல்களையும் மகாகவிபாரதி (சிங்களமொழிபெயர்ப்பு) மாட்டின் விக்கிரமசிங்க பாப்லாநெருடாபோன்ற தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களையும் தந்து மலையக இலக்கியவளர்ச்சி, ஈழத்து இலக்கியச் செல்நெறிக்கும் தனது பங்களிப்பினைச் செய்துள்ளார்.

சு.முரளிதரனின் முதலாவது கவிதையே உள்ளேசென்று ஹைக்கூ கவிதைகளை வாசிக்கத்தூண்டுகின்றது.

"கூடையைக் கனக்க
கனக்கச் சுமந்துசென்றார்கள்
உள்ளே இந்த தேசம்"

இந்த இலங்கை தேசத்தின் பெருமையும் உலகிற்கு பறை சாற்றியவர்கள் இந்த மலையகமண்ணின் மக்கள் அன்று மட்டுமல்ல இன்றும் தான்,

"போதுமான ஆட்களேறியும்
புறப்படவில்லையே புகையிரதம்
லயன்கள்"

மிக அருமையான ஹைக்கூ இந்த மலைகளைக் குடைந்து மண்ணைச் செழிக்கச் செய்த இம்மக்களின் வீடுகள் லயன்களாக உள்ளதையே கவிஞர் சு.முரளிதரன் தனது கற்பனையில் இவ்வாறு காண்கிறார்.

நல்ல அருமையான எழிலான மலையக இயற்கை வனப்பை, செழிப்பை அவரது கவிதைகள் கூறத்தவறவில்லை.

ஏய்! யாரங்கேஆற்றில்
பாலைக் கொட்டிவிட்டு ஓலமிடுவது
நீர்வீழ்ச்சி

என்பதும்

போர்வையைவிலக்கி
மெல்லெனவிழித்தனமலைகள்
பனிமூட்டம்
"ம்.... கையை எடுங்கள்
எத்தனை கண்கள் பார்க்கின்றன
நட்சத்திரங்கள்"

என்பதும் முரளிதரனின் எழுத்தாளுமையைக் காட்டுகின்றது. ஆனால் இன்று எமக்கெல்லாம் ஒரு கவலை. இன்று அவரது பேனை ஏன் மௌனமானது என்பதுதான்?

அடுத்து வீ.கே.பெரியசாமி

பசுமலை எனும் ஹோல்புறுக்கில் பிறந்துவளர்ந்து லிந்துலை பாடசாலை, ஹட்டன் சென்ஜோன் பொஸ்கோவில் கல்விகற்று பின்னர் திருச்சி தேசியகல்லூரியில் N.Com பட்டம் பெற்றவர். இதன் பின்னர் இலங்கைதிரும்பி (சார்ட்டட் அக்கவுண்டன்) பட்டயக்கணக்காய்வு தேர்வில் தேறி பின்னர் குவைத்திற்கு புலம்பெயர்ந்துநிதிக்கட்டுப்பாட்டாளராக தொழில் புரிவதாக அவரது நூல்களின் பின் அட்டையில் ஆசிரியரைப் பற்றி எனும் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

கல்லூரிக் காலத்திலிருந்தே கவிதை புனைபவராகக் திகழ்ந்துள்ள இவர் தனது நூல்களை மணிமேகலை பிரசுரமாக வெளியிட்டுள்ளார்.

1. முடிந்தால் மன்னித்துவிடு
2. கிளைகள்
3. தளிர்கள்

அரேபிய வளைகுடாவில் நல்லசிறப்பாக நல்லஉயர்ந்த பதவியிலிருக்கும் வி.கே. பெரியசாமி அங்கு உழைப்பிற்காகசென்று வாழும் தமிழர்களின் மனநிலையையும், இஸ்ரேலிய பலஸ்தீன மக்களின் போராட்டத்தின் போது இடம்பெறும் அவலங்களையும் மனித உணர்வுகளையும், காதல், சிறுவர் உழைப்பினையும் மண்ணில் மடிந்துசெல்லும் மனித தர்மங்கள் பற்றிய மனஆதங்கத்தையும் எனப் பல பாடுபொருள்களின் அவரது கவிதைகள் பரந்து விரிகின்றன.

வாழ்க்கை

"கம்யூட்டரில்தான் உண்டுஎன்று
கணக்கைத்
தவறாகப் போட்டது
நீதான்

கணனியைப் படித்தநீ
காய்ந்தநிலத்தை

பகிர்வோம்....

ஈழமும் தமிழும்

*1857*ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பெற்ற பரீட்சையில் ஈழத் தறிஞர் ***சி.வை. தாமோதரம்பிள்ளை*** அவர்கள் முதலாவதாக B.A. பட்டம் பெற்றார் என்பது பலரும் அறிந்த தகவல். இவருக்கு அடுத்து சி.வை.தா. அவர்களின் ஆசிரியரான ***கரோல் விஸ்வநாதப்பிள்ளை*** அவர்கள் இரண்டாவதாகப் பட்டம் பெற்றார்.

இவர்கள் இருவரையும் தொடர்ந்து மூன்றாவதாக B.A. பட்டம் பெற்றவரும் ***மோஸஸ் வேலுப்பிள்ளை*** என்கிற ஈழத்தறிஞர் என்கிற பதிவுகளை காணமுடிகின்றது.

ஏன் மறந்தாய்?
தோண்டு
காவேரி
அருகில் இல்லையென்றால் என்ன
உன் கைகள்
ஓங்கித் தோண்டட்டும்
மண்ணுக்கு அடியில்
தண்ணீர் வராவிட்டால்
பரவாயில்லை
உன்
தன்நம்பிக்கை
துளிர்விட்டு
வெளிவரட்டும்"

என்று எழுதுகிறார்

ஆற்றோர மேதைகள் கவிதையில்
ஆற்றுவெள்ளத்தில்
அடையாளம் தெரியாமல் போன
அகதிகள்
வெள்ளம்வடிந்து
தெளிந்தபோது
மெல்லத் தலைதூக்கிய
நாணல்கள்

என்பதில் வாழ்வில் சவால்களுக்குமுகம் கொடுக்கவேண்டும் என்பதையும் துவண்டுவிடல் ஆகாது என்பதையும் கூறுகின்றார்.

மேற்கூறியவை அவரது கிளைகள் நூலிருந்து எடுக்கப்பட்டவை.

கவிஞர் சினிமா பிரபலங்களுடன் தொடர்புள்ள ஒருவராக இருந்துள்ளார் என்பதைப் படங்கள் காட்டுகின்றன. இயக்குநர் கே.பாலச்சந்தர், நடிகர்களான சரத்குமார், நெப்போலியன் கவிப்பேரரசு வைரமுத்து போன்ற பலருடன் தொடர்புகொண்டவராகத் திகழ்கின்றார். அவரது தளிர்கள் கவிதைத் தொகுதியும் அவ்வாறே பல பாடுபொருள்களை உள்ளடக்கியதாக உள்ளது.

2

'ஆக்ராஸ்'எனப்படும் இந்த ஹோட்டன் சமவெளிச் சாரலிலே இப்பிரதேசத்துக்கவிதைப் பற்றாளர்கள் பலர் எம் கண்முன் தோன்றுகிறார்கள்.

நல்லுசாமி (அதிபர் டயகம த.வி) என். முத்துகுமார் (அதிபர் மெராயா த.ம.வி) ஜெயராம் சட்டன் தோட்டம், சுப்பிரமணியம் (தற்போது பாமஸ்டன் குடியிருப்பில் உள்ளார்) விஸ்வநாதன் (மன்றாசி) நாகரட்ணம் (வாழமலை) அமரர் சந்திரசேகரன் (கிளைஸ்டேல்) இப்படி சிலரை இக்காலகட்டத்தில் கூறலாம். எனினும் இவர்கள் இத்துறையிலீடுபட்டு மேலெழவில்லை என்பதனை உறுதியாகக் கூறலாம்.

எவ்வாறெனினும் இவர்களுள் சிலர் பின்னாளில் வானொலி நிகழ்வுகளில் தமது கவிதைகளை வானலை ஊடாகத் தவழ விட்டிருந்தனர். திரு.நல்லுசாமியை இப்பிரிவுக்குள் உள்ளடக்கலாம்.

இதன் அடுத்த காலகட்டத்தில் சிலரைக் குறிப்பிடலாம். குழந்தை பாலா (கே. பாலகிருஷ்ணன், அதிபர் லோவர் கிரேன்லி த.ம.வி) டயகம கருணாநிதி (அதிபர் சந்திரகாமம் த.வி) அருண் சிவஞானம் (கிளாஸ்கோ தற்போது திருகோணமலை) குமரன் நடராஜா (அம்பலத்தாடுவான்) (ஆசிரியர் ஹோல்புறூக் விஞ்ஞானக்கல்லூரி) குமரன் மகேஸ்வரி பெல்மோரல் தோட்டம் /ஹோல்புறூக்) மா.காளிதாஸ் (கிளாஸ்கோ தற்போது புஸ்ஸல்லாவை) போன்றோர் எழுதினர். இவர்களுள் மா.காளிதாஸ் ருத்ரதாகம் என்றகவிதை நூலை வெளியிட்டவர். மேலும் குமரன் நடராஜா அவ்வப்போது இத்துறையில் தனது கவனத்தைச் செலுத்தியவராக உள்ளார்.

மேலும் அழகு கனகராஜ், ஷீலா மாணிக்கம் (மன்றாசி) ஆகிய இருவரும் நம்பிக்கை தரும் படைப்பாளிகள் எனில் தவறில்லை. அ.கனகராஜ் கவிதையில் எவ்வாறு மிளிர்கிறார் என்பது பற்றி கூற முடியாவிட்டாலும் சிறுகதைத் துறையில் பலபரிசில்களைதட்டிக் கொண்டவர். ஷீலா மாணிக்கம் 'மனிதம்' தலைப்பிலான கவிதைத்தொகுப்பை தலவாக்கலை பௌர்ணமி ஒன்றுகூடல் அமைப்பினூடாக வெளியிட்டுள்ளார். மலையக மண்வாசனைகலந்த கதைக்கருக்களை கையாள்வதில் இவர் திறமை மிக்கவரே.

மலையகத்திற்காக பகுதிகள் அடங்கிய நாளிதழ்கள் வெளிவந்ததன் பின்னர் பலர் அப்பத்திரிகைகளில் எழுதினர். தேசியப் பத்திரிகைகள் இவ்வாறு இணைப்புக்களையும், தனிப்பத்திரிகைகளையும் வெளியிட்டு வருகின்றன. மலையகப் பார்வை, மலையகப் பக்கம் போன்றனவற்றையும் சில தனிப் பத்திரிகைகளையும் இங்கு குறிப்பிடலாம். இந்தக் களங்களில் பலபுதிய இளங் கவிஞர்கள், சிறுகதையாளர்கள் தோற்றம் பெறவாய்ப் பேற்பட்டது. சூரியகாந்தி, உதயசூரியன், சுடரொளி என்பனவற்றில் பலபுதியவர்கள் எழுதுகின்றனர்.

இதில் ஆக்ராஸ் பிரதேசப் படைப்பாளிகளாக ச.சத்தியமலர், திமோதிஸ், தங்கராஜ் சரத்குமார் சில்வெஸ்டர் ஜோன்ஸன், நல்லு விஜயகுமார் போன்றோர் எழுதிவருகின்றனர். இவர்களுள் நான் அறிந்தவரையில் போர்ட்மோர் ச.சத்தியமலர் வெறும் காதல் கூச்சம் ஏதுமில்லாமல் சமூகத்தின் பிரச்சினைகளைப் பாடுபொருளாகக் கொண்டு எழுதுபவர் எனலாம். இவரும் அண்மைக் காலங்களில் எழுதுவதைக் காண இயலவில்லை.

POOBALASINGHAM BOOKDEPOT

Importers, Exporters, Sellers & Publishers of Books, Stationers and News Agents

புதிய வரவுகள்

நூலின் பெயர்	ஆசிரியர்	வெளியீடு	விலை
• ஒரு தோட்டத்தின் கதை	குப்பிழான் ஐ.சண்முகம்	ஜீவநதி	300.00
• மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் இலக்கியங்களில் கவிதைகள்	ஏ.ஆர்.பாத்திமா றுமைஷா	மருதூர் வெளியீட்டு பணிமனை	500.00
• சிங்கைஆரியசக்கரவர்த்திகள் வரலாறு	மகாராஜா ஸ்ரீராஜசேகரா	மருதூர் வெளியீட்டு பணிமனை	1200.00
• உயிர் (நெடுங்கதை)	மு.சிவலிங்கம்	குறிஞ்சிதமிழ் இலக்கிய மன்றம்	500.00
• உருமாறும் உலகமும் கருமாறும் காலமும்	மு.பொ.	புனைவகம்	750.00
• சொல்லும் செய்திகள்	வி.என்.மதிவழகன்	காந்தளகம்	1000.00
• தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	ஞ.பிரசாந்தன்	பூபாலசிங்கம் புத்தகசாலை	450.00
• சைவநெறிதரம் - 06 சிறுகுறிப்பு	பிரியம்வதாசுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• சைவநெறிதரம் - 07 சிறுகுறிப்பு	பிரியம்வதாசுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• சைவநெறிதரம் - 08சிறுகுறிப்பு	பிரியம்வதாசுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• வரலாறுதரம் - 08சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• வரலாறுதரம் - 09சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• புவியியல் - 06 சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	135.00
• புவியியல் - 09சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• புவியியல் - 08சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• புவியியல் - 09சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• புவியியல் - 10சிறுகுறிப்பு	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• கணிதம் தரம் - 06 I	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• கணிதம் தரம் - 07 I	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• கணிதம் தரம் - 07I I	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	200.00
• கணிதம் தரம் - 06 I I	இராஜ் சுப்ரமணியம்	பூபாலசிங்கம் புத்தகசாலை	175.00
• வணிகமும் கணக்கீட்டுகல்வியும் தரம் 10	ரேக்ஷ்னிநடராஜா	பூபாலசிங்கம் புத்தகசாலை	225.00

பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை: இல. 202, செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2422321. தொ.நகல்: 2337313 மின்னஞ்சல்: pbdho@sltnet.lk

கிளைகள்:

340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. தொ.பே: 2395665

இல. 309 A-2/3, காலி வீதி, கொழும்பு - 6. தொ.பே: 4-515775, 2504266

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

டயகம சு.நடராஜா துடிப்பான ஒரு சமூகச் செயற்பாட்டாளர்கள் மாத்திரமல்லாது சில ஆய்வுரீதியானகட்டுரைகளை எழுத முனைந்து வருபவர் எனலாம்.

மேற்குறிப்பிட்டவர்களுள் பலர் ஓரளவு எழுத்தோடு தொடர்பில் உள்ளனர் என்று கூறிடலாம். மேலும் சிலரும் இதில் இருக்கக் கூடும். சிலர் புனைபெயரில் எழுதும் வேளைகளில் அவர்களைப் பத்திரிகைத் தர்மப்படி முகவரி மற்றும் பிறவிபரங்களை வழங்கிட மறுக்கின்றபடியால் சிலரை யார் எனத் தெரிந்திட வழி இல்லை. உதாரணமாக 'டயகம கல்கி' என்று எழுதுபவர் யார் எனத் தெரியவில்லை. இதனால் சில குழப்பங்கள் உள்ளன.

அடுத்து பிற பிரதேசத்து இலக்கிய கர்த்தாக்கள், படைப்பாளிகள் இப்பிரதேசத்துக்கு வந்துதொழில் புரிந்தவேளைகளில் அல்லது பலகாலம் வாழ்ந்திருந்தகாலங்களில் இப்பிரதேச இலக்கிய செயற்பாடு களில் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டதோடு சில ஆக்க பூர்வமானபங்களிப்பையும் செய்துள்ளனர். இவர்கள் ஆசிரியர்களாக, அதிபர்களாக, எழுதுவினைஞர்களாக மேலும் பலதுறை சார்ந்தவர்களாக இருந்துள்ளனர்.

இவர்களுள் முதற்தொகுதியினராக பேராசிரியர் செ.யோகராஜா, ஆசிரியர் அகளங்கன் நா.தர்மராஜா போன்றோரை குறிப்பிடலாம். செ.யோகராஜா ஹோல்புறாக் த.ம.வி. யில் ஆசிரியராக, உப அதிபராகக் கடமை புரிந்த காலங்களில் 'பசுமலை யோகன்' எனும் புனைபெயரிலேகவிதைகள் எழுதி உள்ளார். மேலும் ஹோல்புறாக் விஞ்ஞானக் கல்லூரியின் பாடசாலைக் கீதத்தினை இயற்றிவரும் இவரே. நல்ல தரமான தமிழ் உணர்வுள்ள பலரைத் தனது காலத்திலே உருவாக்கிச் சென்றுள்ளார். அவரது மாணவர்கள் இதனை இன்றும் நன்றி உணர்வோடு பகிர்வர். மன்றாசியில் திருமணம் செய்ததன் மூலம் மலையக மக்களுடன் ஒரு பிணைப்பைக் கொண்டுள்ளார். மலையக இலக்கியத்துடன் தொடர்புள்ள இவர் பல ஆய்வுகளையும், விமர்சனங்களையும் மேற்கொண்டவர் ஆவார்.

அகளங்கன் நா.தர்மராஜா பழந்தமிழ் இலக்கியங்களில் நல்ல பரிச்சயம் உடையவர் என்பதனை அவரது பல நூல்கள் சான்று பகரும். வன்னிமண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஹோல்புறாக் த.ம.வியில் ஆசிரியராகக் கடமைபுரிந்த வேளையில் நல்ல தமிழ் எழுதும் உணர்வாளர்களை உருவாக்கிவிடமுயன்றார். அவரது காலத்தில் சில மாணவர்கள் உருவாகினர் எனலாம்.

அடுத்து மொழிவரதன் எனும் புனைபெயரில் எழுதிவரும் கருப்பையா மகாலிங்கம் 01.06.1986 முதல் ஹோட்டன் சமவெளிசாரல் தூவும் இரண்டுபெரியமகாவித்தியாலயங்களில் அதிபராக, கொத்தணி அதிபராக பின்னர் அப்பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்தவர்.

மொழிவரதன் ஹோல்புறாக் த.ம.வி / விஞ்ஞான கல்லூரியில் கடமைபுரிந்தவேளையில் சில இலக்கிய நிகழ்வுகள் நடந்தேறி உள்ளன.

மூத்த படைப்பாளி மு.சிவலிங்கம்,மல்லிகை, சி.குமார், சாரல்நாடன் (நல்லையா), சு.முரளிதரன், குறிஞ்சித்தென்னவன், மொழிவரதன் ஆகியோர் பிரதேச எழுத்தாளர்கள் கௌரவிப்பு என்ற ரீதியில் கௌரவிக்கப்பட்டனர். இந்த ஏற்பாடு களை எழுத்தாளர், இலக்கிய ஆர்வலர் ச.மணி சேகரன் ஆசிரியர் செய்தார். ஒவ்வொரு எழுத்தாளர் பற்றிய குறிப்புக்கள் தேடிப் பெறப்பட்டு தட்டச்சுசெய்து றோனியோ பிரதிகளாக கொடுக்கப்பட்டன.

3

மு.சிவலிங்கம் பல நூல்களுக்கு இன்று சொந்தக்காரர். சிறுகதைத் தொகுப்புகளாக மலைகளின் மக்கள், ஒரு விதைநெல், ஒப்பாரிக் கோச்சி, வெந்தே தணிந்தது காலம், சிறுவர் பண்ணை என்பனவும், அவரது நாவல்களாக பஞ்சம் பொழைக்க வந்த சீமை, உயிர் என்பனவும் விளங்குகின்றன.

மொழிபெயர்ப்பு நூலாக தேயிலை தேசமும், ஆய்வு நூலாக மலையக தமிழர் நாட்டார் பாடல்களும் உள்ளன. கவிஞர்/ மொழி பெயர்ப்பாளர் இரா.தம்பித்துரை அவர்களினால் மு.சி யின் சில சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு 'மார்கழிப்பனி (December Dew) என வெளிவந்தது.

தொடர்ந்து எழுதிவரும் மு.சிவலிங்கம் பன்முக ஆளுமை கொண்டவர். நல்ல சினிமா இரசிகர், விமர்சகர், பேச்சாளர், தொழிற்சங்க அரசியலில் அனுபவமிக்கவர் எனப் பலவாறு கூறலாம்.

மல்லிகை சி.குமார் மாடும் வீடும் (கவிதை நூல்) மனுஷியம் (சிறுகதைத்தொகுதி) என்பன வற்றின் சொந்தக்காரர் தொடர்ந்து நல்ல பல சிறுகதைகளை மலையகப் பின்புலத்திலிருந்து சமூகத்தின் ஊடாக ஊடுருவி எழுதி வருபவர். அமரர் சாரல் நாடன் ஓர் ஆய்வாளர் இவரின் கோதண்ட ராமன் நடேசய்யர் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசை பெற்றது.

பாட்டும் நானே...

வே.தில்லைநாதன்

தீர்ப்பை எதிர்பார்த்து நீதிமன்று நிரம்பி வழிந்தது. தீர்ப்பு வந்தது. எதிரிகள் நிரபராதிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் ஏது மில்லை.

ஏமாற்றத்துடன் வெளியேறிய மக்கள் மத்தியில் எதிரும் புதிருமான குண இயல்பு கொண்ட இரு நண்பர்களுமிருந்தனர்.

"பாரடா மச்சான், இந்த அநியாயத்தை படுகொலை செய்த பாவியளுக்கு விடுதலையாம். என்னடா தீர்ப்பு இது? ஒருவன் குமுறினான்.

"தீர்ப்பு சரிதான். ஆதாரம் இல்லையே"

"வலுவான சாட்சிகள் இல்லையா?

"இருக்கிறாங்களே"

"அவங்கள் சாட்சி சொல்லியிருக்கலாந்தானே?

"அவங்களுக்குப் பாதுகாப்பான சூழல் இல்லையே

"அவங்கட பாதகாப்புக்கு யார் பொறுப்பு?"

அந்த வினாவுக்கு விடையாக 'பாட்டும் நானே பாவமும் நானே' என்ற பாடலை அசை போட்டன நண்பனின் உதடுகள்

(பி.கு: திருமலை மாணவர்கள் படுகொலை சம்பந்தப்பட்ட தீர்ப்பு அண்மையில் வெளியானது.)

தொடர்ந்து ஆய்வுத்துறையில் தன்னை ஈடு படுத்தி கொண்டவர்.

மலையகத் தமிழர், மலையக வாய்மொழி இலக்கியம், லோரி முத்துக் கிருஷ்னாவின் ஜனமித்திரன் கட்டுரைகள், பிணந்தின்னும் சாஸ்திரங்கள் (சிறுகதைகள்) மலைக் கொழுந்தி (சிறுகதைகள்) கண்டி ராசன் கதை (ஆய்வு) புதிய இலக்கிய உலகம், பேரேட்டில் சில பக்கங்கள், சிந்தையள்ளும் சிவனொளிபாதமலை, மலையக விடிவெள்ளி கோ.ந.மீனாட்சியம்மாள், சி.வி. சில சிந்தனைகள், இளைஞர் தளபதி இர.சிவலிங்கம், சி.வி. வேலுப்பிள்ளை, மலையக நிர்மாணச் சிற்பி கோ.நடேசய்யர் என்றவாறு இன்னும் சில நூல்களுக்கும் உரிமையாளர்.

இதே போன்றே குறிஞ்சித் தென்னவன் சிறந்த கவிஞர். சாதாரண தொழிலாளியாக வாழ்வினைத் தொடங்கி தொழிலாளியாகவே லபுக்கலையில் வாழ்ந்து அமரர் ஆனவர்.

மொழிவரதன் மேக மலைகளின் ராகங்கள் (சிறுகதைகள்) கண்ணாடி சுவர்களும் சில காகித மனிதர்களும் (சிறுகதைகள்) தளிரே தங்க மலரே (சிறுவர் இலக்கியம்) ஒரு நாடும் மூன்று நண்பர்களும் (மூன்று குறுநாவல்கள்) நறுக் (ஹைக்கூ கவிதைகள்) மலையக கல்வி சில சிந்தனைகளும் ஆலோசனைகளும் போன்ற நூல்களை வெளியிட்டவர்.

மொழிவரதன் அவர்கள் ஹோல்புறூக் த.ம.வி அதிபராக இருந்த வேளையில் அங்கு கடமையாற்றிய ச.மணிசேகரன் ஆசிரியர் ஊடாக சில இலக்கியச் செயற்பாடுகள் நிகழ்ந்தன. 18.02.1992இல் ச.மணிசேகரத்தின் முயற்சியால் அதிபரின் ஒத்துழைப்புடன் மேற்குறிப்பிட்டோர் பிரதேச எழுத்தாளர்கள் எனும் அடிப்படையில் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் விசேடம் என்னவெனில் மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்களின் விபரங்கள் தொகுக்கப்பட்டு சுருக்கமாக றோனியோ பிரதி ஊடாக சிறு பிரசுரமாக நூலாக வெளியிடப் பட்டமையாகும். மேடையில் குறிப்பிட்ட எழுத்தாளரின் பெயர் கூறப்பட்டவுடன் ஒரு மாணவர் அவ்வெழுத்தாளர் பற்றிய குறிப்பை வாசித்து அவரை அறிமுகம் செய்திட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் அவ்வெழுத்தாளர் உரையாற்றினார்.

இவ்விலக்கிய விழாவை ஒட்டிப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. முடிவுகள் அதே றோனியோ பதிவில் சேர்க்கப்பட்டிருந்தன.

இவ்விழாவையொட்டி கேசவன் புத்தக சாலையினர் நூல் கண்காட்சியும் விற்பனையும் நடத்தினர். அதுமட்டுமல்லாது நூல் சேகரிப்பும் இடம்பெற்றிருந்தது. நல்லுள்ளங்கள் பல நூ ல்களை நல்கி இருந்தனர்.

அதுவரை அப்பிரதேசத்தில் இப்படியான பிரதேச படைப்பாளிகளைப் பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பின்னாளில் சில நிகழ்வுகள் நடந் துள்ளன எனலாம்.

❍❍❍

மானா மக்கீன் மடல் மஸ்கட்டிலிருந்து...

அறுபுலக நாவல் நாயகி பெற்றார் பெரும் விருது!

அறபு நாடுகளில் மிகமிக வித்தியாசமான தேசம் ஓமன் **(OMAN)** இதுவே சரியான உச்சரிப்பு. ஆனால் வழக்கத்தில் ஓமான்! தலைநகர் மஸ்கட்.

அங்கிருந்து இந்த இலக்கிய மடல்.

ஒரு பக்கம் சவூதி அறேபியாவும் யேமனும். இன்னொரு பக்கத்தில் 'அமீரகம்" எனப்படும் துபாய் - சார்ஜா. இவற்றிலிருந்து ஒரே மணிப்பயணம். பண்டைக் காலத்தில் கேரளக்கரையோரப் பிணைப்பு.

இந்தப் பாலைவனத்திலும் இலக்கியச் செழிப்புண்டு. இப் பொழுது சமீபத்தில் உலகளவில் பேசும்படியாக ஒரு நாற்பது அகவைப் பெண்மணி சாதனை!

பிரிட்டனில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயர் பரிசுகளில் ஒன்றான 'மேன்புக்கர்' (Man Booker) பரிசு ஓமன் படைப்பிலக்கியவாதி கலாநிதி ஜோகா முகம்மது அல்ஹார்த்தி (Dr.Jokha Mohamed al Harthi) அவர்களின் நாவல் 'செலஸ்டியல் பொடீஸ்' (Celestial Bodies) பெற்றுள்ளது.

அவர் இவ்வுயர் விருது பெறும் முதலாவது ஓமன் தேசப் பெண் படைப்பிலக்கிவாதியாகிறார்.

பன்னாட்டு எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் உருவாக்கும் நாவல்களில் ஒன்றைச் சிறந்ததாகத் தேர்வு செய்து வழங்கும் நடைமுறை. (சுமார் அரை நூற்றாண்டுகாலமாக பிரிட்டனில் நடக் கிறதாம்! நாம்தாம் அறிய வில்லையோ.!)

ஐவர் கொண்ட தேர்வுக்குழுவின் வாசிப்பில், பரிசீலிப்பில் வந்தது அவர் நாவல். போட்டியில் கலந்து கொண்டோரில் பெரும்பாலோர்பெண்களே!

பரிசு நாவல் எதைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது?

ஒரு கால ஓமன் தேசத்தில் காணப்பட்ட பெண்ணடிமைத்தனத்தின் போக்கைச் சொல்கிறது. அக்காலத்தில் வாழ்ந்த மூன்று சகோதரிகளின்அடிமைத்துவ வாழ்க்கை, அவர்களது மணவாழ்வு அனுபவங்கள் போன்றவைகளை வெளிச்சமிட்டு யதார்த்த பூர்வமாக சித்தரிக்கிறது.

அறபு மூலத்திலிருந்துஆங்கில ஆக்கம் மரிலீன் பூத். -பிரிட்டன்.

ஏற்கனவே எழுத்தாளர் ஜோஹா முகம்மது அல்- ஹார்த்தி அறபியில் மூன்று நாவல்கள், இரண்டு சிறுகதைத்தொகுப்புக்கள், சிறுவர் நூலொன்று என ஓமனில் அறியப்பட்டவர்.

அத்தோடு, பண்டைய அறபுக்கவிதைகள் தொடர்பான ஆய்வொன்றை எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு கலாநிதியாகவும் பெருமை பெற்றவர்.

என் மகளார் மகப்பேற்றியல்மருத்துவ நிபுணராய் பணிபுரியும் ஓமன் ஆட்சியாளரின் 'சுல்தான் காபூஸ் பல்கலைக்கழக வளாகத்தில் இவரும் மற்றொரு பீடமான அறபு மொழித்துறை-இலக்கியம் இரண்டுக்குமான பிரிவில் துணைப்பேராசிரியராக உள்ளார்.

"மதம் சார்ந்தவைகளாகவே அறபுலகத்தைப்பார்க்கிற வெளியுலகத்தினருக்கு எங்கள் அறபு கலை இலக்கிய பண்பாட்டுக் கூறுகளை அறிய எனக்குக் கிடைத்த இந்த உயரிய கௌரவம் உதவிசெய்யும்" - என ஜோஹா முகம்மது அல்-ஹார்த்தி அடக்கத்துடன் தெரிவித்து நெகிழ்கிறார். பாராட்டி வாழ்த்துவோம்.

மேற்குறித்த நாவல் நாயகியின் சிறுகதை ஒன்றைத் தமிழில் வாசிக்க, அஷ்றப் ஷிஹாப்தீன் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ள "ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்" சிறுகதைத் தொகுப்பைக் கையிலெடுங்கள்.

இலக்கியம் சமூகத்தின் கண்ணாடி

உமது முகத்தைப் பார்க்க கண்ணாடியை உபயோகிக்கின்றாய். ஆனால் உனது ஆன்மாவைப் பார்ப்பதற்கு கலையின் நுட்பங்களை உபயோகிக்கின்றாய் - அறிஞர் பேர்னாட்ஷோ.

இலக்கியம், என்பது மொழியின் துணையோடு எமது உள்ளார்ந்த உணர்ச்சிகளுக்கும் எழுச்சிகளுக்கும் உருக்கொடுக்கும் படைபாற்றல் எனலாம். சமதாய மாற்றத்துக்கு இலக்கியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது சான்றோர் வாக்கு. சிற்பி சிலையை உருவாக்குவதற்கு, கல்லை உபயோகிப்பது போன்று, எழுத்தாளனும் மொழியின் வேகம், சொல்நயம், தாளலயம் முதலிய சகல தன்மைகளையும் நன்கு அறிந்து, மொழியைப் பயன்படுத்திவருகின்றான்.

கவிதை புனைபவர்களும் சில யாப்புவிதிகளுக்கு அமையப் படைக்கின்றார்கள் கவிதை உள்ளத்தில் தோன்றும் ஊமைக் கனவுகளை, கற்பனையை, மன உளைச்சல்களை, மன மகிழ்ச்சியை, உருக்கொடுத்து வெளியிட முடியாது தவிக்கும் மனிதர்கள் நிறைந்த சமூகத்திலே, அவற்றிக்கு ஒரு கலைவடிவம் கொடுத்து இசைப் பொலிவு அளித்து, உணர்ச்சிகளை எழுத்தோவியமாகப் பண்ணும் திறமைதானே கவிஞன் என்ற பெருமையை ஒருவனுக்குத் தேடித் தருகிறது. சுருங்கக் கூறின் இலக்கியம் மனித சிந்தனையைச் சித்திரங்களாகத் திரட்டுவதோடு, மனிதனுக்கும் புற உலகத்துக்கும் உள்ள தொடர்பை அல்லது தொடர்பின்மையை, மனிதக் கண்கொண்டு பார்த்த வண்ணம் உள்ளது. மனிதன் உணர்ச்சிக்கு உட்பட்டவன். உணர்ச்சி உண்மை அறியும் சாதனமாகவும், அதை மறைக்கும் திரையாகவும் அமைந்துள்ளது. இலக்கியம், புற உலகின் அடிமுடியைத் தேடும் ஒரு முயற்சி எனவும் கூறலாம். இது தேசம் தோறும் மொழிக்கும் பண்புக்கும் தக்கபடி பல்வேறு ரூபங்களில் அமைந்துள்ளது. இலக்கியத்தைப் படைப்பதற்கு எழுத்தாளன் அவசியம் ஆனால் எல்லாப் படைப்புகளும் இலக்கியமாகாது. முழுமனதோடு உச்சக்கட்டத்தில் உணர்த்தப்படும் எழுத்து எப்பிரிவைச் சார்ந்தாக இருந்தாலும் படைப்பு இலக்கியமே ''மனிதர்களிடையே கருத்துக்கள் பகிரப்படாவிட்டால் நாகரிகம் தோன்றியிருக்க முடியாது'' என டாக்டர் பி. கிற்(Dr.P.Hitt) கூறியுள்ளார்.

இலக்கியமும் தத்துவ ஞானமும், அரசியல் கோட்பாடுகளும் நீதி நெறிகளும், சரித்திர வளர்ச்சியின் சக்திமிக்க கருவிகளாகத் திகழ்கின்றன. இது சிந்தனையின் போக்கை வீச்சை, எதிர்மாறான சிந்தனைகளை, சூழலை, எண்ணக்கருக்களை, பிரதி விம்பப்படுத்தி, இவைகளுக் கிடையில் ஒரு சமநிலையை நிலைநாட்ட முற்படும் முயற்சியாகும்.

இலக்கியத்தின் கடமை என்ன? படைப்பாளியை யாதார்த்த ரீதியாகத் தனது உணர்வுகளை, கருத்துகளை வெளிப்படுத்தத் துணையாக நிற்பதாகும். நோவாமி மிச்சிஸன் பேராசிரியரின் சொற்தொடரில் கூறுவது பொருத்தமாகும்.

எழுத்தாளன் சிந்தனையின் பலாத்காரங்களால் வெறிகொண்டு யதார்த்தத்தை உதை உதையென்று உதைத்து மாற்று உரு கொடுக்கின்றான். படைப்பின் முழு நடைமுறையும், கலைஞனின் முழு பிரயத்தனமும் யதார்த்தத்தோடு நடைபெறும் இந்த பலாத்கார மோதலில் தான் பொதிந்து கிடக்கின்றது, சமூகத்தைப் பற்றிய ஓர் உண்மையான ஓவியத்தை உருவாக்கும் இந்த நன்முயற்சியில்தான் அடங்கிக் கிடக்கின்றது. இந்தக் கருத்தின் அடிப்படையில் இலக்கியம் சமூகத்தின் கண்ணாடிதான் என ஆராய்வது நிறைவான விளக்கத்தைப் பெற உதவும்.

ஒரு நாட்டு மக்களின் மனித தர்மம், மனித உரிமைகள், சுதந்திரம் தேசாபிமானம், ஒற்றுமை போன்ற பண்புகளை வளர்க்க, பொருத்தமான மாற்றங்களைக் கொண்டுவர இலக்கியம் பண்டைக் காலம் தொட்டு உதவிவருகின்றது. மக்களுக்கு கற்பிக்க, நெறிப்படுத்த, வழிப்படுத்த, எல்லாவற்றிற்கும் மேலாக இன்று கூடுதலாகத் தேவைப்படுகின்ற மக்கள்

வட கோவை
பூ.க. இராசரத்தினம்

பற்றிய சிந்தனையை இலக்கியம் வளர்க்கும் என்ற கருத்து உலகம் எங்கும் வளர்ந்து வருகின்றது. உன்னை நம்புவது வீரமாகும். இதை யாராலும் கற்பிக்க வேண்டியதில்லை என இலக்கியம் உணர்த்துகின்றது. "இன்று சில பெரிய வினாக்கள் மனித வர்க்கத்துக்கு முன் வைக்கப்படுகின்றன. இவற்றிற்கு தொடர்ந்து விடைகாண முயல வேண்டிய பாரிய பொறுப்பு மனித வர்க்கத்துக்குண்டு" எனப் பிரபல எழுத்தாளர் ரொல்ஸ்ரோய் கூறியுள்ளார். ஆம், நாம் இனவேறுபாடு காட்டாமல் இலக்கியப் படைப்புகளை ஆதரிக்க வேண்டும். உதாரணமாக "தமிழ் இலக்கியத்திற்கு புதிய இரத்தம் பாய்ச்சுகிறது" என்ற பேராசிரியர் கைலாசபதியின் கூற்று மலையக இலக்கியம் தமிழ் மக்களைச் சென்று அடையக் கூடிய மொழிநடை உண்டு.

இலக்கியம் ஒரு பரந்த விடயம். இதற்கு இமயமலையையும் அசைக்கும் சக்தியுண்டு. ஆனால் இலக்கியத்தின் அழியா அமிர்தத்தை ஒருவரால் சுவைக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகும் "உனது முகத்தைப் பார்ப்பதற்கு கண்ணாடியை உபயோகிக்கின்றாய். ஆனால் உன் ஆன்மாவைப் பார்ப்பதற்கு கலையின் நுட்பங்களை உபயோகிக்கின்றாய்" அறிஞர் பேர்னாட்ஷோவின் கூற்று. உன்னை நீ அறிவது, நம்புவது வீரமாகும். இது யாராலும் கற்பிக்க வேண்டியதில்லை என்பதை இலக்கியம் உணர்த்துகிறது. இலக்கியத்தை, மக்களிலிருந்து, சமுதாயத்திலிருந்து வாழ்விலிருந்து பிரிக்காமல், நல்ல சிந்தனைகளை மேலும் மேலோங்கச் செய்ய வேண்டும். முற்போக்கான சனநாயக, சமதர்ம மரபுகளை பாரம்பரியங்களை முன்னெடுக்க வேண்டும்.

செல்வந்தர்களின் உல்லாச வாழ்க்கை பற்றியும், உயரிய கோபுரங்கள் பற்றியும் விபரிக்காமல் பாட்டாளி மக்களின் உயர்ந்த இலட்சிய வாழ்வுக்கு வழிவகுக்கக்கூடிய முன்னேற்றகரமான கருத்துக்களைப் பரப்பும் வலிமை இலக்கியத்துக்குத் தேவை.

வீரமும் தீரமும் நிறைந்த இலக்கியத்தின் ஊடாக மக்கள் விழிப்படைந்து தமது உரிமைகளை வளர்க்கவும் பேணிப்பாதுகாக்கவும் உதவவேண்டும். சமூக வளர்ச்சியின் பரிணாம விதிகள் பற்றிய நிறைவான விளக்கத்தை எழுத்தாளர்கள் நன்கு ஆய்வு செய்தல் நன்று இவ் ஆய்வு உன்னதமான கருத்துக்களை காலத்தின் தேவைக்கேற்ப சுயமாக வழங்கி பாரிய அபிவிருத்திக்கு வித்தாக அமையும். இலக்கியம் இயற்கையோடு கூட்டுச்சேர்ந்து வாழ வழிவகுத்து வந்தமையால் இயற்கை பேணிப் பாதுக்கப்பட்டது. இன்று காணப்படும் சூழலியல் பிரச்சனை முன்பு இருக்கவில்லை எனவே, அன்றும் இன்றும் சமுதாய மாற்றத்துக்கு, சமுதாயத்தை விழிப்பாக இருக்கச் செய்வதற்கு இலக்கியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டுவருவதை யாவரும் அறிவார்கள்.

வாழ்வில் வீரம், செல்வம், அறிவு எனத் தத்துவத்தில் பெறப்படுகின்றது. இத்தேவைகள் எக்காலத்துக்கும் பொருத்தமானவை சிந்து வெளியில், கிடைத்த தொல்பொருள் ஆய்வு ஆதாரங்களையும் சக்தி வழிபாட்டிற்கான மூலம் கிடைத்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இலக்கியங்கள் இப்படிப்பட்ட தத்துவங்கள் மானிட முன்னேற்றத்திற்காக உபயோகமானவை யதார்த்தமாக எடுத்துரைத்து வருகின்றன. இலக்கியம் காலத்தின் கண்ணாடி. சமூகத்தில் உள்ள குறைகளைப் பிரதிபலிக்கும் முகத்தில் அசுத்தம் இருப்பின் சுட்டிக்காட்டும். ஆனால் துடைப்பதற்கு வேண்டிய நுட்பங்களை வாசகன் கண்டுபிடிக்க வேண்டும் இலக்கியம், உள்ளத்தின் விரிவு, சுழற்சி, மலர்ச்சி, சிந்தனைப் புரட்சி போன்றவற்றோடு இணைந்ததாகும். இலக்கியகர்த்தா, வாழ்க்கையை அதன் பல்வேறு சிக்கல்களுடன், நுணுக்கத்துடன், உளவியல் தாக்கத்துடன், பின்னங்களுடன் காண்கின்றான். அவன் உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சி, உத்வேகம், நிறைந்த கருத்துக்கள் பிறக்கின்றன என்பதை உலக இலக்கியவாதிகள் ஏற்றுக்கொள்கின்றார்கள். அந்த உணர்ச்சியின் புரட்சியின் நாதம்தான் இலக்கியம் எனலாம். மொழிக்கு புதிய கருத்துத்தான் உயிர். இலக்கியப் படைப்பாளிகள் மத்தியில் சமூக விருத்திக்கான முரண்பாடான கருத்துக்கள் தோன்றுவதையும் நாம் அறிவோம். யாழ் அறிஞர்களில் ஒருவரான இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் கூற்றைக் கவனத்தில் கொள்வது பொருத்தமாகும். பாட்டுக்கொரு புலவன் பாரதி, "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்ற வார்த்தையைத் தள்ளி, "செவியை அள்ளும் சிலப்பதிகாரம்" என வைத்துக் கொள்ளும்படி பாரதிக்கு அறைகூவல் விட்டார். வாள் முனையா, பேனா முனையா சிறந்தது என்ற வாக்குவாதம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். பேனா முனைக்குள் போட்டி கருத்துப்புரட்சியால் ஏற்படுபவை. ஆம், பயனுடையவை எனவும் கருதலாம்.

எழுத்தா? பேச்சா? சிறந்ததென விவாதம் ஏற்பட்டது பற்றிக் குறிப்பிடுவதும் பொருத்த மாகும் "எழுத்திலும் பார்க்கப் பேசப்படும் சொற்கள், பெரும்பான்மையான மக்களைக்

கவர்ந்ததாகக் கூறப்பட்டாலும் ஒரு உன்னதமான கருத்தை கொள்கையை பாதுகாப்பதற்கு அதனுடைய அடிப்படை விதிகள் எழுத்தில் வடித்தால்தான் அதிக பிரயோசனப்படும். எனது புத்தகம் (மெயின் காம்ப்) கட்டிடக் கல்லாக நின்று பயன்படும்'' என்று அடொல்வ் கிற்லர் கூறியுள்ளார். எனவே ஒரு உன்னதமான கருத்து பற்றிய இலக்கியம், நிலையாக நின்று புரட்சிகரமான சிந்தனைகாட்டி ஆதாரமாக அமையும் வாய்ப்புண்டு. எப்படியிருந்த போதிலும், யூதர்கள்பாலும், ஆரியர் அல்லாவிடத்தும் வெறுப்பினை வளர்க்க, இலக்கியத்தைக் கருவியாக்கிய கிற்லரின் செயல்கள் விளைத்த அனர்த்தங்கள் உலகவரலாற்றின் கறைகளாகும் எனவும் விமர்சிக்கப்படுகின்றன.

மேலும் சோக்கிரட்டீசின் இறுதி வழக்கு விசாரணை, நீதி தொடர்பான தொடர்ச்சியுள்ள விவாதத்தை இன்னும் உலகம் முன்வைத்து வருகிறது. சோக்கிரட்டீசின் புரட்சிகர மனிதாபிமான சிந்தனை. சம பலமுடைய அவருடைய வாழ்வும் உலக சமூகத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக அமையக்கூடிய தொன்றாகும். அவர் வாழ்க்கையை நேசித்தார் மனிதன் மாண்புடன் வாழவேண்டுமென விரும்பினார். அவருடைய சமூக வளர்ச்சிக்கான கருத்துக்கள் பகுத்தறிவைத் தழுவி நின்றன. மனித அறிவுக் கலாசாரத்தில் காணப்பட்ட ஒழுங்கீனங்களை, அகற்றும் வழிமுறைகளை வெளிப்படுத்தும் சிந்தனையாளராகவும் அவர் விளங்கினார். இலக்கியப் படைப்புகளில், இவரின் கருத்துக்கள் அடிக்கடி தோன்றுவதையும் காணலாம்.

இலக்கியம் எட்டிப் பிடிக்க முடியாத இலட்சியங்களை வாழ்க்கைப் பாதையில் நடமாடவிட்டு, தானும் சேர்ந்து நடக்கும் பொக்கிசம் எனலாம். எழுத்து வடிவில் தோன்றும் கற்பகதரு. திக்கற்றவர்கட்கு திசைகாட்டும் கருவி. சமூக உயர்ச்சிக்கு சிந்தனைக்கு பொருத்தமான தீனியை வழங்கி வந்தமையையும், வழங்கி வருவதையும் நாம் அங்கீகரிக்க வேண்டியுள்ளது வாழ்க்கை பற்றிய ஒரு விமர்சனக் கூற்று. உலகப்புகழ் பெற்ற நாடக ஆசிரியரின் சில நாடகங்கள் சிந்தனையில் புரட்சியையும், தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய வல்லமையுடையவை.

புறவயமானதிலிருந்து (Objective) தன்னைத் தனியாகப் பிரித்துக்கொள்ளும் தனியொரு உட்பொருள் வாழ்க்கையாகும் என லெனின் கூறியுள்ளார். இலக்கியம் நியாயவாதியாக நிமிர்ந்து நடைபோடும் தரமுடைய கையேடு சில படைப்பாளிகள், அரசியல்வாதிகளின் ஊது குழல்களாகக் கணிக்கப்பட்டுள்ளார்கள். எழுத்தாளன் நீதி தளதளப்படைவதையும், மாசு அடைவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தவறான வாழ்க்கை, எழுத்தாளன் அவதானித்து, சீர்திருத்தக்கருத்துக்களை இரசனையுடன் வெளியீடு செய்யப்படுவதே இலக்கியமாகும். வாழ்க்கையைப் பார்க்கும் பார்வைகள் பலவாக இருக்கலாம் ஆனால் மனிதனின் நன்மைக்காகவும், உயர்வுக்காகவும் அமையவேண்டும்.

பிரான்சு தேசத் தத்துவஞானிகளின் படைப்புகள் சமூகவிருத்திக்கான புரட்சிக் கருத்துக்கள் நிறைந்தவை சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் போன்ற உன்னதமான கொள்கைகளே பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டன. அதே போன்று காலத்துக்கு காலம் இலக்கியத்தில் கருத்துப் புரட்சிகள் தோன்றிவருகின்றன. ஒரு மனிதன் தன்னைப் போலதான் மற்ற மனிதனும் என்பதனைப் போதிப்பதற்கு இலக்கியத்திற்கு இருக்கும் சக்தி பெரிது என்ற உணர்வு பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ''நான் அரசாங்கம் இல்லாத நாட்டில் வாழ்வேன் ஆனால் சேக்ஸ்பியரின் இலக்கியம் இல்லாத நாட்டில் வாழமாட்டேன் என ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். ''புராணங்கள் மேற்கு உலகத்தை ஆக்கியுள்ளது'' என ஓர் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளார் சமூகத்தின் மத்தியில் புரட்சிகரமான நல்லெண்ணங்கள் விதைக்கப்பட வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பு திருவள்ளுவர் தொழிலாளியின் முக்கியத் துவத்தை நன்கு குறிப்பிட்டுள்ளார். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லோரும் தொழுதுண்டு பின்செல்வோர்'' மேலும் சிவபெருமான் பிட்டுக்குமண் சுமந்த கதை முற்போக்கான கருத்தை உடையது. தொழிலாளிகளின் நலன்களை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்ற கார்ல் மார்க்ஸின் கருத்து முன்னோடியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிந்தனையால், உலகில் உலாவும் எண்ண அலைகளால், இலக்கியம் என்னும் ஆசிரியன் புகட்டும் சமூக எழுச்சிக் கருத்துக்களால், இலட்சியங்கள் புதிது புதிதாகப் பிறக்கின்றன இதற்கு ஏற்ற வண்ணம் அறிவுத் தாகமும் ஏற்படுகின்றது. அந்தத் தாகத்தைத் தீர்க்கும் ஏடுகளை நாம் நாடவேண்டும். பேணிப்பாதுகாக்க வேண்டும்.

இலக்கியம், சமூகத்தன்மையை, தேசியத் தன்மையை இழக்கவிடாது துணைபுரியும் தன்மையுடையதாக இருக்க வேண்டும். சமூக, அரசியல், பொருளாதார, கலாசார விடயங்களில் பொருத்தமான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின், சாதுரியமாகத் தனது

படைப்பு இலக்கியத்தைக் கையாள வேண்டும். எந்த நிலையிலும் வாழ்க்கை மேன்மை பெறவும், முன்னேற்றவும் துடிக்கின்றது என்பதை படைப்பாளி கருத்தில் கொள்ள வேண்டும் ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கையின் எல்லை விரிவு அடையும் பொழுது அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புதிதாக ஓர் எல்லையைக் (Range) குறித்துக்கொண்டுதான் வாழ்க்கை நகர்கிறது. இந்த மனித மன விரிவாக்கத்தில் நோக்கம் கொண்டு, சமூக விழிப்புக்கான கருத்துக்களோடு படைக்கப்படுவது நவீன இலக்கியமாகக் கருதப்படலாம்.

"எழுத்தாளன் மனித ஆன்மாவின் பொறியியல் அறிஞர்" என மக்சிம் கார்க்கி கூறியுள்ளார். எழுத்தாளன், தனது எழுத்தின் மூலமாக மனிதனுடைய ஆன்மாவினுள் ஊடுருவிப் பார்த்து வாழ்க்கையின் உள் இயக்கத்தைக் கண்டு படைப்பவன். எனவே எழுத்தாளன் படைப்பில் ஊக்கம், படைப்புத்திறன் (Creative Urge) கொண்டிருப்பதால், புதிய எண்ணக்கருத்து இலக்கியம் ஊடாக பரப்ப விரும்புவதை நாம் அறியக்கூடியதாக "எழுதுவதால் சம்பாதிக்கலாமாயினும் சம்பாதிப் பதற்காகவென்று எழுதலாகாது" என்ற கார்ல் மாக்சின் கருத்து கவனிக்கத்தக்கது.

எழுத்தாளன் பெறுகின்ற பொருத்தமான படைப்புச் சூழலில் காலமே கொடுக்கின்றது. இதை உணர்ந்து செயற்படுவது எழுத்தாளனே. வள்ளுவனின் ஆக்கபூர்வமான கருத்துக்களை அல்பேட் சுவெற்சர் என்ற சிந்தனையாளர் பிரமாதமாகப் பாராட்டுகிறார். வள்ளுவர் பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கைகளை காலத்துக்கு ஏற்ப வழங்கினார்.

இளங்கோவடிகள் காலத்தில், தமிழகத்தின் சமுதாய வாழ்வில் திட்டவட்டமான மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த மாறுதல்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் நல்ல இடத்தைப் பெற்றுள்ளன.

இப்படியாக கம்பனின் வசிட்டன், கம்பனின் இராமனுக்கு வழங்கிய அறிவுரையில் சமூகம் மேலோங்கி நிற்பதை யாவரும் அறியக் கூடியதாக உண்டு. கம்பன் காலத்து சமுதாயச் சூழ்நிலை, கருத்துச் சுதந்திரம், சமூக மாற்றதுக்குத் துணையாக அமைந்தது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அந்நியர் ஆட்சியும் காலனிய ஆட்சி முறையும் புரட்சிக் கவிஞர் பாரதியை எமக்கு அளித்தன.

பாரதி விடுதிலைக் கவியாக, ஜனநாயக வியாக, மக்கள் கவியாக தேசியக் கவியாக இலக்கியத்தைப் படைத்தார். பாரதியின் இலக்கியம் புத்தம் புதிய புதுமையான கருத்துக்களை எத்திசையில் தோன்றியவையாக இருந்தாலும் பாரதியின் இலக்கியம் இழுக்கத் தவறவில்லை.

ஆட்சி முறையில் உள்ள குறைகளை, மக்களின் உள்ளக் குமுறல்களை ஆங்கிலக் கவி ஷெல்லி, சேர் உவால்ரா ஸகொட் போன்றவர் களின் வழிநின்றும் சில கவிதைகளைப் பாரதி புனைந்துள்ளார். இவ்விடத்தில் கார்ல்மார்க்ஸின் கருத்தையும் குறிப்பிடுவது பொருத்தமாகும்" பிழையை எடுத்துக்காட்டாமல் விடுதல் அறிவுத் துறையில் ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்".

சிறுவர் இலக்கியத்திலும், சமூக உயர்வுக்குரிய கருத்துக்கள் மெதுவாகத் தோன்றி யுள்ளன. சிறுவர் பாடல்களை பாரதியார் தொடக்கி வைத்து உணர்ச்சிகரமான மாற்றங் களுக்கு மெருகூட்டினார். எழுத்தாளன் குழந்தை களுடன் பேசலாம், எழுதலாம். லுயிஸ் கறேல் (Louis Carol) தனது நண்பரின் குழந்தைகளை லண்டனிலுள்ள தேமஸ் நதியில் அழைத்துச் சென்றார். அவர் கூறிய நெடுங்கதைகள் "அதிசய உலகில் அலிஸ்" (Alice in Wonderland) பிரபல்யமடைந்தது. மார்க் ருவெயின் (Mark Twain) ரொம் சோயர் (Tomsyer) வீரச்செயல்கள் என்னும் சிறுவர் இலக்கியத்தைப் படைத்துள்ளார்.

தனிமனிதனையும் சமுதாயத்தையும் ஒரு நிலையில் பார்க்கக்கூடிய உண்மையையும் கனவையும் ஒன்றாகக் காட்டக்கூடிய நிலை முப்பெரும் இலக்கியத்துக்குண்டு. இன்றைய சமுதாயத்தை, யாவரும் ஒன்றே என்ற விளக்கத்தோடு உணர்வோடு வாழச் செய்து, மனித தத்துவத்தை மேம்படுத்தி அடுத்த தலைமுறைக்கு அளித்தல் இலக்கியத்தினதும் கல்வியினதும் கடமையாகும்.

சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் இலக்கியம், சமய இலக்கியம் முன்னேற்றகரமான மாற்றங் களை ஏற்படுத்தக்கூடிய வகையில் சாதுரியமாக கவின்கலை உணர்வுடன் இரசனை யுடன், இறவாவரம் பெற்ற ஆக்க நவீன இலக்கியம் உட்பட இலக்கியப் படைப்புகள் எண்ண முதிர் வையும், தெளிவான கண்ணாடி போல் பிரதி பலிப்பதுடன், சமூகத்தை இன்னல்கள் அற்ற இன்பகரமான சூழலில் சீரும் சிறப்புடன் பண்பாக, அமைதியாக ஐக்கியமான வளம் கொழிக்க, விழுமிய வாழ்வை மேற்கொண்டு வாழ முடியும் என்ற நம்பிக்கையைத் தருவதை உணரக் கூடியதாக உள்ளது.

❍❍❍

வரலாற்றில் வாழும் வல்லிக்கண்ணன்

எனது பழைய டயரியை புரட்டிக் கொண்டிருந்த பொழுது தமிழகத்தின் மணிக்கொடி காலகட்ட எழுத்தாளரும்,அனைத்து எழுத்தாளர்களாலும் மதிக்கப்பட்ட நவீன தமிழ் இலக்கிய முன்னோடிகளில் ஒருவருமான வல்லிக்கண்ணன் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் கண்ணில் பட்டது அதனை 'ஞானம்' சஞ்சிகை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்வுகொள்கிறேன்.

அன்பு மிக்க நண்பர் அந்தனிஜீவா அவர்களுக்கு வணக்கம்.

உங்கள் 18.06.2004 கடிதமும், 'கொழுந்து' ஜே.கே.ஸ்பெஷல் இதழும் உரிய நாளில் வந்துசேர்ந்தன. நான் கடிதம் எழுதுவதில் தான் தாமதம். வேலைப்பளு அதிகம் என்பதோடு சேலம், காஞ்சிபுரம் என்று வெளியூர்கள் சென்று சில தினங்கள் தங்கநேரிட்டதாலும், தாமதம் தவிர்க்க இயலாதது ஆகிவிட்டது.

நண்பர் கே.கணேஷ் அவர்களின் மரணச் செய்தி அதிர்ச்சியும் துயரமும் தந்தது. 1944 முதல் அவருக்கும் எனக்கும் நட்பு. கே.ராமநாதன் உடனும்தான். கணேஷ்க்கு என் வயதுதான் 84. அவர் பற்றிய உங்கள் நினைவுக் குறிப்புகள் நெஞ்சைத் தொட்டன. 'தாமரை'க்கு கட்டுரை எழுதி அனுப்பியிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். கடந்த மே 26இல் உங்களுக்கு அகவை அறுபது ஆகியது மகிழ்ச்சியான செய்தி. மணிவிழா சம்பந்தமாக இலக்கிய நிகழ்வுகள் நடைபெறுவது சந்தோஷமானவிஷயம். வாழ்த்துக்கள்.

நீங்கள் நடந்த ஆண்டு லண்டன், பாரிஸ் என்று அயல் நாடுகளில் உலாசென்று வந்தது இனிய அனுபவம் தான். உங்கள் நினைவுகளை 'தினகரன்' பத்திரிகையில் தொடர்ந்து பதிவுசெய்தது பாராட்டுதலுக்குஉரியது. இலங்கை தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் 25 பேர்களின் கதைகளைத் தொகுத்து, 'அம்மா' என்ற தலைப்பில் நீங்கள் சென்னை கலைஞன் பதிப்பக வெளியீடாகக் கொண்டு வந்திருப்பது நல்லகாரியம். புத்தகம் வெளிவந்திருக்கலாம். திரு.நந்தன் எனக்கு இதுவரை பிரதி அனுப்பவில்லை. புத்தகம் வந்ததும் படித்துப் பார்த்து மதிப்புரை எழுதுவேன்.

"கொழுந்து இதழ் அனுப்பியதற்குநன்றி, படித்து மகிழ்ந்தேன் ஜே.கே. ஸ்பெஷல்' என்று ஜெயகாந்தன் எழுதிய முன்னுரை ஒன்று எனத் தொகுத்து வெளியிட்டிருப்பது நல்ல முயற்சி. பாராட்டப்படவேண்டியது ஆகும். 'ஒரு இலக்கியக்காரனின் கெண்டயினர் பயணம்' என்கிற இளைய அப்துல்லாவின் அனுபவப் பதிவு உருக்கமான வாழ்க்கைச் சித்திரம். 'காலத்தை வென்ற கதை' என்ற பூரணியின் "மழையில் கரைகிறது மானம்'' சிறுகதையை மறுபிரஞ் செய்துதிருப்பது வரவேற்புக்குரியது. வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டஉழைப்பாளி மக்களின் துயரங்களையும் சோக அனுபவங்களையும் கதை நன்கு எடுத்து காட்டுகின்றது. 'புகலிடத்து இலக்கியம்' அறிமுகம் நன்று. 'கொழுந்து' தொடர்ந்து வளர்ந்து மலையகத்து இலக்கிய வளர்ச்சிக்கு நற்பணிகள் ஆற்றக் காலம் துணைபுரியட்டும் வாழ்த்துக்கள்.

– அன்பு வல்லிக்கண்ணன்

அந்தனி ஜீவா

Ken Follett இன் Lie Down With Lions (1985)



சோவியத் யூனியன் 1980களில் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியது. சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பல ஆப்கான் விடுதலை இயக்கங்கள் கொரில்லாத் தாக்குதல்களை நடத்தின. அவர்களுக்கு எதிராகச் சோவியத் ஆக்கிரமிப்புப் படைகள் கிராமங்களையும் மக்கள் வாழ்விடங்களையும் கடுமையாகத் தாக்குகின்றன. விடுதலை கோரும் கொரில்லாக்கள் மக்கள் மத்தியில் (வழமைபோல்) வாழ்கின்றனர். தேவையான நுகர்வுப் பொருட்களையும் ஆயுதங்களையும் பாகிஸ்தானிலிருந்து கடத்திவருகின்றனர். ஆயிரக்கணக்கான ஆப்கான் அகதிகள் நாட்டு எல்லையைக் கடந்து பாகிஸ்தானில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இத்தகைய பின்புலத்தில் இந்நாவல் அமைந்துள்ளது.

500 பக்கங்களைக் கொண்ட இந்நாவல் வறிய ஆப்கன் மக்களின் இஸ்லாமிய மரபுகள், வாழ்க்கைமுறைகள், வாழ்க்கை பற்றிய சிந்தனைகள் என்பவற்றை யதார்த்தமாகக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. ஆனால் நாவலின் பிரதான அம்சம், சோவியத் ஆக்கிரமிப்பை கடுமையாக எதிர்க்கும் ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உளவுத்துறைகளின் இரகசியமான செயற்பாடுகளாகும்.

ஐக்கிய அமெரிக்க, பிரஞ்சு உளவுத்துறையினரின் இரகசிய நடவடிக்கைகள் பாரிஸ் நகரில் இடம்பெறுவதுடன் நாவல் தொடங்குகின்றது. துருக்கி அரசாங்கத்துக்கு எதிரான முஸ்லிம் தீவிரவாதிகள் பாரிஸில் பல துருக்கி அதிகாரிகளைக் கொலை செய்கின்றனர். இவர்களைக் கைதுசெய்ய பிரஞ்சுக் காவல்துறை நடவடிக்கை எடுக்கின்றது. எல்லிஸ் என்ற அமெரிக்க ஒற்றன் இத்தீவிரவாதிகளைக் கைதுசெய்யத் தனது சாமர்த்தியத்தைப் பயன்படுத்துகின்றான். ஆங்கிலக் கவிஞன்போல வேடமிட்டுத் தன்னை மறைத்து உலவுகின்றான். அவனது காதலி ஜேன் என்பவள். அவளும் மிகவும் சாமர்த்தியசாலி, ஒரு ஆங்கிலப் பெண், ஜீன் என்ற பிரஞ்சு மருத்துவரும் அவளைக் காதலிக்கின்றான். எல்லிஸ் ஓர் அமெரிக்க ஒற்றன் என்ற விடயம் ஜேனுக்குத் தெரியாது. ஆயினும், எல்லீஸ் பல தீவிரவாதிகளைக் கைதுசெய்ய உதவியதால் அவனது உளவாளிவேடம் கலைகின்றது. ஜேன் அவனை வெறுத்து பிரஞ்சு மருத்துவருடன் இணைகின்றாள். எல்லீஸ் தனது பணி முடிந்ததும் அமெரிக்கா செல்கின்றான்.

அடுத்த கட்டம் ஆப்கானிஸ்தான் தொடர்பானது. அங்கு ஆப்கன் தீவிரவாதிகள் மீதான ரஷ்யத் தாக்குதல் காரணமாக, ஏராளமான ஆப்கன் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்; காயப்படுத்துகின்றார்கள். அவர்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன. மருத்துவர் ஜீன் தனது மனைவி ஜேனுடன் மக்களுக்கு மருத்துவ உதவிசெய்ய ஆப்கானிஸ்தான் செல்லுகின்றனர். பிரஞ்சு மருத்துவ உதவி அமைப்புகள் அவர்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்புகின்றன.

சுகபோக வாழ்க்கை வாழ்ந்த மருத்துவ தம்பதிகள் ஆப்கான் கிராமத்தில் மருத்துவ உதவிசெய்யப்போய் பல சிரமங்களை அனுபவிக்கின்றனர். ஐரோப்பியப் பெண் என்பதால், கிராம மக்களும் ஜேனை வெறுக்கின்றனர். ஜேன் மிகுந்த மனிதாபிமானத்துடன் ஆப்கன் மக்களுக்கு மருத்துவ உதவிகள் செய்கின்றாள். பின்தங்கிய அக்கிராம

பேராசிரியர்
சோ. சந்திரசேகரன்

மக்களுடன் அவள் எவ்வாறு அனுசரித்து வாழ்கின்றாள் என்பதை சிறப்பாக நாவலாசிரியர் விளக்குகின்றார். அம்மக்களின் பாரம்பரிய மருத்துவ உதவியுடன் அவள் ஒரு குழந்தையைப் பெற்று வளர்க்கின்றாள்.

இவ்வாறு செல்லும் நாவலில் முக்கிய திருப்பங்கள் ஏற்படுகின்றன. முதலாவது திருப்பம், அமெரிக்க ஒற்றன் எல்லீஸ் அமெரிக்க அரசின் அறிவுறுத்தலின் பேரில், ஆப்கன் தீவிரவாதிகளுக்கு ஆயுத உதவிசெய்ய (ரஷ்யாவுக்கு எதிராக) ஆப்கன் வருகின்றான். அங்கு மீண்டும் பழைய காதலி ஜேனை சந்திக்கின்றான்.

மறுபுறம் ஜேன் தனது கணவன் மருத்துவர் ஜீன், ஆப்கன் மக்களுக்கு மருத்துவ உதவிசெய்ய வந்தாலும் அவனும் ஒரு ரஷ்ய உளவாளி எனக் கண்டறிந்து அதிர்ச்சியடைகின்றாள். எனினும் கணவனை ஆப்கன் மக்களிடம் காட்டிக் கொடுக்கவிரும்பவில்லை. தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை ரஷ்யர்களுக்கு வழங்கும் மருத்துவர், தீவிரவாதத் தலைவரைக் கொல்லவும் சதிசெய்கின்றான். எல்லீஸ் தீவிர வாதிகளுடன் செய்ய முயன்ற ஒப்பந்தத்துக்கு இடையூறு விளைவிக்கின்றான். பின் மற்றொரு உளவுப் பணிக்காக அவ்விடம் விட்டு அகன்று செல்லுகின்றான்.

மீண்டும் எல்லிசுடன் இணையும் ஜேன், ரஷ்ய குண்டுவீச்சால், வாழ்ந்த கிராமத்தைவிட்டு இருவருமாக வெளியேறுகின்றனர். எல்லிஸ் அமெரிக்க ஒற்றன் என்பதை அறிந்த ரஷ்யப் படைகள் அவனைக் கொல்வதற்காகத் தேடுகின்றன. எல்லிஸ் ஜேனுடனும் குழந்தை யுடனும் ஆப்கான் மலைப்பிரதேசத்தினூ டாகத் தப்பிச் சொல்கின்றான். வழியில் சந்திக்கும் ஆப்கான் மக்களில் சிலர் ரஷ்ய ஆதரவாளர்கள் என்பதையும் அறிகின்றான்.

நாவலாசிரியர் இவ்விடத்து ஆப்கன் மக்களின் மலைசார்ந்த வாழ்க்கை மற்றும் இயற்கை அழகினை விரிவாக வருணிக் கின்றார். ஜேனும் எல்லீசும் தமது நாட்டைச் சென்றடைந்து வாழ்க்கையை நடாத்த, நாடுகளுக்கிடையே யான பனிப்போர் தொடர்வதாக நாவல் முடிவடை கின்றது.

ஆப்கன் - ரஷ்ய போர் நிகழ்வுகளும் சர்வதேச நாடுகளின் உளவாளிகளின் இரகசிய செயற் பாடுகளும் ஜேன், எல்லீஸ், ஜீன் ஆகியோரின் முக்கோணக் காதலும் இந்நாவலின் பிரதான கருப்பொருளாகும்.

Fredrick Forsyth இன் Dogs of war (1974)

பிரித்தானிய தொழில் அதிபர் ஒருவர் சங்காரு என்ற (கற்பனை) ஆபிரிக்க நாட்டின் அரசாங்கத்தை வீழ்த்த ஒரு ஐரோப்பியக் கூலிப்படையை வாடகைக்கு அமர்த்துகின்றார்.

அந்நாட்டின் கனிவளம் பற்றிய கண்டு பிடிப்பு, தாக்குதலுக்கான ஆயத்தம், கூலிப்படையைச் சேர்த்தல், சதிக்கான ஆயுதச் சேகரிப்பு, அதற்கான கொடுப்பனவு முதலியன நாவலில் விபரிக்கப்படுகின்றன.

சங்காருவின் கனிவளம் (பிளாட்டினம்) பற்றி சோவியத் யூனியனுக்கும் தெரியவருகின்றது. நாட்டின் ஜனாதிபதி கிம்பா ஒரு மார்க்சியவாதி, சோவியத் யூனியன் கிம்பாவுக்கு ஒரு மெய்ப் பாதுகாவலனை வழங்குகின்றது. அத்துடன் கனிவள உண்மையை அறிய ஒரு விஞ்ஞானிகள் குழுவையும் அனுப்புகின்றது. இதனைத் தெரிந்துகொண்ட பிரித்தானிய தொழில் அதிபர், சணோன் என்பவனை சதிமுயற்சியில் ஈடுபடுத்துகின்றான். அவனுக்கு 100 நாட்கள் அவகாசம் வழங்கப்படுகின்றது. கூலிப்படைத் தலைவன் உல்லாசப் பயணிபோல் ஆபிரிக்க நாட்டுக்குச் சென்று வேவுபார்க்கிறான். ஆட்சியாளர் கிம்பாவின் படைப் பலவீனங்களை அவன் புரிந்துகொள்கின்றான்.

கூலிப்படைத் தலைவன் தனது பழைய கூலிப்படை நண்பர்களை ஒன்று சேர்க்கின்றான். சரக்குக் கப்பலை ஒழுங்குசெய்கின்றான். சீருடைகள், சம்பாத்துக்கள், இயந்திரத் துப்பாக் கிகள் எனப் பல சாதனங்களைக் கொள்வனவு செய்கின்றான். இவை பல ஐரோப்பிய நாடு களில் வாங்கப்படுகின்றன.

கூலிப்படைத் தலைவன் தனது முதலாளியின் மகளுடன் தொடர்பு கொள்ளுகின்றான். முதலாளி எதற்காக ஆபிரிக்க நாட்டைக் கைப்பற்ற முயற்சிக்கின்றான் என்பது அவனுக்குத் தெரிய வருகின்றது.

கூலிப்படைத்தலைவனின் எதிரியான சார்ல்ஸ், தனக்கு இப்பணி கிடைக்காததன் காரணமாக அவனைக் கொல்ல முயலுகின்றான்.

கேணல் பொபி என்பவன் ஆபிரிக்க நாட்டின் இராணுவத் தளபதி; ஆட்சியாளர் கிம்பாவுடன் முரண்பட்டு நாட்டைவிட்டு வெளி யேறியவன். தொழில் அதிபர் இவனையும் தனது சதிமுயற்சியில் இணைத்துக் கொள் கின்றார். அவன் படிப்பறிவில்லாதவன். சதி வெற்றிபெற்றதும் அவனை ஆட்சியாள னாக்கிவிடலாம். கனிவள உரிமைகளைப் பெறும் ஒப்பந்தத்தை இலகுவாகச் செய்து கொள்ளலாம்.

பொபி வாசிக்காமலே கையெழுத்துப் போட்டு விடுவான் என்பது தொழில் அதிபரின் எண்ணம்.

திட்டமிட்டபடி ஆட்சியாளன் கிம்பாவின் மாளிகை தாக்கப்படுகின்றது. வெளியே இருந்த இராணுவம் மடக்கப்படுகின்றது. ரஷ்ய மெய்க்காப்பாளன் கொல்லப்படுகின்றான். பொபி நாட்டின் ஜனாதிபதியாக அழைத்து வரப்படுகின்றான். ஆயினும் கூலிப்படைத் தலைவன் பொபியைச் சுட்டுவீழ்த்துகின்றான். டாக்டர் ஒக்கயே என்ற ஆபிரிக்க அறிஞரை கூலிப்படைத் தலைவன் நாட்டின் ஆட்சித் தலைவனாக நியமிக்கின்றான். அத்தலைவன் தொழில் அதிபர் உரிய பணத்தைச் செலுத்தி கனிவள உரிமையைப் பெறலாம் என்கிறான். ரஷ்ய விஞ்ஞானிகள் வருகைக்குத் தடைவிதிக்கின்றான். கூலிப்படைத் தலைவன் தனது ஊதியத்தை இறந்த நண்பர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்குகின்றான். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவன் இறுதியில் அவன் தற்கொலை செய்துகொள்கின்றான்.

நூலாசிரியர் உண்மையில் ஆபிரிக்க விவகாரங்களில் ஈடுபாடுகாட்டியவர். கயனா நாட்டில் ஆட்சியைக் கவிழ்க்க அவர் உண்மையாகவே சதித்திட்டம் தீட்டியதாகப் பலர் நம்பினர். அச்சதித்திட்டமே இந்த நாவலாகவும் இருக்கலாம். இவர் கூறியவாறான சதித்திட்டம் உண்மையிலும் இடம்பெற்றிருக்கலாம். இந்நூல் தொழில் புரியும் கூலிப்படையினருக்கான ஒரு பாடநூல் என்றும் வர்ணிக்கப்பட்டது. அவ்வாறே, பிரஞ்சு ஜனாதிபதியைக் கொலைசெய்யும் முயற்சிபற்றிய நூலாசிரியரின் மற்றொரு நூல் (Day of the Jackal) கொலைகாரர்களுக்கான 'வழிகாட்டி' எனப்பெயர் பெற்றது.

❍❍❍

குறுங்கதை

கணவன் சொன்ன மந்திரம்

முன் வராந்தாவில் அமர்ந்து அன்றைய நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்த சீதா கோலிங் மணிகேட்டு வந்து கதவைத் திறந்தபோது அங்கு தனது வலதுபக்கத் தோளில் தோல் பையைச் சுமந்தவனாக வாலிபன் ஒருவன் நிற்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

"என்ன விஷயம்,?" விசாரித்தபொழுதுதான் தங்க நகைகளுக்கு பொலிஷ் போடுபவன் என்ற விபரத்தைச் சொன்னான். தான் நெடுங்காலமாக இத்தொழிலைச் செய்வதாகவும், வீடுவீடாகச் சென்று நடமாடும் சேவையை நடத்திவருவதாகவும் இன்றைய நாளில் தொடங்கும் முதல் வேலை என்பதால் மறுக்காமல் ஏதாவது நகையை பொலிஷ் போடுங்கள் மேடம் என்று சொன்னபோது அவளால் அதனை மறுக்க முடியவில்லை. நம்பமுடியாவிட்டாலும் தன் நகைகளுக்கு பொலிஷ் போட்டு அழகு பார்க்கவேண்டும் என்ற நப்பாசை அவளைவிடவில்லை. வீட்டில் தன் கணவர் இல்லாத நேரத்தில் 'எவர் வந்து கோலிங் பெல்லை அழுத்தினாலும், கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே இருக்கவேண்டும், காலம் கெட்டுக்கிடக்குது ஏமாற்றும் பேர்வழிகள் அதிகமாக நடமாடுகிறார்கள். ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்ற கணவனின் எச்சரிக்கையைக் கூட மறந்துவிட்டாள்.

அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து இருக்கும் என்பதைக் கூட அவள் அறியாதவள் ஆடவன் ஒருவனை உள்ளேவிட்டது தவறுதான் ஏன் உயிருக்குக் கூட ஆபத்துத்தான்.

"உள்ளே வாங்க" அவனும் சோபாவில் அமர்ந்த வண்ணம் கையில் இருந்து பொலிஷ் போடுவதற்கான உபகரணங்களுடன் நகைகளையும், பில் புத்தகத்தையும் எடுத்து எதிரே இருந்த கண்ணாடி ஸ்டூலில் வைத்தான்.

தனது படுக்கை அறைக்குள் இருந்து சிறிதுநேரத்தில் வந்தாள் சீதா. நகைகளை அவனிடம் கையளித்தாள். சிரித்தமுகத்துடன் நகைகளை வாங்கிக் கொண்டு அவளை எதிரே அமரச் செய்தான். நகைகளில் ஒருவகைப் பவுடரைக் கலந்து 'இதனை முகத்தில் தடவிக் கொள்ளுங்கள்' என்று கொடுத்தான். அவளும் அவ்வாறே செய்தாள், அவ்வளவுதான் அவள் மயங்கிவிழ நகையும் கீழேவிழுந்தது. மறுகணம் நகைகளையும் உபகரணங்களையும் எடுத்துக் கொண்டவன் மறைந்தான் கண்விழித்தவள் பதறிப்போனாள்.

கலாபூஷணம் மாவனல்லை எம்.எம்.மன்ஸூர்

எழுதத் தூண்டும் எண்ணங்கள்

பேராசிரியர் துரை மனோகரன்

அபாய அறிவிப்பு!

நமது நாடு சுதந்திரத்துக்கு முன்னரும், அதன் பின்னரும் பேரினவாதம் என்னும் பெரும் அபாயத்துக்குள் அகப்பட்டுச் சுக்குநூறாகச் சிதறிக்கிடக்கிறது. பேரினவாதத்தை அணையாமல் வளர்த்தெடுப்பதில் பௌத்த தர்மத்தை வளர்க்கவேண்டிய மத குருமார்களும், அரசியல் தர்மத்தைக் கடைப் பிடிக்கவேண்டிய ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும், நியாயமாகக் கடமையாற்றவேண்டிய அதிகாரிகளும், நாட்டை நேர்மையாகப் பாதுகாக்கவேண்டிய காவல் மற்றும் பாதுகாப்புத்துறையினரும், தமது கல்வியறிவால் மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய கல்விமான்களும், தமது சொந்தச் சிந்தனையையும், பகுத்தறிவையும் பயன் படுத்தவேண்டிய பொதுமக்களும் போதிய பங்களிப்பைச் செய்துவருகின்றனர். இதுவே இன்று நாட்டுக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தி வருகிறது.

நாட்டின் தேசபிதா என்று பெரும்பான்மை மக்களால் போற்றப்படும் டி.எஸ். சேனநாயக்கா, கிழக்கில் கல்லோயாத் திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழ்ப்பிரதேசங்களைச் சிங்கள மயமாக்குவதிலும் பிதாவாகவே விளங்குகிறார். மலையக மக்களுக்கு எதிராக, அவர்களின் குடியுரிமையைப் பறித்ததிலும் அவர் பிதாவாகவே விளங்குகிறார். இத்தகைய பிதாமகன் காலத்தில் இருந்து, நாடு குட்டிச் சுவராவதற்கான காலம் பிறக்கத் தொடங்கிவிட்டிருந்தது.

அதன்பின்னர், 1956 இல் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, தமது அரசியல் இருப்புக்காகத் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்து, தமிழரின் மொழியுரிமைப் பறித்து, அதில் குளிர் காய முனைந்தார். அவரது மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கிழக்கில் மேலும் சிங்கள ஆதிக்கத்தைப் பலப்படுத்துமுகமாக 1960களில் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரித்து, அம்பாறை மாவட்டத்தை ஏற்படுத்தினார்.

டட்லி சேனநாயக்கா கனவான் போல் தம்மைப் பாவனை பண்ணி, கச்சிதமாகப் பேரினவாதத்தை வளர்த்தார். பேரினவாதமே ஓர் உருக்கொண்டால் போல் திகழ்ந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தமது முழு அதிகாரபலத்தையும் பயன்படுத்தி, தமிழ் மக்களின் அரசியல் பலத்தையும், பொருளாதார பலத்தையும் ஓரங்கட்ட முயற்சித்தார்.

பின்வந்தவர்களும் பேரினவாதப் போக்கிலேயே தமது ஆட்சியைப் பலப்படுத்திக் கொண்டனர். இவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளினால், பேரினவாதம் கிளைவிட்டுப் படர்ந்ததே தவிர, நன்மைகள் எதுவும் நாட்டுக்குக் கிடைக்கவில்லை. ஓர் அசகாய சூரன் போல் ஆட்சிக்கு வந்த ஒருவரும், நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டி, தம் குடும்பத்தையும், பேரினவாதத்தையும் வளர்த்துக் கொண்டாரே தவிர, நாட்டை வளர்க்கவில்லை.

இறுதியில் நல்லாட்சி என்று சொல்லிக் கொண்டு, தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும் பான்மை வாக்குகளால் வந்தவர்களும் கூடப் பொல்லா ஆட்சியைத் தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாட்டின் ஆட்சியாளர்கள் எல்லோருமே, தங்கள் தங்கள் காலத்தில் பேரினவாதத்தை வளர்த்தெடுப்பதை ஒரு புண்ணியமான கைங்கரியமாகவே கருதி வந்துள்ளமை தெளிவாகிறது. அதுவும், தற்போதைய 'நல்லாட்சி'க் காலத்தில் பேரினவாதம் என்னும் பேராறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. ஆட்சியாளர்களின் மறைமுக ஆசிகளுடன், தங்குதடை இன்றிப் பெரு விருட்சமாகப் பேரினவாதம் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கிறது.

பௌத்த தர்மத்தைப் போதித்து, நாட்டின் அறங்காவலர்களாகத் திகழவேண்டிய மதகுருமார்கள், அருவருப்பான இனவாத, மதவாதக் கருத்துகளை வெளியிட்டு, நாட்டையே சீரழித்து வருகின்றனர். முன்னரே நாட்டில் இத்தகைய நிலை இருந்துவந்துள்ளபோதிலும், அது தற்போது பெருவளர்ச்சி பெற்றுள்ளது. மதகுருமாரும், மதபீடாதிபதிகளும் அரசுகளின் சுக்கான் தமது கரங்களில்தான்

என்பதுபோல நடந்துகொள்கின்றனர். கடந்த ஆட்சிக்காலத்தில் இருந்து, அவர்கள் அளவுக்கு மீறி அரசியலில் அத்துமீறி நடக்கத் தொடங்கியுள்ளனர். ஆளுக்கொரு பேரினவாத இயக்கத்தையும் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

இவர்களுக்கு எல்லாம் முடிசூடாமன்னராக ஒருவர் இருந்து கொண்டிருக்கிறார். கூண்டில் அடைபட்ட சிங்கம் ஒன்று வெளியிலே விடப்பட்டது போன்று அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். தன்னிச்சையாகவே அவர் முடிவெடுத்துத் தான்தோன்றித்தனமாகப் பேசிக்கொண்டு திரிகின்றார். தர்மோபதேசம் செய்யவேண்டிய தமது வாயால், தவறான கருத்துகளையே பெரும்பான்மை மக்கள் மத்தியில் பரப்பிவருகிறார். இத்தகையவர்களை ஆதரிக்கும் கூட்டம் ஒன்றும் நாட்டில் இருந்து வருகிறது. இத்தகையவர்களின் வளர்ச்சி, நாட்டுக்கு ஓர் அபாய அறிவிப்பு.

நமது நாடு முழுவதையும் சிங்களப் பௌத்தமயம் ஆக்குவதே, பேரினவாதிகளின் ஒரே ஒரு குறிக்கோள். இந்துக்கோயில்கள் உள்ள இடங்களையும், தமிழரின் பூர்வீக வாழிடங்களையும் கபளீகரம் செய்வதற்கான முயற்சிகள் பேரினவாதிகளால் படுவேகத்தில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவற்றின் உச்சக் கட்டமாக அண்மையில் தென்கைலை ஆதீன முதல்வரின் மீது எச்சில் படுத்தப்பட்ட சுடு தேநீர், காவலர்களின் முன்னிலையிலேயே ஊற்றப் பட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இது, எதிர்காலத்தில் பேரினவாதிகள் எவ்வாறு செயல்படப்போகிறார்கள் என்பதற்கான ஓர் ஒத்திகையாகவும், தமிழ்மக்களுக்கு எதிரான ஓர் அபாய அறிவிப்பாகவுமே விளங்குகிறது.

நாட்டின் ஆட்சியாளர்கள் இத்தகைய வர்களைக் கண்டுகொள்வதில்லை. இத்தகை யவர்களின் ஆதரவு இன்றித் தம்மால் ஆட்சி செய்ய முடியாது என்ற அச்ச உணர்வே இதற்குக் காரணம் எனலாம். பொதுவாகத் தற்போது ஆட்சியாளர்களின் முதுகெலும்பு பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொட்டே ஆட்சியாளர்களின் முதுகெலும்பு மறைந்துபோய்விட்டது என்பதே மறக்கமுடியாத உண்மை. அதனால், பேரின வாதத்துக்கு வளைந்து நெளிந்து, கூனிக் குறுகி ஆட்சி செய்வதே ஆட்சியாளர்களின் வழமையாகவும், பெருமையாகவும் ஆகி விட்டது.

இன்றைய நிலையில், பேரினவாதம் அடக்கமுடியாத விஷப்பாம்பாக விஸ்வரூபம் எடுத்து ஆடிக்கொண்டிருக்கிறது. அதைப் பாலூற்றி வளர்ப்பதில் அரசாங்க, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் போட்டிபோட்டுக்கொண்டு செயல்படுகிறார்கள். கடந்த காலங்களில் வெள்ளை 'வான்களை' விளையாட்டுப் பொருட்களாகப் பயன்படுத்திய விற்பன்னர் ஒருவர், அடுத்த முக்கிய ஒரு தேர்தலில் போட்டியிட்டு வெல்வதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குகிறார். அவருக்குப் பலத்த ஆதரவாளர்களாக ஒரு சாராரும், கடும் எதிர்ப்பாளர்களாக இன்னொரு சாராரும் செயல்படுகின்றனர். அவர் தேர்தலில் போட்டியிட முன்வந்தால், அது சிறுபான்மை யினருக்கு ஓர் அபாய அறிவிப்பு.

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?

இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, தனிப்பெரும் கட்சியாகத் தன்னை வளர்த்துக்கொண்டது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மக்களும் அக்கட்சியை நம்பி நம்பி, தேர்தல்கள்தோறும் வாக்குகளை அள்ளியள்ளி வழங்கிவந்தார்கள். ஆனால், காலப்போக்கில் அக்கட்சி தன்னை வளர்த்துக்கொள்வதில் காட்டிய ஆர்வத்தை, தமிழ்மக்கள் தொடர்பாகக் காட்டுவதைக் குறைத்துக்கொண்டு வந்துள்ளது. தமிழ் மக்களை விடத் தனது அரசியல் வட்டாரத்தின் நட்பைப் பாராட்டுவதையே தனது பெரும் அரசியல் கொள்கையாக அது வரிக்கத் தொடங்கியது. அதனால், தான் உயிர்மூச்சாகக் கொண்டிருந்த கொள்கைகளை எல்லாம் மெதுமெதுவாகக் காற்றில் பறக்கவிடத் தொடங்கியது. இப்போது அக்கட்சியும் கொள்கை ஒன்றில்லாத முஸ்லிம் கட்சிகளைப் போலச் சந்தர்ப்பவாதக் கட்சியாக மாறத் தொடங்கிவிட்டது.

பல்வேறு வாக்குறுதிகளைத் தந்து, தேர்தல் மேடைகளில் வீரபுருஷர்களைப் போல் பேசி மயக்கிவிட்டு, இன்று மக்கள் முன் என்ன சொல்வது என்று தெரியாமல் அக்கட்சி விழிபிதுங்கி நிற்கிறது. தமிழ் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் நில அபகரிப்புப் பிரச்சினை, பறிக்கப்பட்ட காணிகளை மீளப் பெறமுயாத பிரச்சினை, காணாமல் ஆக்கப் பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, வடக்கு கிழக்கைச் சிங்களப் பௌத்த மயமாக்கல் பிரச்சினை என எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமல், அரசியல் துறவு வேஷத்தில் காட்சி யளிக்கிறது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. நாடாளுமன்றத்திலும், பொதுமேடைகளிலும்

உணர்ச்சிமயமாக அரசாங்கத்தை விமர்சித்துப் பேசிவிட்டு, இதுவே அதிகம் என்ற தோரணையில், அமைதி காக்கிறது, அக்கட்சி. அரசியல் விட்டுக்கொடுப்புக்கு அகில உலகரீதியாக ஒரு விருது வழங்க வேண்டு மானால், அதற்கு முற்றுமுழுதாகத் தகுதி வாய்ந்தது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே.

கூட்டமைப்பின் தலைமை, இன்று தனது சொந்தத் தொகுதியிலேயே சிங்களப் பௌத்த மயமாக்கல் பிரச்சினையைத் தடுத்து நிறுத்த முடியாமல் தயங்கித் தடுமாறுகிறது. இவ்வாறு வடக்கு - கிழக்கில் எத்தனையோ பிரச்சினைகள் கூட்டமைப்பின் கையாலாகாத்தனத்தால் தலைவிரிகோலத்தில் காணப்படுகின்றன. இத்தனைக்கும், இன்றைய அரசைப் பல்வேறு கண்டங்களில் இருந்தும் பாதுகாத்து, அதனை வாழவைப்பதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான். அரசை வாழவைக்கத் தெரிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, தமிழ் மக்களை வாழவைக்கத் தெரியவில்லை என்பது ஆச்சரியமே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இன்னொரு போக்கு, தமிழ் மக்களுக்குத் தாங்களும் முன்வந்து எதுவும் செய்ய மாட்டார்கள். வேறு யாரும் எதுவும் செய்வத னையும் விரும்பமாட்டார்கள் என்பது. கன்னியா விவகாரம் இதனை நூறுவீதம் நிரூபித்து விட்டது. கன்னியா விவகாரம் தொடர்பாக, அமைச்சர் மனோ கணேசன் முயற்சியால் ஜனாதிபதி தலைமையில் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுத்தி ருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தமிழ் மக்கள் தொடர்பான அந்த முக்கிய சந்திப்பில், கூட்டமைப்பைச் சேர்ந்த எவரும் கலந்துகொள்ளாததோடு, ஆளுக்கு ஒரு காரணத்தைக் கூறித் தப்பிக் கொண்டி ருக்கின்றனர். ஜனாதிபதி கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வரவில்லையா என்று விசாரித்திருக்கிறார். அமைச்சர் மனோ கணேசன் தமிழ் மக்கள் தொடர்பாகப் பல கோரிக்கைகளை முன்வைத்ததோடு, அவை ஏற்றுக்கொள்ளவும்பட்டன. உண்மையில், அந்தச் சந்திப்பில் கூட்டமைப்பினர் சாக்குப் போக்குச் சொல்லாமல் நிச்சயம் கலந்து கொண்டிருக்கவேண்டும். யார் குற்றினாலும் அரிசியாக வேண்டும் என்ற நல்லெண்ணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சிறிதும் இல்லை என்பதை, இச்சம்பவம் பட்ட வர்த்தனமாகத் தெரிவித்துவிட்டது. எல்லாப் புகழும் அமைச்சர் மனோ கணேசனுக்குப் போய்விடக்கூடாது என்பதில் தான் கூட்ட மைப்பினர் குறியாய் இருந்தனரே தவிர, தமிழ் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதில் எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை.

அரசுக்கு ஆதரவு கொடுக்கத் தெரிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, தமிழ் மக்கள் விடயத்தில் அழுத்தம் கொடுக்கத் தெரிய வில்லை. இதற்கு மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் தலையில் தூ க்கிக் கொண்டாடுவது என்பது, அவர்களது ஏமாளித்தனத்தைத் தான் புலப்படுத்தும். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்?

நேத்ரா – என்ன நியாயம்?

இலங்கையின் அரச தொலைக்காட்சியின் தமிழ் அலைவரிசையான நேத்ரா, நல்ல பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிவருகிறது. செய்தி வாசிப்பாளர்களில் ஓர் ஆணைத் தவிர, மற்ற வர்கள் பொதுவாகத் திறமையானவர்கள் (குறிப்பிட்ட அவர் எவ்வாறு செய்தி வாசிப் புக்குத் தெரிவானார் என்பது ஆச்சரியமே). ஆனால், ஒரு முக்கியமான குறையை நேத்ரா நிர்வாகிகள் கவனத்தில் கொள்வதே இல்லை. பெரும்பான்மை அரசியல்வாதிகளோ, பிற நாட்டவரோ பல்வேறு நிகழ்ச்சிகளில் பேசும்போது, சாட்டுக்காக அவர்களின் சில வார்த்தைகளை மட்டும் மொழிபெயர்த்து விட்டு, நேத்ராவின் நிர்வாகிகள் நிம்மதி கொள் கின்றனர். சாதாரண தமிழ், முஸ்லிம் மக்கள் முழுச்செய்தியையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் நிர்வாகி கள் அக்கறை காட்டுவதில்லை. நீண்ட காலமாக இந்த நிலை தொடர்கிறது. இது நிச்சயமாக நிர்வாகி களின் சோம்பேறித்தனத்தையே காட்டு கிறது.

விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு என்று 'ஐ' என்ற அலைவரிசை தனியாக இருக்கிறது. ஆனால், கிரிக்கெட் போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கும், தமிழ், முஸ்லிம் மக்கள் பார்க்கும் நேத்ரா அலைவரிசையையும் பயன் படுத்தி, அவர்கள் வழமையாகப் பார்க்கும் நிகழ்ச்சிகளை அவ்வப்போது தடுப்பது என்ன நியாயம்?

❍❍❍

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

சம காலக் கலை இலக்கிய நிகழ்வுகள்

இலங்கை கம்பன் கழகத்தின் இசையரங்கு

இலங்கைக் கம்பன் கழகத்தினரின் மாதாந்த இசையரங்கு நிகழ்வு 16-06-2019 அன்று கம்பன் கோட்டத்தில் அமைந்துள்ள கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந் தலைவர் மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன் தம்பதியர் மங்கலவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்தனர். சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு.அனந்த பாலகிட்னர் தலைமையுரை ஆற்றினார். தொடர்ந்து செல்வி வைஷாலி யோகராஜனின் பாட்டுக் கச்சேரி இடம்பெற்றது. பக்க வாத்தியக் கலைஞர்களாக கலாவித்தகர் திருமதி மதுரா பாலச்சந்திரன் (வயலின்), திரு. அம்பல வாணர் ரகுநாதன் (மிருதங்கம்) ஆகியோர் பங்குகொண்டனர். பெருந்தொகையான இசை இரசிகர்களை மகிழ்வித்த இந்நிகழ்வின் நிறைவில் பங்குகொண்ட இசைக் கலைஞர்களையும் இசையரங்கை ஒழுங்கு செய்த கம்பன் கழகத்தினரின் பணியையும் பலரும் பாராட்டினர்.

●●●

கொழும்புத் தமிழ்ச்சங்க அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வு 17-07-2019 அன்று சங்கரப்பிள்ளை மண்டத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் 'பாதாள இணையம்' என்ற பொருளில் திரு. ஞானம் பாலச்சந்திரன் (டயலொக் - தலைவர், கணினி பாதுகாப்பு) உரையாற்றினார். காணொளி விளக்கங்களுடன் அவரது உரை இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு புனித ஜோசப் கல்லூரி ஆசிரியர் திரு.இ. மதிசுதன் தலைமை வகித்தார்.

●●●

வாசகர் பேசுகிறார்

20ஆவது அகவையின் இளமையின் பொலிவுடன் திகழும் ஞானம் இதழுக்கு இதயங்கனிந்த வாழ்த்துக்கள். 229ஆவது இதழ் பார்த்தேன் மிக்க மகிழ்ச்சி.

குரு அரவிந்தன் பற்றிய தங்களின் நேர்காணல் மிகவும் மனநிறைவைத் தந்தது. இவ்வளவு பெருமைகளைக் கொண்ட அவர் பற்றி அறியத் தந்த தங்களுக்கும் ஞானத்துக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். அவரது பணியும், பெருமையும் வளரட்டும் என வாழ்த்துகின்றேன். கலைஞானவாரிதி கண மகேஸ்வரன் பற்றிய ஆக்கத்தைத் தந்த ச.முருகானந்தன் அவர்களுக்கும் நன்றிகள்! 1980களில் கண மகேஸ்வரன் அவர்கள் வெளியிட்ட 'தாரகை' இதழில் நடத்திய கவிதைப் போட்டியில் நானும் எழுதி முதற்பரிசு பெற்றமை இன்றும் நினைவில் உள்ளது. மட்டக்களப்புக்குச் சென்று அவரைச் சந்தித்த அந்தச் சிறுபொழுதில் அவரது உரையாடல் பண்புடன் கூடிய நட்புறவுச் சேர்மானம் என்றும் மறக்கமுடியாதவை. தற்சமயம் நோய்வாய்ப்பட்டிருக்கின்றார் என்பது கவலையளிப்பதாக உள்ளது. அவரது முகவரியைத் தந்துதவினால் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

வழமையான ஞானம் இதழ் சிறுகதைகள் கவிதைகள் ஏனைய ஆக்கங்களுடன் நன்றாகவே கனக்கிறது, நன்றிகள், வாழ்த்துக்கள்.

– கலாபூஷணம் நிலாதமிழின்தாசன்

●●●

தங்களுடைய ஞானம் இதழை அண்மையில் பார்க்கக் கிடைத்தது நன்றி. அதில் கண.மகேஸ்வரனின் உடல்நிலை பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்தது. அதைப் பார்த்து மிகவும் வருந்துகிறேன். அவருடைய விலாசம் அதில் இல்லை. அதனால் என்னால் அவருடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியவில்லை. முடிந்தால் என்னைப் பற்றிய செய்தியை அவருக்கு அறிவியுங்கள். அல்லது அவருடைய விலாசத்தை எனக்கு அறிவிக்குமாறு கேட்கின்றேன்.

அந்தப் பத்திரிகையிலே தாரகை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. 80களில் அன்புமணி போன்றவர்களின் ஆலோசனையுடன் தாரகை தொடங்கியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையிலே அந்தப் பத்திரிகையை ஆரம்பித்தவன் நானேதான். அவர் உதவியாக இருந்தவர். முதல் இரு இதழ்களும் என்னால் நடாத்தப்பட்டது. பின்பு எனக்கு அம்பாறைக்கு இடமாற்றம் கிடைத்தபடியினால் பொறுப்புக்களை அவரிடம் ஒப்படைத்திருந்தேன். அந்த முதல் இரண்டு இதழ்களையும் ஆராய்ந்து பார்ப்பீர்களேயானால் ஆசிரியர் சி.சங்கரப்பிள்ளை என்றிருக்கும். இது உங்களின் தகவலுக்கு.

– சி.சங்கரப்பிள்ளை.

●●●

ஜூலை 2019 ஞானம் இதழில், பிரமிளா பிரதீபனின் கதை படித்தேன். அரச மரத்தைக் குறியீடாக வைத்து பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். நல்ல கதை. வாழ்த்துக்கள். அவர் தொடர்ந்து எழுதவேண்டும்.

–ஆசி கந்தராஜா. சிட்னி, ஆஸ்திரேலியா.

●●●

நூலகர் என். செல்வராஜாவின் கனடா விஜயம்

நூலகர் என் செல்வராஜா ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் 13.09.2019 வரை கனடாவில் தங்கியிருந்து நூல்தேட்டம் தொகுதிகளுக்காக கனேடிய தமிழ் நூல்களைப் பதிவுசெய்யும் பணியிலும், ஆவணக்காப்பகத்திற்கான நூல் சேகரிப்புப் பணியிலும் ஈடுபடவிருக்கின்றார். டொரன்டோவில் தங்கியிருக்கும் வேளையில் எழுத்தாளர் சந்திப்புகளை யாராவது ஒழுங்கு செய்தால் அதில் கலந்துரையாடுவதற்கும் அவர் தயாராகவுள்ளார். கனடா வாழ் எழுத்தாளர்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் என். செல்வராஜாவின் மின்னஞ்சல் முகவரி Nooltheftam.ns@gmail.com

பிரமிளா பிரதீபனின் 'அரசமரமும் சிலவெளவால்களும்' சிறுகதை மனதில் பெரும் பிரமிப்பைப் தந்தது. இந்தக் கதை ஆழமான உட்பொருளைக் குறியீடாகக் கொண்டுள்ளது.

அகிம்சையும், அன்பின் அழகும் கொண்ட பௌத்தமதம் தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப் படுகிறது. அதன் நற்சிந்தனைகளை உண்மையான மனதுடன் கடைப்பிடிக்கும் மேன்மக்களும் உள்ளனர்.

எனினும் அதன் புனிதத்துவத்தை அறியாது ஆக்கிரமிப்புக்கு பயன்படுத்தி கீழ்மைப்படுத்தும் மன இருண்மை சூழ்ந்த பேரின மதவாதிகளை அவர்கள் வெறுக்கின்றனர். அதுவே புனிதமான பௌத்த தர்மத்தின் மீதான வெறுப்பாக திரிபு அடைவதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்குகின்றது. ஆயினும் காலத்தின் கட்டாயத்தால் சிறுபான்மையினர் இந்த நிலையினை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் வாழ்கின்றனர். காலப்போக்கில் இசைவாக்கமும் அடைந்து விடுகின்றனர். இனவாத அரசியல் தந்திரோபாயத்தின் நோக்கமும் அதுவே ஆகும்.

இதைச் சிறுகதை என்று சொல்வதை விட இலங்கை வரலாற்றின் பெருங்கதை எனவே கூறலாம். 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்னும் இடைக்காடரின் மொழி மனதிலே... கதையைப் படைத்தவருக்கு மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

– ரஞ்ஜனி சுப்ரமணியம், கொழும்பு

●●●

பிரமிளா பிரதீபனின் ஒரு அரசமரமும் சில வெளவால்களும் சிறுகதை மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு வளவின் பெருமரத்தின் காவியம் விரிகிறது. அரசமரம் தரும் நிழலையும் குளிர்மையையும் இலைகளின் நரம்புகள் சொரியும் கனவுகளையும் அணுவணுவாக ரசித்து ரசித்து சொல்லியிருந்தார். அதே நேரம் அந்த மரத்தினால் தொல்லைகளும் இருக்கவே செய்கின்றன. இலைகள் கொட்டுவதால் கையொடிய கூட்ட நேர்வதும், பழங்கள் விழுந்து துர்மணம் வீசுவதும், பறவைகளின் எச்சம் முற்றத்தை அசிங்கப்படுத்துவதும் சகிக்க முடியாதளவுக்கு தொல்லையாகிறது. வீட்டில் மூன்று மாமரங்கள் நிற்பதால் மரத்தின் சுகத்தையும் துன்பத்தையும் அனுபவபூர்வமாக உணர்ந்த எனக்கு அவரது வர்ணிப்பு மாம்பழமாக இனித்தது.

ஆக்கிரமிப்புத் தொல்லைகளால் அரசமரம் மீது எம்மிடையே திணிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படக் கூடிய கசப்புணர்வோ வன்மமோ கதையில் தலைகாட்டதவாறு அழகாகச் சொல்லியிருக்கிறார். அழகுணர்வோடு சொல்லப்பட்டபோதும் அதில் மிக மென்மையானதொரு குறியீடு இருக்கிறது. வாசகனுக்கு உறுத்தாத குறியீடு. ரசித்து வாசித்தேன்.

"நூலகங்கள் என்றுமே சுவடிக் காப்பகங்களாக இருப்பதில்லை" இதுதான் என்.செல்வராஜா எழுதிய கட்டுரையின் மிக முக்கியமான கருத்தாக இருக்க முடியும். ஒவ்வொரு எழுத்தாளனும் கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்து. ஒவ்வொரு எழுத்தாளனுமே தனது படைப்பானது காலத்தைக் கடந்து அடுத்த அடுத்த தலைமுறைகளுக்கு எட்டவேண்டும் என்ற அவாவில்தான்

கண்ணீர் அஞ்சலி

கண.மகேஸ்வரன்

பிரபல எழுத்தாளர் கண.மகேஸ்வரன் அவர்கள் 24-07-2019 அன்று அமரரானார் என்ற செய்தி இலக்கிய உலகைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.இவர் சிறுகதை, கவிதை, குறுநாவல், குறுங்கதை, கட்டுரை, இதழியல் ஆகிய துறைகளில் தடம்பதித்தவர். எழுபதுகளில் இலக்கியத்துறையில் கால்பதித்த இவரது முதலாவது சிறுகதை சிரித்திரனில் பிரசுரமானது. இவரது படைப்புகளாக பல சிறுகதைகள், மூன்று குறுநாவல்கள், எழுபது குறுங்கதைகள், எண்ணற்ற கவிதைகள், ஏராளமான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவர் தாரகை என்ற சஞ்சிகையை சிலகாலம் வெளியிட்டவர். 'எல்லைவேம்பு', 'தீர்வுதேடும் நியாயங்கள்', ஆகியன இவரது சிறுகதைத்தொகுதிகளாகும். ஞானம் சஞ்சிகையின் பத்தாவது இதழில் 'வாஞ்சை' என்ற சிறுகதையை எழுதியதன் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திய இவர், பல சிறுகதைகள், கவிதைகளை ஞானத்தில் எழுதியுள்ளார். ஞானம் 229ஆவது இதழில் இவர் அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கப்பட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

நூலகங்களுக்கு கொடுக்கிறான். “பொதுநூலகங்களில் பாவனையில் இல்லாத நூல்களை அப்புறப்படுத்தி ஏலத்தில் விடுவதொன்றும் புதிய செய்தியல்ல” என்பது எமக்கு புதிய செய்திதான். எனவே ஆவணக் காப்பகங்களுக்கும் கொடுங்கள் என்பதே அவர் சொல்லும் ஆலோசனை. கவனத்தில் கொள்ளுங்கள் எழுத்தாளர்களே.

முஸ்டீனின் “தீவிரவாதம் பயங்கரவாதமாகி நுழைந்த ஓட்டை” பல புரிதல்களை ஏற்படுத்திய அருயான கட்டுரை. **– எம்.கே.முருகானந்தன்**

●●●

ஞானம் 230ஆவது இதழில் என். செல்வராஜா அவர்கள் தனது துறை சார்ந்து தான் பெற்ற அனுபவ அறிவின்வழி நின்று சிறந்த கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.இன்றைய நிலையில் நமது மொழி, கலை, கலாசாரம் இலக்கியம் அனைத்தும் மறைமுகமாகக் காவுகொள்ளப்படவைக்கும் நோக்கோடு அரசாங்கம் காய் நகர்த்த அது பற்றி அறியாது நமது அரசியல் வாதிகளும் அரச ஊழியர்களும் வாய்பேசாது அதற்கு ஒத்துப்போவதுபோல நடந்து கொள்வதை மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். இந்தப் பேராபத்திலிருந்து நாம் தப்பவேண்டுமானால் அவர்கூறும் “தமது ஆவணச் சேர்க்கைகளை ஒரு மத்திய மயப்படுத்தப்பட்ட கணினி மயப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட பட்டியலாக்கத்தின் மூலம் தம்மை ஈழத்துத் தமிழ்த் தேசிய சுவடிக் காப்பகமாக இணைத்துக் கொள்ளலாம்” என்று அவர் கூறிச்செல்லும் பலவற்றை நாம்செயற்படுத்த முன்வரவேண்டும். இது மிகமுக்கியமானது. **– மு.பொ. கொழும்பு**

●●●

பிரமிளா பிரதீபன் கதை சொல்லும் நேர்த்தி பிரமிப்பைத் தருகிறது. (ஞானம்230) அரசமரத்து இலைகளின் வனப்பு, ஆக்கிரமிப்பாளரின் அட்டகாசம், காவிகளின் கபடம் என்பன கலந்த கலவை, விகிதாசாரம் வேறுபட்டாலும் கலகம் பிறக்கிறது. வாழ்த்துக்கள். சில்லறைத் தனத்தைக்காட்டும் கொற்றை பி. கிருஷ்ணானந்தனின் கிண்டலும் வழமைபோலச் சிரிப்பூட்டத் தவறவில்லை.

வே.தில்லைநாதன், திருகோணமலை.

●●●

தீவிரவாதம் பயங்கரவாதமாகி நுழைந்த ஓட்டை என்ற தலைப்பில் முஸ்டீன் எழுதிய ஆய்வு ரீதியான கட்டுரை பல விடயங்களை வெளிப்படுத்தி சிந்திக்கவைக்கிறது. முஸ்டீனுக்கு எனது வாழ்த்துக்கள். பேராசிரியர் சந்திரசேகரம் எழுதும் ஆங்கில நாவல்கள் தொடர்பான அறிமுகக் கட்டுரைகள் பயனுள்ளவை. அந்த நாவல்களை எங்கே வாங்கலாம் என்ற தகவல்களையும் தந்தால் வாசகர்களுக்கு மேலும் பயனுள்ளதாக அமையும்.

மு. மாணிக்கவாசகர், சாவகச்சேரி

●●●

கண்ணீர் அஞ்சலி

உபாலி லீலாரட்ன

சிங்கள தமிழ் உறவுக்குப் பாலமாக அமைந்தவரான உபாலி லீலாரட்ன சமீபத்தில் காலமானார் என்ற செய்தி சிங்கள தமிழ் எழுத்தாளர்கள்மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சிரித்த முகத்துடன் யாவருடனும் அன்பாகவும் கனிவாகவும் பேசும் பண்பினராகத் திகழ்ந்தவர் உபாலி. 35க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட இவர், 23 தமிழ்மொழி நூல்களை சிங்கள மொழியில் மொழிபெயர்த்தவர். பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் வெளியீட்டுப் பிரிவில் முக்கிய பதவி வகித்தவர் .இவர் பல தமிழகப் படைப்பாளிகளின் படைப்புகளை தமிழுக்கு மொழிபெயர்த்திருக்கிறார். இலங்கைப் படைப்பாளிகளான மலரன்பன், ஈழத்துச்சோமு,இரா உதயணன், டென்மார்க் ஜீவகுமாரன், திருமதி கலாநிதி ஜீவகுமாரன், ஆசி கந்தராஜா ஆகியோரது படைப்புகளை மொழிபெயர்த்துள்ளார். இவர் நான்கு நாவல்களை எழுதியுள்ளார்.இவற்றுள் ‘பினிவந்தலாவ’ என்ற நாவல் மலையக மக்களின் வாழ்வியலை பின்னணியாகக்கொண்டது. மொழிபெயர்ப்புக்காக இலங்கை அரச இலக்கியச் சான்றிதழ், தமிழ்நாடு நல்லி திசை எட்டும்விருது, நாமக்கல் கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது ஆகியவற்றைப்பெற்றவர். ஞானம் 170ஆவது இதழில் (ஜூலை 2014) இவர் அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கப்பட்டார். அன்னாரின் ஆத்மாசாந்தியடைவதாக.